தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௭	பிரசோற்பத்தி, வைகாசி, ஆனி.	மலர் ௨, ௩.

மூவர் தமிழ்.

(ஆராய்ச்சி)

II. தமிழ் மறை.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
தலைமையாசிரியர், போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், குடவாசல்.

(முற்றொடர்ச்சி துணர் 6. பக்கம் 391.)

V

இவ்வாறு பிறப்பினொலொருவாறொருத்தும், தமிழ் கூறு நல்லுலகத்து வழங்கியும் வருகின்ற தமிழ்மறை, ஆரியமறை யாகிய இவ்விரு மறைகளையுஞ் சீர்தூக்கி ஆராய்வாம்.

1. முற்காட்டியவண்ணம் இறைவனே இவ்விரு மறைகளையும் இயற்றுவித்திருப்பினும், தமிழ் மறையை உயிர்ச் செயல் (சிவபோதம்) ஒடுங்கி இறைச்செயல் (சிவபோதம்) மேவிட்ட அடியார்களாலியற்றுவித்ததுபோல் ஆரிய மறையை இயற்றுவிக்கவில்லை. ஆரியமறையை இயற்றிய விண்ணவர்களும், மண்ணவர்களும் அழுக்கற்றவர்களலராதலானும், 'சிறு இறையறிவு (பதிஞானம்) உறாதவர்களாதலினாலும், 'சிறு தெய்வங்களை'ச் சேர்ந்தொழுகியோராதலினாலும், அச் 'சிறு

தெய்வங்கள்' இறைவனது எண்ணிறந்த ஆற்றல்களில் (சக்திகளில்) ஒவ்வொன்றேனும் அவற்றிற் கடிப்படையாம் அம்முழுமுதலையே நேரில் வணங்கியெய்தும் பயனை அளிக்கமாட்டாவாகையினாலும் இவற்றிற்கு நேர் மாறுபாடான பண்புகளையுடைய முத்தமிழியற்றிய மூவர்களுக் கீடாகார். ஆரிய மறையின் அறிவுப் பங்காகிய 'உபநிடதங்களைத்'த் தொகுத்து 'முனி மொழி' யென்றழைக்கப்படுகிற. வியாச சூத்தத்தை யியற்றிய வியாசருக்கும் இறையறிவு உண்டாகவில்லையெனின் அவ்வுபநிடதங்களையும் ஏனைய வேதப்பங்குகளையும் இயற்றியவர்களைப்பற்றி அதிலிருந்து உய்த்துணர்க. இவ்வாறு முற்றுணர்வில்லா முனிவர்களைக் கொண்டு இறைவன் வேதங்களை இயற்றுவித்தது இழுக்கன்றோவெனின்,

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் *

ஆகிய ஆளுடைய பிள்ளையாரடைந்த நால்வகை அறிவுகளுள் ஒன்றாகிய அறிபொருள்கள் கலை என்பவற்றுள் வேதம் சிறந்ததாயினும் அறுபத்து நான்கனுள் ஒன்றே யாதலானும், அது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுமே வேள்வியால் அடைவித்தற் கடியாமாதலானும், அது வீட்டு நெறியை ஒப்பிற்காகக் கூறும்பொழுதும்,

"பூதங்களல்ல, பொறியல்ல, வேறுபுலனல்ல, உள்ளமதியின் பேதங்களல்ல, இவையன்றி நின்ற பிறிதல்ல, என்றுபெருநூல் வேதங்கிடந்து தடுமாறும்" †
என்றபடி

எதிர்க்கொள்கைகள் (பூர்வபக்கம்) யாவற்றையும் கூறிப்பின் மறுத்துச்செல்லும் பண்புடையதாதலானும், இறைவன் "இம்மறையாலும் அறிய வொண்ணக்கலையான்" ‡ ஆவதன்றி "ஒ

* திருஞானசம்பந்தர் புராணம்-89-வது பாட்டு.

† திருவிளையாடற் புராணம்—நான் மாடக் கூடலான படலம் 1-வது பாட்டு.

‡ திருநாவுக்கரசு-திருத்தாண்டகம்-திருஓமமாம் புலியூர் 7வது பாட்டு

வாய் மறைகள் தேரு ஒருவன்" * ஆதலானும் இழுக்கன்றும். ஆனால் மேற்காட்டிய 'சிவஞானம், முதலிய நான்குவகை 'ஞானத்தையும்' உணர்த்துவதோடு நில்லாது அறமாதி நாற்பயனையும் எய்துவிப்பது மூவர் தமிழொன்றே யாதலின் அதனை இயற்ற அளவிடுவதற்கரிய பெருமையுடைய அடியார்களே வேண்டுவதாயிற்று. அன்னார் பேராசிரியர் மணிவாசகனாரைக் குறித்தபடி அறிவாற் சிவமேயாயினாராத லினாலும்,

> கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
> எண்ணும்விழி ஏழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
> அநந்தந் தவத்தால் அருள்ஞானம் பெற்றார்க்கு
> அநந்தம் விழியென் றறி

என்றபடி எண்ணிறந்த விழியால் எல்லா வற்றையும் உணரும் ஆற்றலுடையோராதலினாலும், உண்மையாக உமாபதி சிவங் கூறியுள்ளபடி "திருப்பதிகம் பாடும் மூவரும் ஒருமுதலாய் முளைத்த முதற் பொருள்தாம்" † ஆதலினாலும் அவரியற்றி யுள்ள நூலும் முதனூலாயிற்று. 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்' என்றபடி, இவ்வாறு 'ஊன மொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்களால்' இயற்றப்பட்ட தமிழ் மறையின் உயர்வு ஆரிய மறைச்கு அத்துணையிலதென்பது அறியத்தகுந்ததே.

2. இரண்டாவதாக இவ்விரு மறைகளும் ஒலிப்பெருமை நிறைந்திருப்பதால் ஓதியோர்க்குத் தக்கபயனை எளிதில் பயப்பனவாகும். இவ்வொலிப் பெருமையிலும் தேவாரமே மிக்கதென்பதை

> வேத மோதின் விழிநீர் பெருக்கி
> நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேன்

ஆனால் தேவாரத்தை உருக்கத்திலும் அன்பிலும் ஒக்கும்

---

* திருவிளையாடற் புராணம்-திருவாலவாயான படலம் 3 வது பாட்டு.

† சேக்கிழார் புராணம் 89 வது பாட்டு.

“ திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே ”* என்று கூறிய உயர்

மொழியே உறுதிப்படுத்தும். இவையன்றித் தேவாரம் இன்னிசையுடன் பொருந்திக் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய், செவிக்கு இனிய உணவாய், உள்ளத்திற்கும் மூவா மருந்தாய் செம்பொருள் செறிந்து விளங்குகிறது. இத்தகைப் பெருமையொன்றும் இல்லாத வேதம் தமிழுக் ‘கருகமில்லாத’ மாத்திரையாலே திகழும் என்பதற்குச் சான்றாக

இருவிதஞ் சந்த மிவற்றொன் றெழுத்தா விலங்குமற்றை
யொருவித மாத்திரை யாலே யொளிருமிது
பொருவரி தாகிய வாரியத் துண்டு பொதியமென்று
மருவரை மாதவன் கூறுந்தமிழுக் கருகமன்றே

என்னும் பாட்டொன்று பாடி இகழ்வோர், அப் ‘பூசுரர்வேதம்’ யாவருமோதற் ‘கருக’ மின்றி ‘மட்கல நிகர்க்கும்’ என்பதையும்

“ மதுரவாசகம்
யாவரு மோது மியற்கைத் தாகலின்
பொற்கல நிகர்க்கும் ”† என்பதையுங்

கற்றுணர்ந் தடங்குவாராக. இவையன்றி வேதத்தின் ஒரு பங்காகிய சுக்கில யசுர்வேதத்தை ஓதுவோர் உச்சிப்பொழுதிற் புலைமை (மத்தியான சண்டாளத்துவம்) அடைவாராதலானும் ஏனைய பங்குகளை ஒலிமாறி ஓதுவோர் துவட்டாவைப்போல் துன்புறுவாராதலினானும் அதன் தன்மை பாம்பொடு பழகுதலொக்கும். ஆனால் தேவாரத்தை, இசைப் பொலிவும், இனிமையும் நிறைந்த தேவாரத்தை, “கோழை மிடறாகக், கவி கோளுமிலவாக, இசைகூடும் வகையால்—ஏழையடியாரவர்கள்

---

* நால்வர் நான் மணிமாலை 4-வது பாட்டு
† ௸ 32 ,,

யாவைசொன சொன்மகிழும்'' இறைவனைப் பாடுந் தேவா ரத்தை, 'இசைகூற வந்தவண மேத்துபவரும்' தக்க பயனுறுவ ராதலின் அதன் அருமை அகழ்வாரைத் தாங்கும் நிலம் போன்றதன்றோ?

3. மூன்றாவதாக இவ்விருமறைகளையும் பயில்வதினால் தக்கபயனை எளிதில் அடையலாம். இவ்வாறடையக் கூடிய பயன் அறம்பொருள் இன்பம் வீடாகிய நான்குமாம். இந் நான்கையும் தமிழ்மறையளிக்குமேனும் ஆரிய மறை முதல் ஒன்றையே அல்லது அதன்பயனாகிய அடுத்தவிரண்டையுஞ் சேர்த்து முதன்மூன்றையுந்தான் அளிக்கவல்லது. இதனை வேதம் ஓதின் உறுபயன் அறமே என்றும் மதுரவாசக மோதின் முத்தியுறுபயன்'* என்றும் ஆன்றோர் அறிவித் திருக்கின்றனர். பண்டைத் தமிழாசிரியரும் இவ்வேதத்தைக் குறிக்கும் பொழுது "ஒன்றுபுரிந்த வீரிரண்டின் ஆறுணர்ந்த ஒரு முதுநூல்'' † என்றார். இதற்குப் பொருள்கண்ட பெரும் புலவர் அறமொன்றையே மேவிய நான்கு கூற்றையுடைத்தாய் ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒருபழைய நூலாகிய வேதம் என்றார். இன்னும் வேதம் முத்தியளிக்கவல்ல தன்றென்ப தைச்சனகாதி நால்வரும் "ஈசன் மாணடி எய்துதும்யாமென மாதவத்தினை யாற்ற ‡ அடைந்த வரலாறே நன்கு விளக்கும். என்னை? அன்னார்முன் இறைவன் தோன்றி "எது வேண்டிய தென்றலும் § முத்திவேண்டுமென்று மொழியாது "நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு மாலடைந்தார் $ ஆதலின் "வேதவுண்மை விளம்புதியாலென்றார் ** அவ்வேதம் யாதென

---

* நால்வர் நான்மணிமாலை—32வது பாட்டு.

† புறநானூறு

‡ கந்தபுராணம். உற்பத்திகாண்டம் மேருப்படலம். 58, 59

§ திருஞானசம்பந்தர்—பழந்தக்கராகம்—திருச்சேய் ஞலூர்—1.

$ ஷை இந்தளம்- திருவன்மியூர்-7-ஈண்டு இருக் கென்னும் சொல் நிறை மொழியையாவது அல்லது வேதம் என்னும் பொருளில் அறநூலை அல்லது உண்மைகளையாவது குறிக்கின்றது.

** திருநாவுக்கரசு-திருநேரிசை-திருச்செம்பொன்பள்ளி-10

ஆராயுமிடத்து அஃது, "பண்டிருக்கொரு நால்வர்க்கு நீருரை செய்தே" * என்றும், "அங்கங்களாறு நான்கும் அந்தணர்க் கருளிச்செய்தார் † என்றுங் குறிக்கப்பட்டிருப்பினும், இருக் காதி நால்வேதமன்று. ஏனெனில் இவை இறைவனால் இயற்றப் படாதிருத்தலை முன்னர் தெள்ளிதிற் றெருட்டினும். ஆனால் அவை அறத்தாற்றை விளக்கும் அறிவுரைகளாய். அல்லது என்றும் நின்று நிலவக்கூடிய உண்மைகளாம். அவை இவ் விருக்காதி வேதங்களில் அடங்கியிருத்தல் கூடும். ஆனால் இவையிரண்டும் ஒன்றேயல்ல. விரித்தானை நால்வர்க்கு வெவ் வேறு வேதங்கள் † என்றும் "விரித்தவன் வேதங்கள் வேறு வேறு, தெரித்தவன் உறைவிடம் திருவலமே" என்றுங் கூறியபடி ஒவ்வொருவருக்கும் அவரவர் அறிவின் அகலத்திற் கேற்ப வெவ்வேறு உண்மைகள், "அருந்தவ மாமுனிவர்க் கருளாகியோ ராலதின்கீழ், இருந் தறமே புரிதற்கியல்வாகிய தென்னை கொலாம்"‡ அறமுரைத் தருளினனே" என்றபடி அறத்தையே விளக்கும் உண்மைகள் தாம் கூறப்பட்டிருக்க வேண்டும். இவை எம்மொழியில் கூறப்பட்டிருக்கலாமெனின் இறைவன் காரைக்காற் பேயாரை "ஹேமாதே!" என்றாரியத் தாலழைக்காது 'அம்மையே!' என்று தமிழாலழைத்ததாலும், நால்வர் முதலிய அடியார்களுடன் பழகும் பொழுதெல்லாம் தமிழே பயின்றிருத்தலானும், அநபாய சோழரிடத்து இறைவன்

"சேக்கிழான் நமதுதொண்டர் சீர் பரவ நாமகிழ்ந் துலக [மென்றுநம்
வாக்கினலடி யெடுத்துரைத்திட விரைந்து நூல் செய்து [முடித்தனன்
காக்கும் வேல்வளவ நீயிதைக் கடிது கேள்" §

என்று நீண்டதோர் கட்டளையைத் தமிழிலேயே பிறப்பித்த தாலும், ஆரிய மொழியைவிடத் தமிழ்மொழியே உலகவழக்கிற் கேற்ற தொன்றுதலானும், உலகியற்கையை அறிவுறுத்துவ

* திருநாவுக்கரசு-திருவேகம்பம்-காந்தாரம்-8.

† திருஞானசம்பந்தர்-திருவல்லம்-வியாழக்குறிஞ்சி 1.

‡ சுந்தரர்-பஞ்சமம்-திருநாகேச்சுரம் 2

§ சேக்கிழார் புராணம் 64

தற்காகவே * அறநெறி சனகர் முதலிய நால்வருக்கும் மொழியப் பட்டதாதலானும் இவை தமிழிலேயே விளம்பப் பட்டிருக்கக் கூடும். இதனை வலியுறுத்தவே 'கல்லாலந் தண்ணிழற்கீழ்க் கலித்துறையது பயந்த காமர் காட்சி' என்னுஞ் சொற்றொடரும் எழுந்துளது †. இவ்வாறு அறுபத்து நான்கு அறி பொருள்களுளொன்றாய வேதத்தை நன்றுணர்த்திட நால்வருந்தேர்ந்து' பின்னரும் 'உணர்வு அமைந்திலதேனும்' 'உளம் (பரி) பாகமுற்றது' என்றார் கச்சியப்ப சிவாச்சாரியார் ‡. அறமியற்றுவதால் எவ்வாறு பக்குவமடையலாமோ அவ்வாறே வேதமோதி அதன்படி நடத்தலால் உறலாமென்பதும், வேதம் அறமொன்றையே விளக்கிக் கூறுவதென்பதும் பெற்றாம்.

இவ்வாறன்றி "அழிந்த சிந்தை அந்தணாளர்க் கறம் பொருள் வீடின்ப மொழிந்தவாயான்"§ என்பன முதலிய பலமேற் கோள்களைக் கொண்டு நால்வருக்கும் நாற்பொருள் களும் இயம்பப்பட்டனவென்றும், வேதம் இந்நான்கையுங் கூறுமென்றுங் கருதவுங்கூடும். ஆனால் அது பின்னரும் நடந்ததைத் தொகுத்துக் கூறுவதாம். அஃதென்னெனின் அச் சனகர் முதலிய நால்வரும் வேதத்தினால் "சிந்தையொன்று திறனறிதாதலின் நொந்து பின்னரும் நோற்க" இறைவன் அவர் முதிர்ச்சியைக் கண்டு "அந்தமில் ஆகமத்தின் அரும்

---

* திருவாசகம்-அருந்தவருக் கறமுதநான் கன்றருளிச் செய்திலனேல், திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

† திருநான்மறை விளக்க ஆராய்ச்சியாளர் 'கல்வித்துறை' பயந்ததாகப் பாடம் கற்பிப்பர் (77 வது பக்கம்) இப்புதுப்பாடமும் ஆரிய வேதத்தைக் குறியாது அறநெறியாகிய கல்வித்துறையையே குறித்தலானும், அக்கல்வி தமிழிலும் இயம்பப்படல் கூடுமாதலானும், மேற்காட்டிய மேற்கோள்களால் தமிழிலேயே இருந்திருக்கவுங் கூடு மென்பதை உணர்வாராக.

‡ கந்தபுராணம், உற்பத்திகாண்டம், மேருப்படலம், முறையே 60, 61, 63ம் பக்கங்களிற் காண்க.

§ திருஞானசம்பந்தர்-பழந்தக்கராகம்-திருமுதுகுன்றம்-6

பதம் மூன்றுங் கூறினான்"* இதுவே வீட்டுநெறி கூறுவ தாதலின் இவ்விரண்டு செயலையுங் கூட்டியே "ஆலதன் கீழிருந்து நால்வர்க்கறம், பொருள், வீடின்பமா றங்கவேதந் தெரித்தானை"† என்றருளிச் செய்தனர். இதனானும் உள்ளம் ஒடுங்காதது கண்ட நால்வர் "புந்திய தொடுங்கு ஞானபோதகம் போதியென்றார்".

என்னலு நகைத்தியாது மெதிர்மொழி புரிந்தானல்லன்
பன்னுவதன்றான் மற்றிப் பரிசினா லிருத்தல்கண்டே
ரந்நெறி யாகுமென்றே யனையவர்க் குணர்த்துமாற்றா
லுன்னரும் பரத்தின் மேலோ னொருசெயல் புரிதலுற்றான்

இதனாற்றான் அந்நால்வரும் "முந்தியாப்புறு முத்தளை மூட்டற, புந்தி யொன்றியப் புங்கவன்றாண்மலர், சிந்தைசெய்து செயலற்றுவைகினார்"‡ இம்மூன்றாவது செயலையே "நால்வர்க்கொளி நெறி காட்டினை"§ என்றும் "ஒளிசேர் நெறியளித்தோன்"$ என்றுங் குறித்திருக்கின்றனர். இவ்வாறாய மூன்று செயல்களும் முத்தி எய்துதற்குரிய மூன்று படித்திறங்களாம். முதலாவது அறனறிந்தியற்றி முதிர்ச்சி யுறுவது. இதுதான் "அறங்கிளரு நால்வேத" த்தின் செயல். இரண்டாவதாக வீட்டிற் பெரிதும் விருப்புடையராய் 'ஆகம' வழியை நாடுவது. மூன்றாவதே உணர்த்துவோன் அருளால் உள்ளம் ஒடுங்கி ஒளிபெறுவது ஆகும்** இவற்றுள் வேதம் முன் நிறுவியபடி அறத்தாற்றையே விளக்கவல்லதென்பதை ஆறுமுக நாவலர் "வேதம் யஞ்ஞாதி கருமங்களைச் செய்து புண்ணியலோகங்களை அடையவிரும்பும் உலகர்கள் பொருட்டும், ஆகமம் சிவசாலோக்கிய, சிவசாமீப்பிய, சிவசாரூப்பிய, சிவசாயுச்சியங்களை அடைய விரும்பும் சத்திநிபாதமுடையார் பொருட்டும்

(இதன் தொடர்ச்சி 137-ம் பக்கம் பார்க்க.)

* கந்தபுராணம்-மேருப்படலம் 61, 63
† அப்பர்-திருத்தாண்டகம்-திருநாகேச்சுரம்-2.
‡ கந்தபுராணம் மேருப்படலம் 10,11,65
§ சம்பந்தர்-திருவெழுகூற்றிருக்கை.
$ ஷை மேகராகக்குறிஞ்சி-திருவீழிமிழலை-1
** இவ்வாறாய மூன்று படிகளையும் சனகர் முதலிய நால்வர் ஏறினாரென்பதைத்தேவாரம் முதலிய அருள் நூல்களும் அறிவிக்கின்றன.

உ

ஓர் வழக்கீடு.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

(திரு. ரா. இராகவையங்காரவர்கட்கு மறுப்பு.)

(முற்றொடர்ச்சி 353-வது பக்கம்.)

இடம் :—மொழிநிலை நீதிமன்றம்.

காலம் :—பகல் 12½ நாழிகை.

வருவோர் :—

(1) அவைத்தலைவர் :—மொழிநிலை நீதிமன்றத் தலைவர்

(2) அறங்கூறவையத்தார் :—இலக்கண, இலக்கிய, தருக்க நூற்புலவர்

(3) தமிழ்மகனார் :—வழக்கிடுவோர் (வாதி).

(4) வடமொழியாளர் :—எதிரி (பிரதிவாதி).

(5) வழக்கறிஞர்கள் :—

(1) தமிழ்மகனாருக்காகப் பேசுவோர்.

(4) வடமொழியாளருக்காகப் பேசுவோர்.

(6) காணவந்தோர்.

ஆவணம் :—

(1) சுதேசமித்திரன் அற்றைத்தாள் (27—10—30)

(2) மகாபாரதம் தமிழ் மொழிபெயர்ப்பு உரைநடை; அநுசாசன பருவம்.

(3) திருக்குறள், பரிமேலழகருரைப் பதிப்பு.

அவைத்தலைவர் :—(அவையத்தாரை நோக்கி) ஐயன்மீர்! தமிழ்மகனாரது வழக்கில் எஞ்சிய ஒரு பகுதி இன்று ஆய்தற்கு மேற்கொள்ளப்படுகிறது. வழக்காளிகளும் வழக்கூறிஞர்களும் கூறும்கூற்றில், வன்மை, மென்மை, உண்மை, பொய்ம்மைகளை நடுநிலை திறம்பாது சீர்தூக்கி, நுங்கள் கருத்தை வெளியிடுதல் நுமது கடன். வழக்கின் இயல்களையெடுத்து மொழிந்து விளக்குவது வழக்காளிகளின் கடன்.

தமிழ்மகனார் :—(அவையினரை நோக்கி) ஐயன்மீர்! இவ் வடமொழியாளர், தங்கள் கணக்கு (நூல்) களில் ஒன்றாகிய திருமால் ஆயிரம்பேர்ச் சங்கரபாடியம் (விஷ்ணு சஹஸ்திரநாம சங்கர பாஷ்யம்) என்னும் கணக்கில் முன்னரே பதிவு செய்யப் பட்டுள்ள சிலபொருள்களைத் தமிழராகிய யாங்கள் திருடிக் கொண்டு எமது கணக்காகிய திருக்குறளிற் பதிவுசெய்து கொண்டோமென்று பலர் முன்னிலையில் வாதாடுவாராயினர். யாங்களோ, அவர் கணக்கிற் பதியப்பட்ட பொருள்வேறு; எங்கள் பொருளாகிய இவை வேறு. இவை தமிழராகிய எமதுடைமை, இவற்றினியல் வேறு என்பேம். இவ்விரண்டனையும் உரை (உரையாணி) யால் உரைத்து வேறு என்பதைக் காட்டுகிற்பேன். அன்றியும் அவர்கள் கணக்கில் பதிவு ஆவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே, எமது கணக்கில் அவை பதிவு செய்யப்பட்டன என்பதையும் ஆவணங்களின் மூலமாய் நாட்டவும் கிற்பேன். அவையீர் ஆய்ந்து முறை செலுத்துக.

அவைத்தலைவர் :—(வடமொழியாளரை நோக்கி) இதுபற்றி நீர் கூறுவன யாவை?

வடமொழியாளர் :—ஐயன்மீர்! எமது கணக்கு, திருமாலின் ஆயிரம்பேர்ச் சங்கரபாடியம். அது, இங்கு அவை முன் வைக்கப் பட்டிருக்கும் ஆவணங்களில் ஒன்றாகிய அநுசாசன பருவத்தில் சில பக்கங்களில் உள்ளது. அவற்றின் பொருளையே திருவள்ளுவரென்னும் தமிழ்மகனார் திருடித் தமிழ் மேற்பூச்சுப் பூசித் தமிழருடைமை அவை எனத் தமது கணக்கிற் பதிவு

செய்து விட்டனர். யாங்கள் உரையால் உரைத்துக் காட்டல் கொண்டும், கணக்கின் பதிவுகொண்டும் அவையீர் ஆய்ந்து முறை செலுத்துக.

வடமொழி வழக்கறிஞர் :—இத்திருட்டைக் கண்டு பிடித்தது யார்? வெளியான இடம் எது?

வடமொழியாளர் :—இந்தக் களவின் உளவைக் கண்டறிந்தவர், சேது சமஸ்தானம் மகாவித்வான் திரு. ரா. இராகவையங்கார் சுவாமிகளே. இக்களவு வெளியான இடம், சிதம்பரம் அண்ணுமலைப்பல்கலைக்கழகத்தில் வீற்றிருந்த அறிஞர் திருமுன்.

வ. வ-ர் :—அவ்வறிஞர் குழாத்துள் ஒருவரேனும் இதை மறுத்ததுண்டா?

வடமொழியாளர் :—இல்லை, இல்லை.

தமிழ் வழக்கறிஞர்:-மறுத்திருந்தால் இவ்வழக்குக்கொணர இடம் இராது.

அவைத்தலைவர் :—(வடமொழியாளரை நோக்கி) ஐய! நும் உடமை யென்னப்படும் அவற்றை உரையால் உரைத்துக் காட்டக் கடவீர்; தமிழ் மகனும் அவை தம்முடைமையென்பதை யுரைத்துக் காட்டக் கடவர்.

வடமொழியாளர் :—அங்ஙனமே. முதலாவது "வேண்டுதல் வேண் டாமை யிலான்" என்று திருவள்ளுவர் தமிழ்ப் பூச்சுப் பூசிக்கொண்டது......................

த. வ-ர் :—ஐய! நீர் காட்டும் பொருள்கள் ஒவ்வொன்றனையும் ஏதேனும் ஒருமுறை பற்றி யொன்றன்பின் ஒன்றாகக்காட்டல்வேண்டும். நீர் எம்முறைபற்றி "வேண்டுதல் வேண் டாமை யிலான்" என்ற பொருளை முதற்கண் காட்ட வந்தீர்?

வடமொழியாளர் :—ஏன்? இராகவையங்கார் சுவாமிகள் கூறிய முறைபற்றி. இதோ, சுதேசமித்திரனைப் பாருங்கள். அதிற்கூறிய முறையே நான் காட்டும் முறை.

த. வ-ர் :—அஃது ஒழிக. இதோ திருக்குறள். இந்நூற் கடவுள் வாழ்த்திற் காணப்படும் முறைப்படியே யொவ்வொன்றாக எடுத்து உரைத்துக் காட்டுக.

வடமொழியாளர் :—ஏன் அவர் கூறுவது முறை கெட்டதா?

அவைத்தலைவர் :—வெற்றுரையேன்? முறை யுண்டேல் இம்முறை பற்றியென்று கூறுக. இன்றேல் இவர் கூற்றைக் கடைப்பிடித்தொழுகுக.

வடமொழியாளர் :—இனி, வள்ளுவர் முறை பற்றியே கூறக்கடவேன் எனினும் சுதேசமித்திரன் அற்றைத்தாள் (27—10—30) 10-ஆம் பக்கம் 3 ஆம் பத்தியே என் கூற்றுக்கு ஆதாரம். முதலாவது "வாலறிவன்" என்று வள்ளுவர் தமிழ்ப் பூச்சுப் பூசினது......................

த. வ-ர் :—ஐயா! திருக்குறளில் முதற்கண் காண்பது, "ஆதிபகவன்" என்பது. அதனைப்பற்றி யொன்றும் உரையாமல் மேற்போவதேன்?

வடமொழியாளர் :—இவ்வழக்கு திருமாலின் ஆயிரம்பேர்ச் சங்கரபாடியம் என்ற எமது கணக்கிலிருந்து திருவள்ளுவர் திருடினரென்பதுபற்றி. மகாவித்துவான் இராகவசுவாமி இப்பெயர் (ஆதிபகவன்) அக்கணக்கிலிருப்பதாகக் கூறவில்லை. ஆகையால் நானும் அதனை விடுத்தேன். இதோ, சுதேசமித்திரன், நன்றாய்ப் பாருங்கள். இப்பெயர் அக்கணக்கிலிருந்து வந்ததெனக் கூறப்படுகிறதோ?

த. வ-ர் :—(அப்பத்திரிகையைத் திருப்பித் திருப்பிப் பார்த்து) இப்பெயர் அக்கணக்கில் (தி: ஆ. ச. பா.) இருப்பதாகக் கூறப்படவில்லை. ஆம். ஆம்.

தமிழ்மகனார் :—(மகாபாரதம் அநுசாசன பருவத்தை விரித்து திருமாலின் ஆயிரம்பேர்ப் பகுதியைப் படித்து) இக்கணக்கில், ஆதியென்றாவது, ஆதிபகவன் என்றாவது திருமாலுக்குப் பெயர் வழக்கமில்லை. எனினும் பகவன் என்ற பெயர்

குறிக்கப்படுகிறது. இப்பெயர் எல்லாச் சமயத்துக் கடவுளர்க்கும் முனிவரர்க்கும் கூறும் பொதுப் பெயராதலின், சேதுவேத்தவைப் புலவர், தம் கொள்கையை நாட்டமாட்டாமை பற்றிப் பிறபெயரெல்லாம் உளவாகக் கூறும் அக்கணக்கில் (கி. ஆ. ச. பா.) இப்பெயரின் (ஆதிபகவன்) ஒருபகுதி (பகவன்) உண்மையையும் காட்டாது போயினர். அவையீர்! குறிக்கொண்மின்.

அவையத்தார் :—என்ன! வடமொழியாளர் பிள்ளையார் கொட்டுக் கண்ணிற் கொட்டிக் கொண்டனர், முதற்கோணல் முற்றுங்கோணலா? வடமொழியாளரீர்! இப்பெயர் திருமாலின் ஆயிரம் பேர்களிலொன்று என்று ஒன்றும் உரைக்ககில்லீர்!

வடமொழியாளர் :—அதுபற்றி யெனக்கு ஒன்றும் தெரியாது. இராகவையங்கார்சுவாமி சொல்லவில்லை. சுதேசமித்திரன் பத்திரிகையில் அக்கணக்கிலிருப்பதாக ஒன்றும் இல்லை.

அவைத்தலைவர் ;—சரி, அப்பாற்செல்லும்.

வடமொழியாளர் :—இரண்டாவது குறளில் "வாலறிவன்" என்று திருவள்ளுவர் மேற்பூச்சுப் பூசிக்கொண்டது வடமொழியிற் கடவுளின் பெயராகிய சர்வக்ஞன் என்ற பெயரையே.

த. வ-ர் :—இப்பெயர் எந்தக் கணக்கிலிருக்கிறது?

வடமொழியாளர் :—இன்ன கணக்கில் இருக்கிறதென்று இராகசுவாமி குறிக்கவில்லை யெனினும், முன்பின் சம்பந்தத்தால், திருமாலின் ஆயிரம்பேர்ச் சங்கரபாடியத்திற் பதிவு ஆயிருப்பதென்றே ஊகிக்கப்படுகிறது. இதன் (சர்வக்ஞன்) இயலை உரைத்துக் காணுமிடத்தில்,

(1) எல்லாமாகவும், ஞானமுள்ளவராகவும் இருப்பவர் (சங்கரபாடியம்) என்பது பெறப்படும்.

(2) இனி தாமே எல்லாமாகவும் அறிந்திருப்பவர்.

(3) தம்மைச் சர்வேந்திரியாமியாக அறிந்திருப்பவர் எனப் பிறரும் இச்சொற்கு உரைப்பர். அநுசாசனபருவம், பக்கம் 987.

தமிழ்மகனர் :—அவைத் தலைவரீர்! அவையீர்! குறிக் கொள்ளல்வேண்டும். இவ்வாறு மூவகைப் பொருள்தோற்றும் சர்வக்ஞன் என்ற சொல்லுக்கும், தூய (பாசத்தடையற்ற) அறிவுடையவன் என்று பொருள் தோற்றும் வாலறிவன் என்ற சொல்லுக்கும் யாதேனும் இயைபு உளதோ ஆய்மின்.

த. வ. ர் :—ஐயா! வடமொழியாளரீர்! வாலறிவன் என்ற சொல்லுக்கு, ஆஞ்சநேயரைக் குலதெய்வமாக உடைய ஒருவர் "திருவள்ளுவர் எமது கடவுளாகிய அநுமாரையே வால்—அறிவன் (வாலையுடைய அறிவன்) என்று திருக்குறளிற் கூறினர்" என்று ஓரிடத்துக் கூறினர்; அவர் நம்மினும் மிக்க நுண்ணறிவினர் ஆவர். (கொல்லென்ற சிரிப்பு.)

வடமொழியாளர் :—நானாக ஒன்றும் கூறவில்லை. எல்லாம் மகா வித்வான் அவர்கள் கூற்று.

அடுத்தது :—"மலர்மிசை ஏகினன்" என்று மூன்றாங் குறளில் திருவள்ளுவர் தமிழ்ப் பூச்சுப் பூசிக்கொண்டது. திருமாலின் ஆயிரம் பேரிலொன்றாகிய புண்டரீகாக்ஷன் என்ற சொல்லுக்குச் சங்கரர் கொண்ட பாடியப்பொருளே. இச் சொல்லை உரைத்துக் காணுமிடத்து :—

(1) தாமரைக் கண்ணன்.

(2) இருதய கமலத்து இருப்பவன் (சங்கரபாடியம்) எனவும்,

(3) பரமபதத்திலிருப்பவர்களுக்குக் கண் போன்றவன் (பிறர்உரை) எனவும் முப்பொருள் தோன்றும். (அநுசாசன பருவம் பக்கம் 939.)

தமிழ்மகனர் :—ஐயன்மீர்! மலர் மிசை யேகினன் என்ற தொடர் அருகக் கடவுளைக் குறிப்பது, "பூமிசை நடந்தோன்" என்று அவர்கள் கூறிக்கொள்வர். எல்லாச் சமயத்தாராலும் வணங்கப்படும் கடவுள் ஒருவனேயென்னும் உண்மைநூற் றுணிவுகொண்டு ஆசிரியர் வள்ளுவனர் போதுமறையாகிய தம் நூலிற் கடவுளை யிங்ஙனம் குறித்தார். "அறவாழி யந்தணன்"

என்று பௌத்தக் கடவுட்பெயரை வரையாது அவர் வழங்குவதும் உய்த்துணரத்தக்கது. இத்தொடருக்கு (மலர் மிசையேகினன்) இதுவே பொருளென்பதனை ஆசிரியர் சங்கர நமச்சிவாயர் உரையானும் தெளியலாம்.

பரிமேலழகர் இங்ஙனம் உரைத்தாரேயெனின் அது பொருளன்று; வழக்கு, திருவள்ளுவர் மூலப்பொருளைப்பற்றியே. அல்லதூஉம் அவ்வடசொல்லை யுரைத்துக் காணுமிடத்து முப்பொருள் தோற்றுகிறது. இத்தமிழ்ச் சொல்லோ ஒரேபொருள் தோற்றுகிறது. வலிந்துகொண்டால் (பரிமேலழகர் கருத்தின்படி) அம்முப்பொருளினியலில் ஒன்றனை யொத்திருக்கிறது. ஆகையினால் உரையால் உரைத்து அவையத்தாரை மெய்ப்பிக்க முயல்வதினும், ஆவணத்தால் நாட்டி உண்மை காண முயல்வதே மேல் ஆதலின் பின்னர் அதை நாட்டுகிற்பேன்.

த. வ. ர்:—ஐயா! வடமொழியாளரீர்! இவ்வடசொல் (புண்டரீகாட்சன்) திருமாலின் பெயர்களிற் சங்கர பாடியப் பொருள்தர ஆழ்வார்களாற் பாடப்பட்ட துண்டா?

வடமொழியாளர்:—(சுதேசமித்திரனைப் படித்துப்பார்த்துவிட்டு) தமிழில் "புந்தியாய்ப் புண்டரீகத் துள்ளாய்போற்றி" என்று தேவாரத்திலிருக்கிறது.

அவைத்தலைவர்:—(நகைத்து) என் காணும், வடமொழியாளரீர்! இவ்வவைமுன் கண்டவாறெல்லாம் பிதற்றுகிறீர். 'மலர்மிசை யேகினன்' என்பது உமது கொள்கைப்படி திருமாலுக்கு ஆயின், ஆழ்வார்கள் பாசுரத்தில் ஆட்சியுண்டா? என்று கேட்டால், நீர், தேவாரத்தில் ஆட்சிகாட்டுகின்றீரே! என்ன இது!

வடமொழியாளர்:—நானாக ஒன்றும் சொல்லவில்லை, ஆழ்வார் பாசுரங்களிலிருந்தால் இராகசுவாமிகள் விடுவாரோ? இதோ! சுதேசமித்திரன், அதிலுள்ளதையே நான் கூறினேன்.

காணவந்தோர்:—நன்று, நன்று, வெகுநன்று. மேற்கொண்டது விஷ்ணு சஹஸ்திர நாமம் ஆட்சி! காட்டுவது தேவாரமா? இவர் தம் வழக்கறிவே வழக்கறிவு.

வடமொழியாளர் :—அடுத்தது "வேண்டுதல்வேண் டாமை யிலான்" என்று நான்காங் குறளாக வள்ளுவர் தமிழப் பூச்சுப் பூசிக்கொண்டது, அக்கணக்கில் (தி. ஆ. ச. பா.) ஆரேளத்திரன் எனவரும் வடசொல்லேயே. அதனை யுரைத்துக் காணுங்கால்,

(1) வினை, விழைவு, சினம் இம் முக்குணங்களுக்கும் மூவகைக் கொடுமை (ரௌத்ரத்ரயம்) என்று பெயர், இவை யில்லாதவன் ஆரௌத்ரன் (சங்கரபாடியம்) என்றும்,

(2) தண்மையினால் கடுமை தணிக்கப்பட்டு அமைதியா யிருப்பவன் (பிறருரை) என்றும் பொருள் தோற்றும். (அநு சாசன பருவம் பக்கம் 894)

தமிழ்மகனார் :—அவ்வடசொல்லே யுரைத்தால் ஈரியல்பு தோன்றுகிறது, தமிழ்ச்சொல்லோ (வேண்டுதல் வேண்டாமை யிலான்) ஓரியலேயே தோற்றுகின்றது. சங்கரர் கூற்றினை யொத்த தென்பேமேல் வினை, விழைவு, சினம் இம்முக் கொடுமையும் இல்லாதோன் என்பது அது; வேண்டுதல், வேண்டாமை இலான் என்பது இது. வேண்டாமை வேறு சினம் வேறு என்பது முன்பே ஒருமுறை என்னால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. அவையத்தீர் ஆய்ந்து பார்மின். (அவைத் தலைவரும் அவையத்தாரும் மூக்கினுச்சிச் சுட்டுவிரற்சேர்த்தல்)

வடமொழியாளர் ;—அடுத்தது "இறைவன்" என்று திருவள்ளுவர் தமிழ்ப் பூச்சுப்பூசி ஐந்தாங் குறளினும், பத்தாங் குறளினும் கொண்டது "விஷ்ணு" என்னும் வடசொற் பொருளேயே. அதனையுரைத்துக் காணுமிடத்தில்,

(1) சேதனு சேதனங்களில் அந்தரியாமியாய்ப் பிரவேசித் திருப்பவர், (சங்கரபாடியம்).

(2) அடியார்களை விட்டுப் பிரியாதவர்.

(3) மூவுலகங்களையும் அளந்தவர் (பிறருரை) என முப் பொருள் தோன்றும். (ஷை பக்கம் 966).

தமிழ்மகனர் :—இறைமை தலைமை; எப்பொருட்கும் இறை (தலைவன்) ஆதலின் இறைவன் என்று திருவள்ளுவர் பொது மறையிற் கூறினர். வடசொல் மூவியலைத் தோற்றுவது; இத்தமிழ்ச்சொல் ஓரியலையே யுடையது. விஷ்ணு எங்கும்பரவு என்னும் பகுதியடியாய்ப் பிறந்தசொல்; இறைவன் (ஐயங்கா ரவர்கள் கொள்கைப்படி) தங்கு என்னும் பகுதியடியாகப் பிறந்த சொல்; ஆதலின் ஒன்றற் கொன்றியைபு சிறிதும் இல்லை. மேலும் இறுத்தல் எனீபது, இதற்குமுன் இன்றி யிப்போது தங்குதல் (இனி அவ்விடத்தினின்று நீங்கினும் நீங்கலாம்) என்று பொருள் தருவது :—

"சான்றதாம் மதியம் இரவி வந்திறுப்ப" (பிரபுலிங்கலீலை).

"தென்வரைச் சாந்து நாறும் சேனைவந் திறுத்ததன்றே".
(கம்பர்)

என்னும் ஆட்சிகளால் அறியலாம். இப்பொருளில் இறைவனைக் கூறுவதற்குக் கல்லா மாந்தரும் உடம்படார். அவையீர்! ஆய்மின்! இனி இறு என்னும் சொல்லுக்கு அழி என்ற பொருள்கொண்டு இறைவன் சங்காரகர்த்தாவாகிய சிவபெருமான் என்று பொருள் கூறுவது மிக்க வலியுடைத்தாகுமே.

காணவந்தோர் :—ஐயங்கார் மோசம்போயினர்; போயினர்.

வடமொழியாளர் :—அடுத்தது 'பொறிவாயிலைந் தவித்தான்'

என்று ஆருங்குறளில் திருவள்ளுவர் தமிழ்ப் பூச்சுப் பூசிக் கொண்டது, ஹ்ருஷிகேசன் என்ற வடசொல்லுக்குச் சங்கர பாடியத்துக் கண்டபொருளையே. அப்பொருளை யுரைத்துக் காணுமிடத்தில்,

(1) ஐம்புலன்களையும் நடத்துபவர்.
(2) மகிழ்ச்சி, நலன், திரு இவற்றையுடையவர் (சங்கர
(3) உயிராகப் புலன்களை வசப்படுத்துபவர். [பாடியம்)
(4) இரவியாகவும், மதியமாகவும் உலகை மகிழ்விக்கும் ஒளியை யுடையவர் (பிறர் உரை ஷை பக்கம் 994).

என்பன தோன்றும்.

தமிழ்மகனார் :—அச்சொல் நான்கியலைத் தோற்றுவது, இத்தமிழ்ச் சொல்லோ ஓரியலையே யுடையது. அச்சொல் (ஹிருஷிகம்) ஐம்புலனைக் குறிப்பது ; இச்சொல், பொறிவாயிலாகவரும் ஐந்து அவா வினையும் குறிப்பது. ஆகலின் இவ்விரண்டும் வேறே. அங்கு **நடத்துவோன்** என்று உரைக்கப்படுகிறது ; இங்கு **அறுத்தவன்** என்று உரைக்கப்படுகிறது ; ஆதலால் **ஐம்புலன்களையும் நடத்துவோன்** என்பதனை **ஐந்தாசைகளையும் அறுத்தோன்** என்பது ஒக்கும் என்பது போலியுரையாம்.

வடமொழியாளர் :—அடுத்தது "**தனக்குவமையில்லாதான்**" என்று திருவள்ளுவர் தமிழ்ப் பூச்சுப்பூசி, எழாங்குறளாகக் கொண்டது, "**அதுலன்**" என்ற வடசொற் பொருளையே. இதனை யுரைத்துக் காணுமிடத்தில்...............

அவைத்தலைவர் :—இது எந்தக் கணக்கில் இருக்கிறது ? சங்கரபாடியத்திலிருக்கிறதா ?

வடமொழியாளர் —அது, சுதேசமித்திரன் பத்திரிகையாற் றெரியவில்லை ; முன்பின் உள்ளனகொண்டு கூறுங்கால் அக்கணக்கிலிருப்பதாகவே கொள்ளவேண்டும். அது ஒப்பற்றவன் என்ற பொருள்தோற்றும். (ஷை பக்கம் 886).

தமிழ்மகனார் :—கடவுள் ஒப்பற்றவன் என்று எம்மதத்தாரும் கூறுவர். இன்று தோன்றிய ஒருபுது மதமேயாயினும், அம்மதத்தினரும் தமது கடவுள் ஒப்பற்றவன் என்றே கூறுவர். ஆகவே தமிழ் மக்களும் தாங்கள் கண்ட கடவுளை ஒப்பற்றவன் என அறிந்திருந்தனர் என்பதும் சாலும். இவ்வரிய பொருளை வடமொழியிலிருந்து திருடிக் கொண்டனரென்பது வெறும் பயனில் கூற்றாகவே முடியும். அவையீர் ஆய்மின்.

த. வ-ர் :—வடமொழியாளரீர்! இந்த அதுலன் என்ற சொல் திருமாலின் ஆயிரம்பேர் வரிசையில் தானிருக்கிறதோ? வேறு கடவுட் பெயர் வரிசையிலும் இருக்கிறதோ?

வடமொழியாளர் :—தெரியாது.

த. வ-ர் :—அவையீர்! இதோ பாரதம் அநுசாசனபருவம் பக்கம் 173. இதில் சிவபெருமானது ஆயிரம்பேர் வரிசையிலும் இப்பெயர் காணப்படுகிறது.

காணவந்தோர் :—அம்மம்ம! வடமொழியாளர், தம் கொள்கையை நாட்டுந்திறன் வெகுநன்று. (சிரிப்பு.)

வடமொழியாளர் :—இவ்வளவே திருடப்பட்டவை. திருவள்ளுவர் தமக்குவேண்டிய கடவுட்பெயர்கள் பத்தில், இவ்வாறு பெயர்களைத் திருமாலின் ஆயிரம் பேரிலிருந்து திருடித் தமிழ்ப் பூச்சுப்பூசித் தமது கணக்கிற் பதிவு செய்து கொண்டனர். அவற்றை இவ்வவைமுன் உரைத்துக் காட்டினேன்.

த. வ-ர் :—ஐயா! திருவள்ளுவருக்கு வேண்டிய கடவுட் பெயர் பத்து; அவர் திருடத் தொடங்கியது (திருமால்) ஆயிரம் பெயரில்; ஆயின், ஆயிரம் பெயருக்குள் பொறுக்கியெடுக்கப் பத்துப்பெயர் கிடைக்கவில்லையா? ஆறு பெயரோடு ஏன் நிற்கவேண்டும்? இதனாலேயே உமது உண்மை நன்கு புலனாகிறது. அவையீர்! குறிக்கொண்மின்.

வ. வ-ர் :—(வடமொழியாளரை நோக்கி) உமது கொள்கைக்கு ஆதாரங்கொண்ட ஐயங்கார் சுவாமிகளின் கூற்றுப் பரந்த ஆராய்ச்சி யுடையது; அசைக்க முடியாத வலியுடையது என்பதற்கு யாவேனும் பிறசான்றுகளும் உண்டோ?

வடமொழியாளர் :—ஆம், உண்டு. அவை அறவாழி யந்தணன் எண் குணத்தான் என்ற கடவுட் பெயரைப் பற்றியவை. முதலது திவ்வியப் பிரபந்தத்தில், "அறவனை ஆழிப்படை யந்தணனை" என்று சடகோப முனிவரால் தழுவப்பட்டது என்பது. அடுத்தது, வேதத்தில் கூறிய "அபஹதபாப்மா" முதலிய எண் குணங்களாகும் என்பது. இவை சைவாகமத்துக் கூறப்பட்டன என்று பரிமேலழகர் கூறுவது தவறு. எமது ஐயங்கார் சுவாமிகள் கண்டு பிடித்த குணஷ்டகங்களே, அவற்றினும் மிகச் சிறந்தவை.

தமிழ்மகனர் :—அவையீர்! மகாவித்துவான், இராகவையங்காரவர்கள், எப்படியாவது திருக்குறட் கடவுட்பெயர்களைத்தும் திருமாலின் வடமொழிப் பெயரினின்று திருடியவையென்று நாட்ட முயன்று பார்த்தனர். முயற்சி பலிக்கவில்லை. ஆதலின், திருக்குறளில் வரும் அறவாழி யந்தணன் என்னும் பெயர்க்கு அங்கு வழிகாணாது, தமிழில் திவ்வியப் பிரபந்தத்திலாவது காட்டமுயன்று, சடகோபாழ்வார் பாசுரத்தைப் பொருத்திக் காட்டினர். அதுவும் பொருத்தமற்றதே யாகிறது. எங்ஙனம் எனின், திருக்குறளில் 'அறம்' என்ற சொல் (அறவாழி யந்தணன்) ஆழியென்ற சொல்லோடு தொடர்புறுகிறது; திவ்வியப் பிரபந்தத்திலோ அச்சொல் (அறவனை, ஆழிப்படை யந்தணனை) அந்தணன் என்ற சொல்லோடு தொடர்புறுகிறது ஆதலால். இனி, எண் குணத்தான் என்பதற்குத் தாம் கண்டு பிடித்ததாகக் கூறும் குணங்கள் எட்டும் இழிந்த குணங்களேயன்றி அவற்றினும் (சைவாகமத்துட் கண்டவற்றினும்) சிறந்தனவல்ல. ஒருவர் ஒன்று கூறுங்கால், அது, முன்னுள்ளவற்றினும் சிறந்ததேல் மதிக்கப்படுமேயன்றி, இழிந்ததேல், அவ்விழிவு கூறுவோருக்கேயாம் ஆதலின், இங்கு வடமொழியாளர் கூறும் இது, பொன்னினும், வெள்ளியேயுயர்ந்ததென்பான் கூற்றேயொக்கும். அவ்விருபாற் கூற்றினையும் இங்கே கூறுகிற்பேன்; அவற்றின் வன்மை மென்மைகளை அவையீர் ஆய்மின்.

சைவமாகமத்துக் கூறிய எண்குணங்கள் :—	(ஐயங்கார் அவர்கள் கண்டு பிடித்த) வேதத்தில் கூறிய எண் குணங்கள் :—
(1) தன்வயத்தனாதல்	(1) பாவத்தொடர்பின்மை
(2) தூயவுடம்பினனாதல்	(2) மூப்பு இன்மை
(3) இயற்கை யுணர்வினனாதல்	(3) சாவு இன்மை
(4) முற்றுமுணர்தல்	(4) துன்பமின்மை
(5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்	(5) பசியின்மை
(6) பேரருளுடைமை	(6) தாகம் இன்மை

(7) முடிவிலாற்றலுடைமை. (7) தடையற்ற இச்சையுடைமை
(8) வரம்பிலின்பமுடைமை (8) நினைத்தபடி முடிக்குந்திறன்.

கடவுள், பேரருளுடையான், முடிவில்லா ஆற்றலுடையான், வரம்பிலா இன்பமுடையான் என்பன எத்தகையன? கடவுளுக்குப் பசியில்லை; தாகமில்லை; மூப்பு இல்லை; சாவு இல்லை என்பன எத்தகையன? என்பது அவையினர் ஆயத்தக்கது.

அவைத்தலைவர்:—வடமொழியாளரீர்! நும் கூற்றால் நுமக்கு உயர்வோ, இழிவோ எதுவரினும் போற்றாது, கண்டவாறு கூறிவிடுவதே நும் இயல்புபோலும்.

வடமொழியாளர்:—எல்லாம் இராகவ சுவாமிகளின் அருளிச்செயல். தாம் கூறும் எண் குணங்களால் தமக்கு ஒரு உயர்வு கிடைக்குமென்று தானே அவர் கூறியிருப்பர்; இழிவு வரவேண்டிக் கூறியிருப்பரோ?

த. வ-ர்:—வடமொழியாளரீர்! நீர் கூறும் பாடியக்காரராகிய சங்கரர் இயற்றிய நூல்களில், சவுந்தரிய லகிரியென்பதும் ஒன்று? அதில் திருஞானசம்பந்த சுவாமிகள் கூறப்படுகிறாரா?

வடமொழியாளர்:—ஆம், "திராவிடசிசு" என்று அவர் அங்குக் கூறப்படுகிறார்.

அவைத்தலைவர்:—(வடமொழியாளரையும், அவரது வழக்கறிஞரையும் நோக்கி) இன்னும் இவ்வழக்குப்பற்றி நீவிர் உரைத்துக் காட்டுவன, உளவேல் அவற்றையும் கூறிக்காண்மின்.

வடமொழியாளர்:—இல்லை; இவையே நான் இங்குக் கூற இருந்தவை.

வ. வ-ர்:—எங்கள் பொருளை யுரையால் (உரையாணி) உரைத்துக் காட்டினோம்; எமது இயலும் தமிழ்ப் பொருளியலும் ஒன்றாயிருத்தலும் நாட்டலாயிற்று; சங்கரபாடியமாகிய

எங்கள் கணக்கு முந்தியது; திருவள்ளுவர் பிற்பட்டவராத லால் அவர் தம் கணக்காகிய திருக்குறளிற் பதிவு செய்தது திருட்டுத்தனம் என்பதும் நாட்டலாயிற்று; இவ்விருவகை யானும் எங்கள்பால் தீய செயலில்லையென்பது அவையத்தார் அறியக்கடவர்.

தமிழ்மகனர் :—அவையீர்! உரையால் உரைத்துக் கண்ட விடத்து அவருரை பல இயல் தோற்றியது; எமதுரை ஓரேயியல் தோற்றியது. இரண்டொரு பொருள் ஒத்தன போற் காணப்படினும், கணக்கின் காலங்கொண்டு அவை களையப்படும். ஆதலால் எமது கணக்கு (திருக்குறள்) முந்தியதா? அவர்கள் கணக்கு (சங்கரபாடியம்) முந்தியதா? என்பதை இங்கு நாட்டுகிறேன்.

சங்கராசாரியாரின் காலத்தை எளிதில் வரையறுக்கலாம். அவர் பாடிய சவுந்தரியலகிரி யென்னும் நூலில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரைக் கூறியிருக்கின்றனர். பல்லவருள், நரசிம்ம வர்ம்மன் என்பவன் காலத்தினர் நமது நாயனரென்பது, தேவாரத்தாலும், பெரிய புராணத்தாலும் அறியப்பட்ட பொருள். * அப்பல்லவ அரசன் காலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டு (630—50) என்பது கல்வெட்டுக்களால் துணியப் பட்டது. ஆதலால் திருமாலின் ஆயிரம் பெயருக்குப்பேருரை இயற்றிய சங்கரர் காலம் ஏழாம் நூற்றுண்டேக்குப் பிந்தியதே யாகும்.

ஆசிரியர் திருவள்ளுவர் காலமோ கி. பி. முதல் நூற்றுண்டு ஆகும். ஆகவே, 700 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் கணக்கி லிருந்த பொருள்கள், 700 ஆண்டுகளுக்குப் பின்னர் வட மொழியர் கணக்கிலேறி யிருக்குமானல், யாவர் திருடர்?

* "......சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய, பேராளன் பெருமான்......", என்பது சம்பந்த சுவாமிகள் தேவாரம். இங்குக் கூறப்பட்ட சிறுத்தொண்ட நாயனர் நரசிம்ம வர்ம்மனுக்குப் படைத்தலைவராய்ச் சென்று வாதாபி நகரத்தை வென்றுவந்தமை,

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகச் செய்து வந்தார்" என்று பெரிய புராணம் 3670-ஆம் பாடல் கூறும்.

என்பது வேறு கூறல்வேண்டா. அப்படியிருந்தும், அவை தமிழராற் றிருடப்பட்டன (சங்கரபாடியத்திலிருந்து, திருவள்ளுவர் கொண்டனர்) என்று கொண்டதும், தமிழ் மக்களென்னப்படுவார் குழாத்தினுள், தாம் அக்களவினைக் கண்டுபிடித்ததாக வெளியிட்டு அதற்காகப் பரிசில் பெற்றதும் எவ்வளவோ தீயசெயல் பாருங்கள்!.

காணவந்தோர் :—பாதகம், பாதகம், பெரும்பாதகம்.

தமிழ்மகனுர் :—இவையே நான் கூற இருந்தவை; இனி, அவையினர் கருத்து.

அவைத்தலைவர் :—(அறங்கூறவையத்தாரை நோக்கி) ஐயன்மீர்! நம்நண்மாண் றுழை புலம்பட்டவற்றை யிங்கு வெளியிடல் வேண்டும்.

அவையத்தார் :—மாண்புமிக்க அவைத் தலைவரீர்! தமிழ்மகனுர், கல்வெட்டு ஆதாரங்கொண்டு வள்ளுவர் கணக்கின் காலம் முந்தியதென நாட்டிவிட்டபடியால், அதன் முன், வேறு ஒப்புமைகொண்டு உரைத்துக் காட்டும் உரைகள் போலியுரைகளேயாய் நில்லாதொழியும். ஆதலின் யாங்கள் கூறுமாறு பிறிதியாதுமில்லை.

தீர்ப்பு.

அவைத்தலைவர் :—அவையினீர்! வழக்காளிகளுள், வடமொழியாளர் கொள்கையாகிய "திருமாலின் ஆயிரம்பெயருக்குச் சங்கரருரைத்த பேருரைப் பொருளைத் திருவள்ளுவர் கொண்டனர்" என்பது, தமிழ்மகனுர் காட்டிய கால ஆராய்ச்சிக் கணக்கினுல் பொய்யென வொழிக்கப்பட்டுவிட்டது. அவையத்தார் கருத்தும் இதுவே யாகும். இனி உரைத்துக் கண்டவற்றுள்,

(1) தாம் கூறும் கடவுட் பெயர்களை ஒரு முறைப் படித்து உரையாமல் கண்டவாறெல்லாம் உரைக்க வந்ததனுல்

(சுதேசமித்திரன்படி) வடமொழியாளர் ஓர் செப்பமற்றவர் என்பது புலனாகிறது. (சொல்லானறிப வொருவனை என்பது தமிழர் நீதி).

(2) திருக்குறட் கடவுட் பெயரனைத்தும் தமது பொருள் (திருமாலின் பெயர்) என நிறுவவந்தவர் முதற்குறளிற் கூறப்படும் **ஆதிபகவன்** என்ற பெயர், திருமாலின் ஆயிரம்பெயரிலிருந்து வந்ததா? எவ்வுரைப் பொருளைக்கொண்டு திருவள்ளுவரமைத்தனர்? என்பது ஒன்றும் கூறாமையால் வடமொழியாளர் ஒரு வஞ்சகர் என்பது புலனாகிறது.

(3) ஆயிரம் பெயர்களிலிருந்து பொறுக்கி யெடுத்த வள்ளுவனாருக்கு, ஒரு பத்துப்பெயர் கிடைக்காமற் போனதும், ஆறு பெயரைமட்டும் பொறுக்கி யெடுத்தனர் என்பதும், ஒப்புமைபற்றிக் கூறிப் பிறரையேமாற்றும் தீய நினைப்பினர் அவர் என்பதைப் புலப்படுத்தும்.

(4) "அறவாழி யந்தணன்" என்ற பெயர் தமது (வடநூல்) கணக்கிலிருப்பதாய் காட்ட முடியாமையின், தமிழ்க் கணக்கிலாவது காட்ட முயல்வதும், அங்கும் அஃது இயையாமற் போவதும், அவர் தம் வினைத் திறனைப் புலப்படுத்தும்.

(5) "எண்குணத்தான்" என்ற சொல்லுக்கு அவர் கண்டதாகக் கூறும் எண்குணங்கள் சிறந்தனவல்ல, இழிந்தனவே. (கடவுள் அளவிலாற்றலுடையசன் என்பதற்குப் பதிலாகக் கடவுளுக்குப் பசியில்லை என்றும். இவ்வாறே பிறவும் கூறலால்.)

(6) வாலறிவன், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயி லைந்தவித்தான்—என்னுமிவற்றிற்கும் இவற்றிற்கு ஒப்புமைகாட்டும் வடசொற்களுக்கும் யாதோரியையும் இல்லை. உரைத்துக் கண்டவிடத்து அவை வேறு வேறியலினவென்பது புலனாயிற்று.

(7) தனக்குவமையில்லாதான் என்பது திருமாலுக்குரிய பெயர் (அதுலன் என்பதின் மொழி பெயர்ப்பு) என்பதினும் பேதைமை பிறிதில்லை. (அச்சொல் பிற கடவுளர்க்கும் கூறப் படலின்)

(8) மலர்மிசையேகினன் என்பது வடசொற் கருத்து எனற்குக் காட்டும் ஆதாரம் சங்கரபாடியமே. அக்கணக்கு (நூல்) திருக்குறளுக்கு 700 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதென்று உறுதியாக நாட்டப்பட்டதனல், அக்கொள்கை பஞ்சாய்ப் பறந்தொழிந்தது.

ஆதலால் வடமொழியாளர் குற்றவாளி ஆகின்றனர். தமிழச் சட்டம் 28-ஆம் அதிகாரம் 4-ஆம் பிரிவின்படியுள்ள குற்றம் அவர் செய்ததாக நிறுவப்படுகிறது.

மொழிநிலை நீதிமன்றம், பிரசோற்பத்தி, சித்திரை, ஒன்பான் நாள்	இங்ஙனம், அவைத்தலைவர்.

தொடக்கக் கல்வி

திரு. க. சம்பந்தம் பிள்ளையவர்கள் B. A., L. T. தஞ்சை

புத்தாண்டும் பிறந்தது; பொழிலம்மையும் பொலிந்தாள். புது உரம் பெற்றுப் புதுத் தளிர்விட்டாள். புது இதழ் விரித்துப் புது மலர் விடுத்தாள். முன் துணர் தொறும் மலர் தொறும் தொன்னூற் கல்வித் துறை பல விளக்கினள். இத் துணர்முதல், மலர்முதல், தொடக்கக் கல்வி முறையும் விரிக்க விழைந்தாள். பேராசிரியர்க் குதவும் இதழ்களொடு ஊராசிரியர்க் கும் ஓரிதழ் உதவினள். ஊராசிரிய உறவினர்காள்! அம்மை

யருளின் வண்மை யறிமின்! இனி, எம்மலருடும் இவ்விதழ் நாடுமின்! இதழ்விடு சிறு பொருள் உம்மனம் பதிமின்! ஆய்மின்! தெளிமின்! ஆள்மின்!.

கல்வி.

இன்றைச் சிறு மக்கள் நாளைப்பெருமக்கள்' என்பர் அறிஞர். கருத்து யாது? நாட்டின் நலம் போற்றுவோர் நாட்டின் பெருமக்களே; உரம் பெற்ருேரே; உடல் உரமும் உள உரமும் பெற்ருேரே. உரம் பெற்றது எப்பொழுது? அவர்களது முற்பருவங்களிலன்ருே? உரம் உதவியது எது? கல்வியன்ருே? இக்கல்வியும் பருவத்தே பயிர் செய்யப்படுவது. அதனுடன் சுவற்றின் வலிமை அடிப்படையின் வலிமை யளவாவதைப் போன்று, கல்வியின் திறன் தொடக்கக் கல்வியின் திறனளவாகும். அன்றியும், பயனுறு வாழ்க்கைக்குச் சிறிதளவு கல்வியேனும் வேண்டும்; தொடக்கக் கல்வியேனும் வேண்டும். இக்காரணம் பற்றியே இக்கல்வியை வளர்த்தல் அரசியலாரின் முதற்கடமையாகின்றது.

ஆண்டு தோறும் ஊர்தோறும் எழும் தொடக்கப் பள்ளி பலவும் இந்நோக்கத்தையே பேணி நிற்பன.

முறைகளேன்?

பொதுமக்கள் நினைப்பதென்ன? பிள்ளைகளைப் படிக்கப் பழக்கல் பெருந்தொழிலன்று. தெருவோடியும் தொடக்கக் கல்வி பயிற்றுவான்; இதற்கெனத் தேர்ந்த அறிவுவேண்டாம்; தனிப்பயிற்சி வேண்டாம் என்பது.

சற்றே சிந்திக்க! வழக்கறுத்தல், பிணியறுத்தல் முதலிய வினைவகைகளை வழிப்போக்கர் எவரும் எடுத்தாள இயலுமா? இவ்வினையாளர் கூறுவதென்ன? இவை ஒவ்வொன்றும் தனிச் சிறப்புற்றது; தனி முறை கொண்டது. முறை யறிவிலாதார் இவ்வினையேற்றல் அடாது; ஏற்ருல் அவர்களால் நன்மையின்றித் தீமையே தோன்றும் என்று சொற்பொழி வாற்றுவர்;

சொற்போர் விளைப்பர். இவர்களது கூற்று உண்மை. ஆயினும் தனிவினைக்குத் தனிமுறை வேண்டுமேல் கற்பித் தலுக்கு முறை வேண்டியதின்று என்று கூறுவ தெங்ஙனம்? கற்பித்தல் எனும் வினை வினையன்று போலும்! இதுமட்டும் எவ்வகையில் தாழ்ந்தது? இவ்வினையில் ஈடுபட்டு வருவாய்க்கு வாய்விட்டலறி, நெஞ்சலர்ந்து, கண்குழிந்து, உடல் மெலிந்து ஆண்மை சிதைந்து நிற்கும் ஆசிரியர் வாழ்க்கை நிலையளவில் தாழ்ந்தது போலும்!

கற்பித்தலும் ஒருவினை; தனிவினை! எவ்வினைக்கும் மூலப் பொருளாவதாற் பெருவினை! இவ்வினை யேற்போரும் இதற் குரிய தனிமுறைகளைத் தெரிந்திருத்தல் வேண்டும்; அவை களிற் பயின்றிருத்தல் வேண்டும். இன்றேல், வண்டியிற் பழகாப் பரிமா நேர்வழி விடுத்து, மேடும், பள்ளமும், இப் புறமும், அப்புறமும் அலைத்து இழுத்துச் சென்று முடிவில் வண்டியைக் கவிழ்த்துத் தானும் துன்புறுவது போலாகும்.

தலைமுறை

நல்லுழவும் நற்கல்வியும் ஒருதரத்தன. உழவன் உழுதான்; உழவு சிறப்பது உழவனாலேயன்றோ? அன்று. பின்னை, அவன் பிடித்த ஏரினாலா? ஏரை இழுத்த எருதுகளாலா? இவையிரண்டு மட்டாலு மன்று. உழவின் சிறப்பு உழு நிலத்தையும் பொறுத் ததாகும். 'நிலத்துக் கேற்ற உழவு' என்ற வழக்கு மொழியை நினைவூட்டுக. எனவே, உழவன், தன் திறம், ஏர்த்திறம், எருதுத் திறம் ஆய இவைகளுடன் நிலத்தின் நேர்மையையும் உணர்ந்தே உழுதொழில் நடத்தல் வேண்டும். அங்ஙனமே, பிள்ளையின் கல்வித் தேர்ச்சி ஆசான் அறிவாற்றலால் மட்டும் ஆவதன்று; நூல்திறனல் மட்டும் ஆவதன்று; அன்றிப் பிறர் உதவியால் மட்டும் ஆவதன்று; இவை யொவ்வொன்றையும் கருதுவதுடன் உழவன் நிலத்தின் நேர்மையை அறிவதைப் போன்று, ஆசான் பிள்ளையின் உள்ள நேர்மையையும் உணர வேண்டும். நிலத்தின் அகப்பண்பை யறியா உழவன் உழவு சீருறாது; பிள்ளையின்

அகப்பண்பை யறியா ஆசான் போதனை பயனுறாது. நிலவகை யறிந்து உழுதல் உழவன் மாண்பு; பிள்ளையின் 'கொள்வகை யறிந்து கொடுத்தல்' ஆசான் மாண்பு. இதுவே தலைமுறை.

(தொடரும்.)

மொழிப் பாடம்.

பள்ளிகளிற் கற்பிக்கப்படும் பாடங்கள் பல வகையின. எனினும் பெரும்பான்மையாய் அவை மூன்று வகைகளில் அடங்கும். அவை மொழிப்பாடம், கணக்குப் பாடம், பொது அறிவுப்பாடம் என்பனவாம்.

மொழிப் பாடம் இருவகைத்து தாய்மொழிப் பாடம், ஆங்கிலமொழிப் பாடம் என.

ஆங்கிலம் அரசாங்கமொழி. நமது இந்திய தேசத்தி லுள்ள பல நாட்டு மக்களுக்கும் பொதுவான மொழி. வெளி நாட்டுக் கோடிக் கணக்கான உலக மக்கள் வழங்கும் மொழி. எனவே, சீரிய வாழ்க்கைக்கு ஆங்கில மொழித் தேர்ச்சி நமது பிள்ளைகட்கு வேண்டியதே.

எனினும், ஊர்ப்புறங்களிலுள்ள தொடக்கப்பள்ளிகளில் ஆங்கிலம் தாய்மொழி என்ற இரண்டினும் தாய்மொழியே பெரிதும் போற்றப்படுவதாகும். ஆங்கிலம் பயிலும் பருவம் அடையுமுன்னரே பள்ளி வாழ்க்கையை விட்டுச் செல்லும் பிள்ளைகள் பலர்; அவ்விதமின்றி ஆங்கிலம் பயிலுவதற்கெனத் தங்கும் பிள்ளைகள் சிலர்.

ஆகையால் நமது தாய்மொழியாய தமிழ்மொழியினைக் கற்பிப்பதற்குரிய முறைகளைமட்டும் இங்குக் குறிப்போம்.

தமிழ் கற்பதேன்?

தமிழ் கற்பதால் பிள்ளைகள் பெறும் பயன் யாது? இதனை ஒவ்வொரு ஆசிரியரும்—ஊராசிரியரும் பேராசிரியரும், ஆராய்தல் வேண்டும். அப்பொழுது தான் இப்பாடத்தின் தலைநோக்கங்கள் புலப்படும். அந்நோக்கங்கட்கு ஏற்ற முறை களையும் பயிற்சிகளையும் மேற்கொள்ள இயலும்.

தற்கால வாழ்க்கையில், எழுதப் படிக்கத் தெரியாத மக்கட்கு மதிப்புக் குறைவே. இக்குறைவை உணராதாரில்லை. கூலி வேலைசெய்யும் தந்தைமாரும் தமது பிள்ளைகள் இரண்டெழுத்துப் பெயராவது கற்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றனரன்றோ? பொதுவாய் வாழ்க்கையைச் சீராக்கவும், குடிமுறை யறிந்து தமது கடமைகளைச் செலுத்தவும் மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். எழுதப் படிக்கத் தெரிதலாவது தாய்மொழியில் எழுதப் படிக்கத் தெரிதலாம்.

எழுதப் படிக்கத் தெரிந்தோர் பல நூல்களையும் படிப்பர். அவைகளிலிருந்து பல விஷயங்களை அறிவர். நல்ல உணர்ச்சிகள் பல உண்டாகும். வரவர ஒழுக்கமும் மேம்படும்.

கல்வி 'சிற்றுயிர்க் குற்றதுணை' யாகும் எனுங் கருத்து முன்பு விளக்கப்பட்டது. இக்கல்வியைப் பிள்ளைகள் பலவித பாடங்கள் வழியே பெறுகின்றனர். கணக்கு, சரிதம், பூகோளம் அரசுமுறை முதலிய இப்பாடங்களை அவர்கள் தமிழ்மொழியிலேயே கற்கின்றனர்; தமிழிலேயே சிந்திக்கின்றனர். தாம் பெறும் தேர்ச்சியை அவ்வப்பொழுது தமிழ்ச் சொற்களாற் பேசியும் எழுதியுங் காண்பிக்கின்றனர். ஆகவே அவர்கள் பயிலும் பிற பாடங்களிலும் தமிழ் அவர்கட்கு உதவுவதாகும். பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்குத் தமிழ் பேருதவி புரிகின்றது.

பயிற்சித் துறைகள்

தமிழில் தேர்ச்சி பெறும் பிள்ளைகட்கு அளிக்கக்கூடிய பயிற்சி வகைகள் யாவை? நூல்களைப் படித்து ஆங்காங்கு அமைந்துள்ள கருத்துக்களை அறியப் பழகல் ஒருவகை. மனத்தில் எழும் எண்ணங்களைக் கோவையாகவும் தெளிவாகவும் எழுதப் பழகல் மறுவகை. இவ்விருவித பயிற்சிகளாலும் பிள்ளைகள் தேர்ச்சிபெறக்கூடும் என்பர் சிலர்.

இங்கு ஆராயத்தக்க விடயம் ஒன்றுளது. உலகமொழிகளைப் பெரும்பான்மையாய் இருபிரிவுகளில் அடக்கலாம். ஆங்கிலம் பிரஞ்சு, தமிழ், தெலுங்கு முதலிய மொழிகள் ஒரு

பிரிவைச் சார்ந்தவை; இவை மக்களால் வாழ்க்கையில் தினமும் ஆளப்படுவன; இவைகள் உலக வழக்கில் உள்ள மொழிகளாம். இலத்தீன், சமஸ்கிருதம் முதலிய மொழிகள் மற்றொரு பிரிவைச் சார்ந்த மொழிகள் உலக வழக்கில் இல்லாதவையே எனினும் நூல் வழக்கில் உள்ளவை; பண்டைக்காலத்தே தோன்றியவை; வாழ்க்கைக்குரிய அரிய கருத்துக்களை விளக்குபவை. அதனால் உயர்தரக் கல்வி நாடும் மாணவ மாணவிகள் இம்மொழிகளிலும் தேர்ச்சிபெறுவர். இம்மொழிகளில் ஆக்கப்பட்ட நூல்களைப் படித்தறிந்தும், படித்த விடயங்களை எழுதியும் பழகுவர். எனவே இங்குப் படித்தல், எழுதல் என்ற இரண்டு பயிற்சித் துறைகளும் கையாளப்பட்டாற் போதுமானவை.

உலக வழக்கில் உள்ள மொழிகள் மக்கட்கு அதிகமாய்ப் பயன் படுவன; அவர்களது வாழ்க்கையிலேயே இணைப்புறுவன; நூல் வழக்குடன் நில்லாமற் பேச்சு வழக்கிலும் உள்ளவை. ஆகையால் இம்மொழிகளில் தேர்ச்சி பெறுவோருக்குப் படித்தல் எழுதல் என்ற பயிற்சி வகைகள் மட்டும் போதா; பேச்சுப் பயிற்சியும் வேண்டும்.

பாடசாலையில் பேச்சுப் பயிற்சியென்று தனிப்பயிற்சி யளிக்கவேண்டுமா? படிக்கத் தெரியாதவரும் பழக்கத்தால் பேசத் தெரிந்திருக்கவில்லையா? ஊமையல்லாதார் எவரும் பேசத் தெரிந்தவராயிருக்க, இத்தனிப் பயிற்சி ஏன்? இவ்வாறான கேள்விகள் சிலர் மனத்தில் எழக்கூடும். ஆனால் இங்குப் 'பேசுந்திறமை' என்பதன் பொருள் என்ன? மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையாற் பொய்போலுமே' என்ற நீதி வாக்கியத்தைச் சிந்திக்க! மெய்யுடையோனும், பொய்யுடையோனும் பேசத் தெரிந்தோரே. ஆயினும் ஒருவன் சொல் பயன்படாததற்கும் மற்றவன் சொல் பயன்படுவதற்கும் காரணமென்ன? பொய்யன் தன் சொல்வன்மையினால் மெய்யனாய்த் தோன்றுகிறான்; மெய்யன் அவ்வன்மை வாய்க்கப்பெறாது பொய்யனாய்த் தோன்றுகிறான். இங்கு நாம்

அறியும் கருத்து யாது? பேசுங்கால் பயன்படப் பேச வேண்டும். பயன்படப் பேசுதற்குச் சொல்வன்மை வேண்டும். இவ்வன்மை சிலரிடமே இயற்கையாய் அமைந்திருக்கும். அவ்வண்ணம் இயற்கையாய் அமையப் பெருதோர் பயிற்சி வழியாகத்தான் பெறவேண்டும். இப்பயிற்சியும் இளமை யிலேயே செய்யப்படவேண்டும்; இதற்கு ஏற்ற இடம் பாடசாலையே.

ஆகவே உலகு வழக்கு மொழிகளில் தேர்ச்சி பெறு வோருக்குப் படித்தல், எழுதல், பேசல் என்ற மூவகைப் பயிற்சிகளும் வேண்டும். தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் தம் பிள்ளைகட்கு இந்த மூன்றுவிதப் பயிற்சித் துறைகளையும் வழங்கல் வேண்டும்.

படித்தல், எழுதல், பேசல் என்ற மூன்றினும் பிள்ளைகள் முதலிற் பழகுவது பேசலிற்ருன். சிறுவர் சிறுமியர் படிக்கத் தொடங்கு முன்னரே பேசக் கற்றுக் கொள்கின்றனர். இங்கு அவர்கட்கு உதவுவது பாடசாலை ஆசிரியரன்று; பெற்ருேரும், தமக்கை, தமையன் முதலான மற்ருேருமே ஆசிரியராகின் றனர். ஆகவே பிள்ளைகள் பாடசாலைக்கு வருங்கால் சிறிது மொழித் தேர்ச்சி பெற்றே இருக்கின்றனர்.

'தெரிந்த விடயத்தின் உதவியால் தெரியாத விடயத் தைக் கற்பித்தல்' ஒரு முறை. அதனை யொட்டிப் படித்தல், எழுதல் என்ற இரண்டு பயிற்சிகளையும் பேச்சுப் பயிற்சி வழியே அளித்தல் நன்ருகும். தவிர இம்மூன்றினும் பிள்ளை கட்கு எளிதாயிருப்பது பேச்சுப் பயிற்சி. முதல் இரண்டு மூன்று வகுப்புகளில் இத்துறையில் தான் அதிகப் பழக்க மளிக்க இயலும். ஆகையால் இப்பயிற்சியை முதற்கண் ஆராய்வோம்.

பேச்சுப் பயிற்சி

இப்பயிற்சியின் தனி நோக்கங்கள் யாவை? பிள்ளைகள் தாம் சொல்ல நினைக்கும் விடயங்களைத் தெளிவுறச் சொல்ல வேண்டும்; வேண்டியன சேர்த்து வேண்டாதன ஒதுக்கிச்

சொல்லத் தெரிதல்வேண்டும்; கோவையாய்ச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லுங்கால் சொற்பிழை யிருத்தல் கூடாது; உச்சரிப்புப் பிழையும் இருத்தல் கூடாது.

இந்நோக்கங்களை ஈடேற்றுவிக்க ஆசிரியர் செய்யத் தக்கன என்ன? பிள்ளைகளுடன் அடிக்கடி பேசவேண்டும். தெளிவாய்ப் பேசவேண்டும்; பொருட் பிழை, சொற் பிழை, உச்சரிப்புப் பிழைகளின்றிப் பேசவேண்டும்; அவசரப்படாமல் நிறுத்திப் பேசவேண்டும்; சிறு சிறு வாக்கியங்களிற் பேச வேண்டும்; பிள்ளைகட்கு உற்சாக மூட்டுவதற்கு அடிக்கடி வேடிக்கையாகவும் பேசவேண்டும்.

பிள்ளைகளையும் பேசச் செய்யவேண்டும். பேராசிரியரைப் போன்று பிரசங்கம் செய்து கொண்டு போதல் இவ் வகுப்புகளில் பயன்படாது; ஆசிரியர் பேச்சொலியைத் தாலாட்டாய்க் கொண்டு பிள்ளைகள் உறங்கி விடுவர். தவிர 'செயலூடு அறிதல்' (Learn by doing) என்பது ஒருமுறை; கற்கும் பிள்ளைகட்குற்ற முறை. தாய் சோறு ஊட்டுகிருள்; அச்சோற்றை குழந்தை விழுங்கவேண்டும்; விருப்புடன் விழுங்க வேண்டும்; விழுங்கப்படாத சோறு வெளியில் விழுந்துவிடும்; விருப்புடன் விழுங்கப்படாத சோறு வயிற்றில் தங்காமல் வந்த வழியே திரும்பிவிடும்; விரைவாகத் திரும்பி விடும். எனவே பிள்ளை சோறுண்ணுதற்குத் தாய்மட்டும் முயற்சி யெடுத்தல் போதாது; பிள்ளையும் தன்னளவில் சிறு முயற்சி யெடுக்கவேண்டும். தன் முயற்சியின் பயனுய்ப் பிள்ளை எளிதாய் உண்ணும்; உண்ட உணவும் குடலில் தங்கிக் குணமளிக்கும். சோறுண்ணுதற்கு உரிய 'தன் முயற்சி' கல்வி கற்றற்கும் உரியதே. ஆசிரியர் கற்பிப்பர். அவர் கற்பிக்கும் விடயங்களைத் தம்மனத்தில் வாங்கிக் கொள்ளவும், அவைகளை ஆங்கே இருத்தவும் பிள்ளைகள் தம்மளவில் முயற்சி மேற் கொள்ளவேண்டும். இம்முயற்சி வழிப்படாத அறிவு வயிற்றில் தங்கா உணவைப்போல் நிலைக்காது. மொழிப் பாடத்தில்

மட்டுமல்ல; மற்றெல்லாப் பாடங்களிலும் இம்முயற்சி வேண்டியதே. இக்காரணம் பற்றியே ஒவ்வொரு பாடத்திலும் பயிர்சி வகைகள் வகுக்கப் படுகின்றன. இப்பயிற்சி வகைகள் பிள்ளைகளின் தன்முயற்சியைத் தூண்டக் கூடியன.

இளம் பிள்ளைகள் தம் பெற்றோரை அடிக்கடி 'அது என்ன?' 'இது என்ன'? என்று கேட்பர்; ஆயிரங் கேள்வி கேட்பர்; திரும்பத் திரும்பக் கேட்பர்; கேட்கும் இடம் அறியாது கேட்பர்; காலம் அறியாது கேட்பர். இக்கேள்விகட்குப் பொறுமையுடன் பதிலளிக்கும் பெற்றோர் சிலரே. ஒரே பிள்ளையை அருமையாய்ப்பெற்று வளர்க்கும் பெற்றோரும் 'நச்சு, நச்சு' என்று கேட்கும் பிள்ளைபால் தம் பொறுமையிழந்து அதனை அதட்டி அப்பால் ஓட்டுவர்; இளம்பிள்ளைகட்கு, அறிவுதெரியாப் பிள்ளைகட்குப், பசி, தாகங்களைப் போல் இதுவும் இயற்கையாக அமைந்த வேட்கையென்பதை இவர்கள் உணர்வதில்லை.

இந்த வேட்கை அறிவு வேட்கை; பலவிஷயங்களையுந் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை. ஆழ்ந்து நோக்கின் இவ்வேட்கை தன் முயற்சியைக் குறிப்பதாகும். பிள்ளையின் தன்முயற்சியைத் தூண்ட விரும்பும் ஆசிரியர் இந்த இயற்கைக் குணத்தைப் பற்றிக்கொள்ளல் நன்று. அவர்கள் கேட்குங் கேள்விகட்கெல்லாம் பதில் சொல்லவேண்டும். ஒரே பொருளைப்பற்றிப் பன்முறை சொல்ல நேரிடினும் நேரிடும். பிள்ளைகளின் இயற்கை ஆர்வத்தை வழிப்படுத்தி பயன்படும் விடயங்களைச் சம்பாஷணை (அளவளாவல்) முறையில் கற்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் பலவித படங்கள் இருக்கும்; இவைகளிற் சில கதைச் சித்திரங்களாயும் இருக்கும். அச்சுப் படங்கள் இல்லாத பாடசாலைகளில் ஆங்குள்ள ஆசிரியர் தாமாகவே படங்கள் வரைந்து கொள்ள வேண்டும். இப்படங்களைப் பிள்ளைகட்குக் காட்டி சம்பாஷணை நடத்தலாம்.

சிறு பிள்ளைகட்கென இனிய கதைகள் பல உள. ஆசிரியர் தமது பிள்ளைகட்கு ஏற்ற கதைகளைப் பொறுக்கி யெடுத்து, தினம் ஒன்று இரண்டு சொல்லலாம். சிலர் 'கதை சொல்லுகிறேன்' என்று பிள்ளைகட்குச் சொல்லிக் கதைப் புத்தகத்தை வைத்துக்கொண்டு படித்துக் காட்டுவர். இம் முறை சிறுவர்க்கு ஏற்றதன்று. இது 'கதை படித்தலே' ஒழியக் 'கதை சொல்லல்' அன்று. ஒரு கதையை வாயாற் சொல்லுங்கால் குரல் ஏற்றத் தாழ்வு, பார்வை, கைச் சைகை முதலிய சாதனங்களை மேற்கொள்ளக் கூடும்; இச் சாதனங்கள் கதை கேட்போருக்குக் கதையில் சுவை யுண்டாக்கக் கூடியவை. கதை படித்தலில் இச்சாதனங்களை மேற் கொள்ள இயலாது; கதையும் சுவைக்காது; பிள்ளைகளின் கவனமும் கதையில் நிலைக்காது.

ஒரு கதையைச் சொல்லி முடித்ததும் அதனையே பிள்ளைகள் சொல்லுமாறு செய்யலாம். அக்கதையிற் கேள்விகளுங் கேட்கலாம். அதே கதையை நடித்துக் காட்டவுஞ் செய்யலாம்.

சிறுபிள்ளைகட்குப் பாட்டுப் பாடுவதில் வெகு ஆசை; அபிநயப்பாட்டுக்களில் இன்னும் அதிக ஆசை. பேசத்தெரியாத பருவத்திலும் தாயின் தாலாட்டைக் கேட்கும் குழந்தை தன் தாயைப் போல் பாட முயல்கிறதன்றோ? இந்த இயற்கைக் குணத்தையும் ஆசிரியர்மொழித்தேர்ச்சியிற் பயன்படுத்தலாம். வேடிக்கையான சிறு பாட்டுக்கள் பல இருக்கின்றன. இவைகளைப் பாடச் செய்யலாம்.

இவ்வாறு பேச்சுப் பயிற்சி யளித்து வருகையில் ஆசிரியர் தமது பிள்ளைகள் சொற்களைச் சரிவர உச்சரிக்கிறார்களா என்று கவனிக்க வேண்டும். உச்சரிப்புப் பிழைகளை இளம் பருவத்திலேயே திருத்த வேண்டும்; இன்றேல் பிள்ளைகள் வயதேறிய காலத்திலும் பிழைபட உச்சரிப்பர்.

(தொடரும்)

உறவோன்.

உடல்இயலும் உடல்நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
தலைமையாசிரியர், குடவாயில்.

சேர்க்கை IV

(அ)

ஆண்டிற்கும் உயரத்திற்கும் தக்கபடி உள்ள சராசரி நிறை.

ஆண்கள்.

ஆண்டு. உயரம் :—அடி அங்குலம். (முற்றொடர்ச்சி 471-வது பக்கம்.)

ஆண்டு.	4-11	5-0	5-1	5-2	5-3	5-4	5-5	5-6	5-7	5-8	5-9	5-10	5-11	6-0	6-1	6-2	6-3	6-4
16	101	103	106	109	112	116	120	124	128	132	136	141	146	151	156	161	166	171
18	105	107	110	113	116	120	124	128	132	136	140	145	150	155	160	165	170	175
20	109	111	114	117	120	124	128	132	136	140	144	148	153	158	163	168	173	178
22	111	113	116	119	123	127	131	134	138	142	146	150	155	160	165	170	175	180
24	113	115	118	121	125	129	133	136	140	144	148	152	157	163	169	174	179	184
26	115	117	119	122	126	130	134	138	142	146	150	155	160	166	172	178	183	188
28	117	119	121	124	127	131	135	139	143	147	151	156	162	168	174	180	185	190
30	118	120	122	125	128	132	136	140	144	148	153	158	164	170	176	182	188	193
32	119	121	123	126	129	133	137	141	146	150	155	160	166	172	178	184	190	195
34	120	122	124	127	130	134	138	142	147	152	157	162	168	174	180	186	192	198
36	121	123	125	128	131	135	139	142	148	153	158	163	169	175	182	188	194	200
38	122	124	126	129	132	136	140	144	149	154	159	165	171	177	184	190	196	202
40	123	125	127	130	133	137	141	145	150	155	160	166	172	178	185	192	198	204
42	124	126	128	131	134	138	142	146	151	156	161	167	173	179	186	193	200	206
44	125	127	129	132	135	139	143	147	152	157	162	168	174	180	187	194	201	207
46	126	128	130	133	136	140	144	148	153	158	163	169	175	181	188	195	202	208
48	126	128	130	133	136	140	144	148	153	158	163	169	175	182	189	196	203	209
50	126	128	130	133	136	140	144	148	153	158	163	169	175	182	189	196	203	209
52	127	129	131	134	137	141	145	149	154	159	164	170	176	183	190	197	204	210
54	127	129	131	134	137	141	145	150	155	160	165	170	176	183	190	197	204	211

குறிப்பு:—இவ்வுயரம் செருப்பின்றி எடுக்கப்பட்டது. நிறை, பவுண்டில் எடுக்கப்பட்டிருக்கிறது. (1 பவுண்டு—$1\frac{3}{5}$-சேர்). குறித்திருக்கும் நிறையில் 2 பவுண்டு உடைக்காக (ஒரு இடைத்துணி, ஒரு துண்டு) சேர்க்கப்பட்டிருக்கிறது.

(ஆ)

பெண்கள்.

ஆண்டு. உயரம் :—அடி அங்குலம்.

ஆண்டு	4-6	4-7	4-8	4-9	4-10	4-11	5-0	5-1	5-2	5-3	5-4	5-5	5-6	5-7	5-8	5-9	5-10
16	102	104	106	108	109	111	114	117	120	124	128	132	136	139	143	148	153
18	104	106	108	110	112	114	117	120	123	126	130	134	138	141	145	150	155
20	106	108	110	112	114	116	119	122	125	128	132	136	140	143	147	151	156
22	107	109	111	113	115	117	120	123	125	129	133	137	141	145	149	153	157
24	109	111	113	115	117	119	121	124	127	130	134	138	142	146	150	154	158
26	110	112	114	116	118	120	122	125	128	131	135	139	143	147	151	155	159
28	111	113	115	117	119	121	123	126	130	133	136	141	145	149	153	156	160
30	112	114	116	118	120	122	124	127	131	134	138	142	146	150	154	157	161
32	113	115	117	119	121	123	125	128	132	136	140	144	148	152	155	158	162
34	115	117	119	121	123	125	127	130	134	138	142	146	150	154	157	160	163
36	116	118	120	122	124	126	128	131	135	139	143	147	151	155	158	161	164
38	117	119	121	123	125	127	130	133	137	141	145	149	153	157	160	163	166
40	119	121	123	125	127	129	132	135	138	142	146	150	154	158	161	164	167
42	120	122	124	126	128	130	133	136	139	143	147	151	155	159	162	166	169
44	122	124	126	128	130	132	135	138	141	145	149	153	157	161	164	168	171
46	123	125	127	129	131	133	136	139	142	146	150	154	158	162	165	169	172
48	124	126	129	130	132	134	137	140	143	147	152	156	160	164	167	171	174
50	125	127	129	131	133	135	138	141	144	148	152	156	161	165	169	173	176
52	125	127	129	131	133	135	138	141	144	148	152	157	162	166	170	174	177
54	125	127	129	131	133	135	138	141	144	148	153	158	163	167	171	178	181

குறிப்பு :—இவ்வுயரமும் செருப்பின்றியே. தே-உடை நகைக்காக 6 பவுண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது (புடவை ரவிக்கைக்காக 2 பவுண்டும், நகைக்காக 4 பவுண்டும்.)

சேர்க்கை V.

முதல் உதவி செய்வதற்குப் பயன்படக்கூடிய பொருள்கள். *

1. உடற் சூட்டுமட்டு (Clinical Thermometer)

2. தூய பஞ்சு (போரிக் நீரில் நனைத்தது)—அரைச் சேர்.

3. வெள்ளைத்துணி; 1, 2, 3 விரற்கிடை (அங்குலம்) அகலமுடைய சுருட்டு வகைக்கு நான்கு.

4. நாடா, கயிறு, ஊசி, நூல், பிடிப்பு ஊசிகள் (Safety pins).

5. கத்திரிக்கோல் (தட்டை நுனியுடையது) †

6. முள்வாங்கி.

7. கத்தி.

8. சலவைத்துணி (போரிக்நீரில் (Boric lotion) நனைத்தது) ஒரு முழம்.

9. எண்ணெய்ப்பட்டு அரை முழம் ‡

10. மும்முடக்கித்துணி †† (Triangular Bandage) இரண்டு அவுன்ஸ் குவளை (Ounce glass).

மேலே தடவக்கூடிய மருந்துகள்.

11. சாராயப் புகைக்கல் **(Tincture of Iodine) 1 அவுன்சு

12. அமிர்தாஞ்சனம் ஒரு குப்பி.

---

* இவைகளை முதல் உதவிப் பெட்டி என்கிற பெயருடைய ஒரு சிறு பெட்டியிலிட்டு வேண்டிய பொழுது எடுத்துக் கொள்ளத் தக்கவிடத்தில் வைத்திருக்க வேண்டும். பயணப்பட்டால் இதை எடுத்துச் செல்லல் நலம்.

† கத்திரிக்க அல்ல உடலைப் பிடிக்க அல்லது கிள்ள.

‡ ஈரத்துணி, எண்ணெய்த்துணி வைத்து ஒற்ற அல்லது கட்ட நேர்ந்தால் ஊறு தபடி இத்துண்டைப் போட்டுக் கட்டல் ஆகும்.

†† கையேணை, திறப்புக் கட்டு (Open Bandage) அகலமடிப்புக்கட்டு முதலிய கட்டுகளைக் கட்ட உதவும்.

** வீக்கம், காயங்களுக்குத் தடவ உதவும்.

13. சுண்ணும்பு எண்ணெய் (Carron Oil) † 1 அவுன்சு

14. கசப்புப் புளிப்பு ‡ (Picric Acid).

15. போரிக்தூள் $ (Boric Powder)

16. வெடியுப்பு முதல் மங்கனு * (Pottassium (Permanganate).

17. தலைவலித்தைலம் ** (Eucalyptus Oil).

18. நெருப்புப் புளிப்பு *† (Nitric Acid).

19. கடுகு ††.

20. சுண்ணும்பு ‡‡

21. மோப்ப உப்பு $$ (Smelling Salt).

---

† நெருப்பால் வெந்த இடங்களின் மேல் தடவ உதவும். இதைச் செய்யத் தேங்கா யெண்ணெய் அல்லது ஆளிவிதை எண்ணெயுடன் (Linseed Oil) ஒத்த அளவு சுண்ணும்பு நீரைச் சேர்க்க.

‡ இது புண்ணின் மேல் தடவ உதவும்.

$ சிரங்கு, காயங்களைக் கழுவத் தகுந்த நீரை உண்டாக்க, இதைப் போட்டுக் கரைத்துக் கொள்ளலாம். புண்ணிமேல் போட்டுக் கட்ட உதவும்.

* பாம்பு, தேள்கடி வாயில் வைக்கலாம். சிரங்குகளைக் கழுவும் நீரைச் செய்ய இதைக் கரை.

** சளி, வெப்பு, இருமல், குளிர், காற்று (வாத) நோய், கழிச்சல், கை கால் இடுப்பு பல்வலிகள், சொரி, சிரங்கு, வெட்டுப் புண், சுட்டுப் புண் முதலியவைகளுக்குப் பயன்படும்.

*† தேளின் கொட்டு வாயில் ஒரு ஈர்க்கால் சிறிதுவைத்து ஒரு துடிக்கெல்லாம் கழுவி எண்ணெய் தடவ வலிநீங்கும்.

†† காலராவில் கெண்டையேற்றத்திற்குப் பற்றுப் போட உதவும்.

‡‡ அறுத்த விடத்தில் வைக்கலாம்.

$$ சளி பிடித்திருந்தால், மூர்ச்சையாய் இருந்தால் மூக்கில் பிடித்தல் நன்று.

உள்ளுக்குக் கொடுக்கக் கூடியவை.

22. சுக்கு, மிளகு, திப்பிலி[1], அரத்தை[2] வகைக்கு ஒரு தோலா.

23. கழிச்சல் உப்பு * (Epsom Salt) அரைச் சேர்.

24. விளக்கெண்ணெய் அரைச் சேர்.

25. கழிச்சல் பட்டை † (Cascara Sagrada).

26. கொயினா ‡ (ஒரு பொட்டணம்).

27. சமிக்கும் நீர் § (Carminative Mixture).

28. நவச்சார முதல் கரிப்பு $ (Sal Volatile).

29. கிராம்பு எண்ணெய் **.

30. கஸ்தூரி மாத்திரை ††.

31. முப்பூர பதங்கம் ‡‡.

---

1 இவற்றைக் காற்றுநோய் (வாயுத்தொந்தரவு) சமிக்காமை முதலியவற்றிற்குத் தனியேயும், சேர்த்தும் பயன்படுத்தலாம்.

2 இருமலுக்குச்சிறிது வாயில்போட்டு அடக்கிக் கொள்ளலாம்.

* வெளிக்குப் போகும்படி செய்யும். காலேவீசம் தோலா முதல் ஒரு தோலாவரை கொடுக்கலாம்.

† முன்போலவே அரைக்கால் தோலா முதல் காலே வீசம் வரை கொடுக்கலாம்.

‡ காய்ச்சலுக்கு 5 முதல் 15 அரிசியெடை (Grains) கொடுக்கலாம்.

§ சமிக்காமைக்கு ஒன்று முதல் இரண்டு அவுன்ஸ் வரை கொடுக்கலாம்.

$ இது (Ammonium Carbonate) ஒரு கிளர்ச்சிக் குடியாகும். 5 முதல் 15 சொட்டு வரை நீரிற் கலந்து கொடுக்கலாம்.

**. உள்ளுக்குச் சில சொட்டுகள் கொடுக்கலாம். வயிற்று நோய்களை நீக்கும்.

††. காய்ச்சல், நளிர், சன்னி, சமியாமை, வயிற்றுப் போக்கு, கழிச்சல் இவைகளுக்கு ஒரு மாத்திரை முதல் 2-வரை தக்க உதவி ஊணுடன் (அநுபானத்துடன்) கொடுக்கலாம்.

‡‡. இதை அரிசி எடை கொடுத்தால் காற்று நோய், சமியாமை, நளிர், சன்னி, காய்ச்சல் முதலியன நீங்கும்.

32. வீரசிந்தூரம் *.

33. ஓமநீர் ‡.

இவைகளைத் தக்க குப்பிகளிலடைத்துத் தனிப்பெட்டியில் (First Aid Box) போட்டு வைத்துக்கொள்ளல் மிக நன்று. வேற்றூர் போம்பொழுது இப்பெட்டியுடன் செல்லல் தமக்கே யன்றிப் பிறருக்கும் பயன்படும்.

சேர்க்கை VI.

சில இடையூறுகளுக்கான முதலுதவிகள்.

1. **மூக்கால் குருதிஒழுகினால்:**—தலையை நிமிர்ந்து, தொங்க விடாமல் உட்காரச்செய்து, கழுத்திலுள்ள உடையைத் தளர்த்து. கையைத் தலைக்குமேல் தூக்கிவை, மூக்கின் அடி, பிடரி, தோள்பட்டைகளுக்கு இடை இவைகளில் குளிர் நீரில் நனைத்ததுணியால் ஒற்று. நிற்காவிட்டால் பிச்சாங் குழாயால் குளிர்நீரை வெளிவரும்படி மூக்கினுள் அடி, நின்றால் மூக்கை சில மணிப்பொழுது சிந்த விடாதே.

2. **மூக்கினுள் வேறு பொருள் புகுந்துவிட்டால்:**—மூக்கின் ஒரு தொளையில் சிறு பொருள்கள் புகுந்துவிட்டால் மற்றொரு தொளையை மூடிக்கொண்டு நன்றாய்ச் சிந்து; அல்லது அதில் கிரியைவிட்டுத் தும்மச்செய். வேறு கருவிகொண்டு எடுக்காதே.

3. **கண்ணில் மண் அல்லது பூச்சி விழுந்தால்:**—கையால் கசக்காதே. காரித் துப்பிக்கொண்டே கண்ணை விழித்துக் கொடு. இதனால் பெரும்பகுதி நீங்கிவிடும். இன்றேல் அப்பொருள் மேலிமையின் கீழிருந்தால் ஒருவரை ஒரு தீக் குச்சியின் உதவியால் மேலிமையைப் பிதுக்கச்செய்து துணி

---

*. இது கழிச்சலு (காலரா) க்குக் கைகண்ட மருந்து. ஒரு அரிசி எடை தேனில் குழப்பிக் கொடுக்கவும். இதனால் மலம்கட்டினால், கடுகு ரோகணி மாத்திரை கொடுக்கவும். நீர்கட்டினால் வெடியுப்புத் திராவகம் கொடுக்கவும்.

†. வயிற்றுவலி, சமியாமைக்குத் தக்க மருந்து.

நுனியால் எடுக்கச்சொல்லு; கீழிமையின் கீழிருந்தால் அதைக் கீழே இழுத்து முன் போல் எடுக்கச்செய். அல்லது கண்ணினுள் ஒரு சொட்டு விளக்கெண்ணெய்விடு. கண்ணில் சுண்ணும்பு அல்லது வேறு நீர்ப்பொருள் விழுந்தால் பால் கலந்த நீரால் கழுவு.

4. காதுவலி:—சிறிது வெதுவெதுப்பான எண்ணெயைக் காதில்விட்டுத் தவிட்டை வறுத்துக் கம்பளித் துணியில் போட்டு ஒற்றுக்கொடுக்கவும்.

5. பல்வலி:—உப்பைப் பொடிசெய்து வலிக்கிற இடத்தில்வை. அதில் நிற்காவிடில் கிராம்பு எண்ணெய் அல்லது சூட எண்ணெயைச் சிறிது பஞ்சில் நனைத்து வை. பின் வெடியுப்பு முதல் மங்கனு (கறுஞ்சிகப்பாகக்) கரைத்த நீரால் கொப்பளி. பின் ஈறை உலர்த்திச் சாராயப் புகைக் கல்லைச் சிறிது தடவு.

6. தலைவலி:—தூயகாற்றில் மூச்சுவிடச் செய். நவச்சாரமுதல் கரிப்பில் (Sal volatile) அரைத் தேக்கரண்டி எடுத்து நீரிற்கலந்துகொடு. பிடரியில் கடுகுப் பற்றுப்போடு. நெற்றியைக் குளிர் நீரால் நனை. (மூலைப்பாலை வெள்ளைத் துணியில் நனைத்துப் போடலுமாம்.)

7. வயிற்றுவலி:—(1) விளக்கெண்ணெயைச் சிறிது வயிற்றில்தடவி உள்ளுக்குங்கொடு. அல்லது (2) உப்பு முதல் இரட்டைக் கரிப்பில் (Sodium Bicarbonate) அரைத்தேக்கரண்டி நீரில் கலந்துகொடு. (3) அல்லது மிளகு மிட்டாய் நீர் (Peppermint Water) கொடு. (4) அல்லது இலவங்கப் பட்டைச்சத்து (Essence of Cinnamon) அல்லது சூடச்சத்தில் (Spirit of Camphor) ஐந்து சொட்டைச் சர்க்கரையில் கலந்து கொடு. வெந்நீரைக் குப்பியிலடைத்து ஒற்றுக்கொடு.

8. மயக்கம்:—தினிப்பையின் கெடுதலால் உண்டாயின் வெதுவெதுப்பு நீரை நிறையக் குடிக்கச்செய்து தொண்டையைக் கைவிரலால் குடைந்து வாயாலெடுக்கச் செய். எருக் கட்டியிருந்தால் சவர்க்காரங் கலந்த நீரால் குடற் கழுவல் (Enema) செய். பிடரியில் கடுகுப் பற்றுப்போடு.

9. உணர்விழத்தல் (Fainting):—இது மூளைக்குக் குருதி பாயாததால் உண்டாகிறது. இதற்கு உணர்விழந்தவனின் இறுகிய உடையை அவிழ்த்துவிட்டு, மல்லாந்து, கால் சிறிது உயரமாக இருக்கும்படி படுக்க வைக்கவேண்டும். மூக்கில் நாற்ற உப்பைப் பிடித்திடுக. பின் விழுங்கக் கூடுமாயின் நவச்சார முதல் கரிப்பு கலந்த நீரைக் கொடுத்திடுக.

10. இருமல்:—அரத்தைத் துண்டை வாயில் போட்டுக் கொள்ளுக. ஒத்த அளவு சூடான பாலும் சோடா நீரும் கலந்து குடித்திடுக. இதில் உப்பு முதல் இரட்டைக்கரிப்பு (Sodium bicarbonate) ஒரு சிட்டிகை சேர்த்துக் கொள்ளலாம். தொண்டையைக் குளிர்நீர்த் துணியால் (ஈரம்படாது எண்ணெய்ப் பட்டில்சுற்றி) ஒற்றுக. சாராயப்பிசின் (Friar's Balsam) ஒரு தேக்கரண்டி கலந்த வெந்நீராவியை மூக்கால் இழுக்க.

11. மின்சத்து அதிர்ச்சி:—இதற்கு முன்னுல் மின் ஓட்டத்தை (Current) நிறுத்தவேண்டும். அதற்குக் காய்ந்ததுணி அல்லது காய்ந்த மரப்பலகைமேல் நின்றுகொண்டு கையைத் துணியால் மூடிக்கொண்டே இணைப்பை நீக்கவேண்டும். அவனுக்கு நவச்சார முதல்கரிப்புக் கலந்த நீர் அல்லது காப்பி கொடுக்கவேண்டும். வேண்டுமாயின் செயற்கை மூச்சை உண்டாக்கவேண்டும். இடி விழுந்தவனுக்கும் இவ்வாறே செய்யலாம்.

12. நாய்க்கடி:—நச்சு நீக்கி நீரால் (Antiseptic) கழுவி, போரிக்தூள் தூவிக்கட்டு. பித்துப் பிடித்த நாயாயின் கடிவாய்க்குமேல் கயிறுல் இறுக்கிக் கட்டி, அல்லது திருப்புக் கட்டால் (Tourniquet) குருதி ஓட்டத்தை நிறுத்தி, கடிவாயில் அறுத்துக் குருதி ஒழுக்கை உண்டாக்கு. அவ்விடத்தைக் கழுவிக் கரிப்புளிப்பு அல்லது திப்புளிப்பால் வேகச்செய். நாய்கடி மருத்துவ நிலையத்திற்கு அனுப்பு.

13. நஞ்சுண்டால்:—

(அ) உடனே மருத்துவருக்குச் செய்தியைத் தெரிவி.

(ஆ) வாயில் கரையிருந்தால் வாயாலெடுக்கச் செய்யாதே. இன்றேல் செய். ஒரு குவளை வெதுப்பு நீரில் ஒரு பெரியகரண்டி கடுகு அல்லது இருகரண்டி உப்புப்போட்டுக் கொடுத்துப்பின் தொண்டையைச் சுரண்டு.

(இ) மூச்சு நின்றால் செயற்கை மூச்சு உண்டாக்கு.

(ஈ) தூக்கம் வந்தால் தூங்கவிடாதே. மூஞ்சியில் குளிரடித்து, காப்பி கொடுத்து, முதுகில் அடித்து, காதில்கத்தி, நடக்கவைத்து எப்படியாவது விழித்திருக்கச்செய்.

(உ) எந்த நச்சு உட்கொள்ளப் பட்டிருக்கிறதென்று கண்டு பிடித்து அதற்கான உதவிகளைச் செய்.

I. புளிப்புகளில் (Acids) ஒன்றை உட்கொண்டிருந்தால் மக்கனு (Magnesia), சலவை உப்பு (Washing Soda) ஆகியவற்றுள் ஒன்றை, சீமைச்சுண்ணும்பு, வெள்ளையடிக்கிற சுண்ணும்பு அல்லது சுவரில் வெள்ளை அடித்திருப்பதையாவது சுரண்டிப் பாலில் கலந்து சிறிது சிறிதாக அடிக்கடிகொடு. பின் ஆலிவ் எண்ணெய் (Salad Oil) அல்லது சிறிது பனிக்கட்டி கொடு. [கரிப்புளிப்பாயின் ½ oz. கழிச்சல் உப்பைத் தண்ணீரிற்கரைத்துக்கொடு.]

II. காரங்களில் (Alkalies) ஒன்றுயிருந்தால் எலுமிச்சம் பழச்சாறு அல்லது காடி அல்லது புளியை நீரில் கலக்கிக் கொடு. பிறகு பனிக்கட்டியாவது எண்ணெயாவது கொடு.

III. செம்பு, ஈயம், ரசம் முதலியவற்றின் கூட்டுப் பொருள்களாயின் வாயாலெடுக்கச்செய். பின் பாலும் முட்டையும் கலந்து கொடு. வயிற்றைச் சூடாக்கு.

IV. வெள்ளியின் கூட்டுப் பொருள்களாயின், உப்புநீரும் கலந்துகொடு. வயிற்றைச் சூடாக்கு.

V. தீ முறுகலாயின் வெடியுப்பு முதல் மங்கனுவை நீரில் கலந்துகொடு. வாயாலெடுக்கச்செய். எண்ணெய் கொடுக்காதே.

VI. கண்ணாடித் தூளாயின் திணிப்பை கிழிந்து போகா மலிருக்க மிகுதியாகச் சாதம், வாழைப்பழங் கொடுத்துப் பின் வாயாலெடுக்கச்செய்.

VII. கரி வெடியுப்புக் காற்றுப் புளிப்பு (Prussic Acid) வெடி முதல் கரிவெடிக்காற்று (Pottassium Cyanide) ஆயின் மூக்கில் நாற்ற உப்பைப்பிடி. செயற்கை மூச்சை உண்டாக்கு.

VIII. எட்டிக் கொட்டை அல்லது அதன் சத்தாயின் வாயா லெடுக்கச் செய்து பால் முதலிய குடிகளைக்கொடு. பின் இருட்டு அறையிலிருக்கச்செய் (வெளிச்சமும், ஒலியும் வலிப்பை உண்டாக்கும்).

IX. ஊமத்தை அல்லது நச்சுக் கொட்டைகளாயிருந்தால் வாயாலெடுக்கச் செய்து எலுமிச்சம்பழத்தைச் சப்பச்செய். சூடான காப்பிகொடு.

X. கஞ்சா, அபின், இவை கலந்த பொருள்களாயிருந்தால் வெடியுப்பு முதல் மங்கனு கலந்த (கருஞ் சிவப்பாக) நீரைக்கொடு. விழித்திருக்கச் செய்.

XI. புகையிலை நச்சாயின் புளியைக் கரைத்துக் கொடு. அல்லது கிளர்ச்சிக் குடிகளைக் கொடு.

XII. குடிமிகின் சூடான காப்பியும் கழிச்சல் உப்புங்கொடு.

XIII. நீலமைக்கல் (Antimony) ஆயின் வாயாலெடுக்கச் செய்து தேநீர் அல்லது காப்பிநீர் கொடு.

XIV. மண்ணெண்ணெயாயின் முன்போல் வாயாலெடுக்கச் செய்து தே காப்பி நீர் கொடு.

XV. எட்டிக்கு நாகல்,எழு தோணி* க்குத் தான்றிக்காய்
வட்டமலர்ஊமத்தைக்குத் தாமரையாம்—ஒட்டியதோர்
நீற்றுக்கு மஞ்சளாம், நெய்குடிக்கில் வெங்காரம்,
தாவியபா ஷாணம் தனிமிளகு—ஓவியதோர்
வெற்றிலையோ டெண்ணெய் விளாவிக் குடிப்பவர்க்கு
முற்றினதேங் காய்ப்பால் மொழிந்தனமே-இத்தனையும்
நீவிக்குத் திருமென்று நிச்சய மாய்முனிவர்
பாவித்துச் சொன்னார் பரிந்து. [அகஸ்தியர்-12,000].

செயற்கை VII. நச்சை எதிர்ப்பவைகள் (Antiseptics).

எண்.	பெயர்.	அளவு.	பயன்.	குறிப்பு.
1	சாராயப் புகைக்கல்	2 சேர் நீரில் ஒரு தேக்கரண்டி	(1) புண்களில் தடவலாம் (2) இதனால் வெட்டுப்புண்களைக் கழுவலாம்.	
2	போரிக் புளிப்பு	ஷை அளவு	ஷை	இதனால் கண்ணையுங் கழுவலாம்.
3	லைசால்	ஷை	ஷை	நன்றாய்க் கழுவித் தூய்மை யாக்கும். கரிப் புளிப்பினால் உண்டாகுங் கேடில்லை.
4	கரிப்புளிப்பு	100பங்கு நீரில் 5பங்கு	ஷை	உடலுட்சேர்ந்து கேடுவிளைக்கும்.
5	உயிர்க்காற்று நீர் Hydrogen per oxide	5 முதல் 10 பங்கு வெதுப்பு நீரில் 1 பங்கு	ஷை	நல்ல கெடுதி தாராதநச்சுநீக்கி.
6	வெடியுப்புமுதல்மங்ன	கறுஞ்சிகப்புக் கரை நீர் (Solution)	ஷை	துணியைக் கறையாக்கும்.
7	உப்பு	சிறிது கரைத்தது.	ஷை	இது வேண்டிய அளவு ஊநீரை ஊறச் செய்து நச்சை நீக்கும் சிறிது நச்சுப்பட்ட புண்ணிற்கு இதுவே தக்க கழுவு நீராகும்.
8	ரசஉப்புக்காற்று (Per Chloride of mercury	2000 பங்கு நீரில் 1பங்	ஷை.	இது கொடியநச்சாகும். ஆதலின் யாவரும் பயன் படுத்தலாகாது.
9	சீனக்காரம்	15 சேர் நீரில் 6 கிரெயின்	நீரில் கலந்திருக்கும் பொருள்களையும், நச்சுக் கூடுகளை நீக்கும்.	

சேர்க்கை - VIII

நீரில் தத்தளிப்பவனைக் காப்பாற்றும் வழிகள்:—

1. காப்பாற்றப்புகுமுன் தரையிலிருந்தே அல்லது தண்ணீரிலிருந்தால் முழுகு முன்னே ஒரு துடிப்பொழுதாவது ஆழ்ந்த மூச்சுவிடு. இதனால் எளிதில் மூச்சு வாங்காது. (திணறுது).

2. தத்தளிப்பவனைக் கையால் பிடித்துக்கொண்டு நீ காலால் நீந்திவா. இதற்கு மல்லாந்து நீஞ்சலே நன்று. உன் மூஞ்சி விண்ணை நோக்கவும் முழங்கால்கள் அகன்று நீர் மட்டத்திலிருக்கவும் வைத்துக்கொண்டு நீந்தப் பழகிக்கொள்.

3. தத்தளிப்பவனின் நிலைக்குத் தக்கவாறு அவனைப்பிடித்து வரவேண்டும். அவையாவன:—

I. களைத்துப்போன நீச்சாளாயின் நீ மல்லாந்து உன் இரு தோள்களையும் (கழுத்துப் பட்டை எலும்பின் பின்) அவன் இரு கைவிரல்களாலும் தொடச் செய்து, அவன் உடல் உன் இருகால்களுக்கிடையே நீண்டு குப்புறிககச்செய்து நீந்திவா.

II. அவன் நீஞ்சத்தெரியாது விசையுடன் (Violent) தத்தளிப்பவனுயின் தொலையிலிருந்து கொண்டே சொன்னபடி கேட்பதாக வாக்குறுதி வாங்கிக்கொள். அவன் பின் போய் முண்டாவை முறுக்கிப்பிடித்து உன் கையைநீட்டி அவனை எட்ட வைத்துக்கொண்டே நீஞ்சி வா. உன்னால் அடக்கமுடியாத அவ்வளவு பெரியவனுயின் நீரைக்குடித்து ஆட்டம் அடங்கும் வரைகாத்திருந்து பின் கரையேற்றி செயற்கை மூச்சுக்கொடு.

III. விசையின்றித் தத்தளிப்பவனுயின் முன்போல் ஆனால் அவன் அக்குளில் கையைக் கொடுத்துக்கொண்டுவா.

IV. செயலற்றவனுயின் (Insensible) அவன் மோவாயைப் பிடித்து மூச்சுவிடும்படி மூஞ்சியை மேல்வைத்துத் தொண்டையைப்பிடிக்காது முன்போல் கொண்டுவா.

4. தத்தளிப்பவன் உன்னைப்பிடித்து நீஞ்சவொட்டாது தடுத்தால் நீ தப்புவதற்கான வழிகளாவன:—

1. அவன் விரல்களில் ஒன்றை அல்லது பலவற்றைப் பிடித்து முரிப்பதுபோல் பின்புறம் வளை.

11. உன் வலதுகையை அவன் மோவாயிலும் வலதுமுழங் காலை அவன் வயிற்றிலும் வைத்து உன் வலுக்கொண்டவரை தள்ளு.

111. அவன் மூக்கில் குத்து.

சேர்க்கை IX.

இனிய முழுக்குப் பொடி.

சவர்க்காரத்தைப் (Soap சுகஸ்நானக் கலப்பு) பயன் படுத்தித் தோலைக் கெடுத்துக் கொள்வதன்றிப் பணத்தையும் இழப்பதற்குப் பதிலாக இத்தூளைப் பயன்படுத்தினல் அழுக்கு நீக்கி, நிறங்கொடுத்து, குளிர்ச்சியையும் உண்டாக்கி கண்ணை விளங்கச்செய்யும், இனிய நாற்றமுடையதாயிருக்கும். உடலில் வரும் பருக்கள், முஞ்சியில் உண்டாகும் ஓர்வகைக் கொப் புளங்கள், கற்றாழை நாற்றம், வாய் நாற்றம், அழுக்கு, வேர்வை முதலியவற்றையும் நீக்கும். இதைச் செய்யும் வகை:—

(1) கஸ்தூரிக் கிழங்கு, (2) தும்பராஷ்டகம் (3) அகிற் கட்டைத்தூள் (4) வெண்சந்தனம் * (5) செஞ்சந்தனம் (6) சடாமஞ்சில் (7) சோம்பு (8) உத்தாமணிவேர் (9) ஏலரிசி (10) கிச்சடிக்கிழங்கு (11) கோரைக் கிழங்கு (12) கஸ்தூரி மஞ்சள் (13) சாம்புராணி (14) பூலாங்கிழங்கு (15) செண்பக மொட்டு (16) கிளியூரன்பட்டை (17) பூஞ்சாந்துப்பட்டை (18) கார்போக அரிசி (19) பச்சை இலை—இவைகளில் கஸ்தூரிக் கிழங்கு 5 பலம், ஏனையவை வகைக்கு $2\frac{1}{2}$ பலம் எடுத்துப் பசும்பாலில் நனைத்து வெய்யிலில் வைத்து ஈரப்பசையில்லாமல்

* இவைகளில் 4, 5, 13 எண்ணுடைய பொருள்களை விட்டும் விடாலாம்.

நன்றாக உலர்த்தி, மர உரலில் இடித்துச் சலித்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளுக. குளிக்கும்போது கொஞ்சம் எடுத்துப் பசும்பாலில் குழப்பித் தேய்த்துக் குளிக்க.

சேர்க்கை X.

பற்பொடி.

ஆலும் வேலுமே பல்லிற் குறுதியாலும் இவைகளைப் பயன்படுத்த இயலாதபொழுது கீழ்க்கண்ட விலை நயமுள்ள, பயன் மிகவுள்ள பற்பொடியைச் செய்து வைத்துக்கொண்டு பயன் படுத்தலாம்:—

(1) கருக்கின பச்சை நெல்லுமி † 1 சேர் (2) கருவைப் பட்டை 1 சேர் (3) கிராம்பு 1 பலம், இம்மூன்றையும் இடித்து வடிகட்டிக் கலந்து வைத்துக் கொள்ளுக.

சேர்க்கை. IX.

உடலைப் பற்றிய எண்ணளவைகள்:—

உடலின் சராசரி சூடு 98.°6 பா அல்லது 37° நூ.

குருதி ஏற்றம் ஒரு துடிக்கு 72 முறை நாம் வாளாவிருக்கையில் துடிக்கிறது.

மூச்சு ஒரு துடிக்கு 17 முறை.

சராசரி மகனின் நிறை 225 சேர்.

இதில் நீர் 62% ,,

---

† பச்சை நெல்லுமியை ஒரு சட்டியில் (வாயகன்றது) வைத்து அதன் மேல் (கரித்) தணலை வைத்து அதை உமியால் மூடிவிட உமியெல்லாம் கருகிவெந்துபோம்.

சராசரி மகனின் தசைகள் 96 சேர்; எலும்புகள் 35 சேர்; குருதி 13 முதல் 15 சேர்; மூளை 5 சேர்; கல்லீரல் 5 சேர்; குருதியேற்றம் $\frac{4}{5}$ சேர்.

எலும்பில் 22%, தசைகளில் 75%, குண்டிக்காயில் 82% நீர் இருக்கிறது.

குருதி நீரில் (Plasma) 90% நீரும், 8% ஊன் முதலும், 2% கொழுப்பு, அக்காரம், மண்பொருளும் இருக்கின்றன.

அதில் வெண்கூடு ஒன்றிருந்தால் செங்கூடு 300 முதல் 700 வரை இருக்கின்றன.

செங்கூடு ஒன்றின் குறுக்கு $\frac{1}{3200}$ அங்குலம்.

வெண்கூடு ,, $\frac{1}{2500}$ அங்குலம்.

ஒரு சதுர அங்குலத்தில் 10,000,000 செங்கூட்டைப் பரப்பலாம்.

குருதி ஒரு முழுச்சுற்றுவர 23 முதல் 25 நொடியாகிறது.

குருதி அலை ஒரு நொடிக்கு 30 அடியாகப் பாய் குழாயில் ஓடுகிறது.

குருதி பாய் குழாயில் ஒரு நொடிக்கு ஒரு அடி வீதம் பாய்கிறது.

குருதி மயிர்க் குழாயில் ஒரு துடிக்கு ஒன்று அல்லது இரண்டங்குலம் பாய்கிறது.

ஏற்றத்தின் ஒரு இரைப்பால் $\frac{1}{4}$ சேர் குருதி இரைக்கப் படுகிறது.

பெரும் பாய்குழாயின் (Aorta) குறுக்கு 1 அங்குலம்.

மயிர்க்குழாயின் குறுக்கு $\frac{1}{3000}$ அங்குலம்.

மூச்சு ஒன்றால் $1\frac{1}{2}$ சேர் காற்று உட்செல்லுகிறது.

உட்செல்லுங்காற்று 4 முதல் 6% உயிர்க்காற்றை யிழந்து 4 முதல் 5% கரிக்காற்றை அடைகிறது.

24 மணிப்பொழுதில் 15 பரும அடிக்காற்று உள்ளிழுத்து வெளிவிடப்படுகிறது.

நுரையீரலின் காற்றறை ஒவ்வொன்றும் $\frac{1}{100}$ அங்குலம் குறுக்குடையது.

தோல் 2 சேர் நீரையும், ·1 சேர் நிறை கரிக்காற்றையும் ·1 சேர் நிறைக்குச் சிறிது குறைவாகக் கட்டிப் பொருள்களையும் வெளிப்படுத்துகிறது.

குண்டிக்காய் 4.6 சேர் நீரை .125 சேர் சிறுநீர் உப்புடனும் .125 சேர் ஏனைய கட்டிப் பொருள்களுடன் வெளிப்படுத்துகிறது.

நரம்பு வழியாக நொடிக்கு 100 அடி விழுக்காடு செய்தி செல்லுகிறது.

உடலின் வரியுடைய தசைநார்கள் $\frac{1}{400}$'' அகலமும் 1 முதல் 2'' நீளமுமுடையன. வரியற்ற தசைநார்கள் $\frac{1}{3000}$'' அகலமும் $\frac{1}{400}$'' நீளமுமுடையன.

நரம்பு நார்கள் $\frac{1}{12000}$ அங்-முதல் $\frac{1}{2000}$ அங்-வரை அகலமுடையன.

நரம்புக் கூடுகள் $\frac{1}{600}$ அங்-முதல் $\frac{1}{200}$ அங்-வரை அகலமுடையன.

தோற்கூடுகள் $\frac{1}{3000}$'' முதல் $\frac{1}{1000}$'' வரை அகலமுடையன.

தீனிப்பைக் கூடுகள் $\frac{1}{400}$'' குறுக்கும் $\frac{1}{30}$'' நீளமுமுடையன.

காற்று வழியிலுள்ள மயிர்கள் $\frac{1}{3000}$'' நீளமுடையன.

உடலிற்கு வேண்டிய உணவின் நிறை:—

1. 10 ஆண்டிற்குட்பட்ட குழவிகளுக்கு அவற்றின் உடல் நிறையில் $\frac{1}{26}$ காய்ந்த உணவு.

2. 10 முதல் முதிர்ச்சிய அடையும் வரை உடல் நிறையில் $\frac{1}{50}$ பங்கு.

3. முதிர்ச்சியடைந்தது முதல் வளர்ச்சி முடியும்வரை $\frac{1}{80}$ பங்கு.

4. அதன் பின் $\frac{1}{105}$ பங்கு.

சென்னையிலுள்ள மக்களின் சராசரி ஆண்டு 27·6

சீர்மையிலுள்ள மக்களின் சராசரி ஆண்டு 43.

சேர்க்கை. XII.

வாய்பாடு.

1. நிறைகள்:—

3 தோலா—1 பலம்
8 பலம்—1 சேர்
(24 ரூபாய் எடை—1 சேர்.)
5 சேர்—1 வீசை
8 வீசை—1 மணங்கு.

ஆங்கில முறை:—
16 திராம்—1 அவுன்ஸ்
16 அவுன்ஸ்—1 பவுண்டு
28 பவுண்டு—1 கால் (Quarter)
4 கால்—1 டன்

2. பரும அளவுகள்:—

1 படி (பெரியது)—5 சேர்;
1 சேர்—10·91 அவுன்ஸ்
1 சேர்—310 பரும கீழ்நூறன் மீத்தர் (c. c.)
1 அவுன்ஸ்—28·41 ,, (c. c.)

60 சொட்டு (மினிம்)—1 திராம் (Drachm)
[4 திராம்—1 மேசைக்கரண்டி Table spoon-full]
8 திராம்—1 அவுன்ஸ்.
20 அவுன்ஸ்—1 பைண்டு
8 பைண்டு—1 காலன்.

(நிறைகளின் தொடர்ச்சி)

மருத்துவர்முறை Apothecary's.
80 கிரெயின்—1 ஸ்குருபுள்
3 ஸ்குருபுள்—1 திராம்
8 திராம்—1 அவுன்ஸ்
12 அவுன்ஸ்—1 பவுண்டு.

அறிவு நூல் முறை:—
10 கீழாயிரம் கிராம்—1 கீழ்நூறு கிராம்
10 கீழ் நூறு கிராம்—கீழ்பத்து கிராம்
10 கீழ் பத்து கிராம்—1 கிராம்
10 கிராம்—1 மேல்பத்து கிராம்
10 மேல் பத்து கிராம்—1 மேல் நூறு கிராம்
10 மேல் நூறு கிராம்—1 மேல் ஆயிர கிராம்

---

1 பவுண்டு—·4536 கிராம்
=1·6 சேர் (நிறை)
1 சேர்—·625 பவுண்டு
—·2835 கிராம்.

(பரும அளவின் தொடர்ச்சி)

1 லீத்தர் (Litre)—1000 பரும கீழ்நூறன் மீத்தர்
,, =1·7588 பைண்டுகள்
10 லீத்தர்— 2·2 காலன்கள்
1 காலன்— 4·546 லீத்தர்.
1 பைண்டு— ·568 லீத்தர்
1 பரும அடி—6·23 காலன்கள்

அறிவு நூல் முறை

1000 பரும கீழ் ஆயிரமீத்தர் = 1 பரும கீழ் நூறுமீத்தர்
1000 பருமகீழ் நூறுமீத்தர் = 1 பருமகீழ்பத்துமீத்தர்
1000 பருமகீழ் பத்துமீத்தர் = 1 பருமமீத்தர்
1000 பரும மீத்தர் = 1 பரும மேல் பத்துமீத்தர்
1000 பருமமேல் பத்துமீத்தர் = 1 பருமமேல் நூறு மீத்தர்
1000 பருமமேல் நூறு மீத்தர் = 1 பருமமேல் ஆயிர மீத்தர்

(பரும அளவின் தொடர்ச்சி.)

1 பரும கீழ்நூறன் மீத்தர் நீரின் நிறை 1 கிராம்
1 அவுன்ஸ் (பரும) நீரின் நிறை 1 அவுன்ஸ் (ஆங்கிலநிறை)
1 பரும ஆங்கில ,, =252·5 கிரெயின்
1 காலன் நீரின் நிறை—10 பவுண்டு அல்லது 70,000 கிரெயின்
1 பரும அடி ,, 62·32 பவுண்டு
1 சேர் நீரின் நிறை 310 கிராம் —·109 சேர் நிறை.

1° நூற்று முறை— 1·8° ஆங்கில முறை (Fahrenheit)

சேர்க்கை XIII.

காற்றில் கரிக்காற்று இருக்கும் அளவு:—

(1) நாட்டுப்புறத்து மிகத் தூயகாற்றில் 10,000ல் 2·2 பங்கு

(2) ,, சராசரிக் காற்றில் ,, 3 ,,

(3) பட்டினத்துக் காற்றில் 4 முதல் 5 ,,

(4) நல்ல காற்றோட்டமுள்ள சொற்பொழிவுக் கூடங்களில் 8 முதல் 10 பங்கு

(5) ஆள் நெருக்கமுள்ள நீதிமன்றத்தில் 20 பங்கு.

(6) பள்ளிக்கூடத்து அறைகளில் திறக்குமுன் 7·2 பங்கு.

(7) ,, பையன்கள்கூடி 1 மணிக்குப்பின் 29·5 பங்கு.

(8) ,, 1·5 ,, 32 ,,

(9) ,, (காற்றோட்டமில்லாவிடின்) 72 ,,

(10) சுரங்கங்களில் 78·5 பங்கு.

வேலை செய்யாதிருக்கும் ஒவ்வொருவனும் ·6, பரும அடி கரிக்காற்றை ஒரு மணிப்பொழுதில் வெளிவிடுகிறான், ஆதலின் ஒரு மணிக்கு 3000 பரும அடிக் காற்று அவ்வறையுட் புக வேண்டும்; நோயாளி இருக்கும் அறையில் 3750 பரும அடிக்காற்று புகவேண்டும். 1000 பரும அடிக்காற்றில் 2 பரும அடி கரிக்காற்று விரவியிருந்தாலும் நம் மூக்கால் உணரப்பட்டு வெறுக்கப்படும்.

சேர்க்கை XIV.

பால்:—பால் மட்டு (Lactometer) வைத்து அளந்து பார்த்தால் நீர் கலக்காதபால் 1027° முதல் 1034° வரை இருக்கிறது. இது 60· (ஆ) வில் இருப்பது. பின் 10· (ஆ) ஏறினால் பால் மட்டில் 1· குறையும்.

ஆடையெடுத்து நீர் கலந்த பால் கலத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஓரத்தில் நீலக்கோடுடையதாக இருக்கிறது. இந்நீலக் கோட்டால் ஐந்தில் ஒரு பங்கு நீர்க்கலப்பையும் கண்டு பிடிக்கலாம்.

சர்க்கரை கலந்திருக்கிற பாலை எடுத்து ஒத்தபங்கு உப்புப் புளிப்பைக் கலந்து சில அரிசியெடை சாம்பல் காரப்பசை (Resorcin) கலந்து சுடவைத்தால் குருதிபோற் சிவக்கும்.

மாவு கலந்த பாலைப் புகைக்கல் தெரிவால் (Iodine Test) கண்டு பிடித்துவிடலாம்.

பாலைப் பலநாள் வைத்திருக்கச்செய்யும் வழிகள் :—

(அ) 167· (ஆ) வரை அரைமணிப்பொழுது சுடவைத்திருந்து பின் திடீரெனக் குளிரவைத்தால் அப்பால் 12 முதல் 24 மணிவரை புளிக்காதிருக்கும்.

(ஆ) நீர் முதல் இரட்டை உயிர்க்காற்றை (Hydrogen per-oxide)க் கலந்து 51· (நூ) வரை 3 மணி நேரம் சுடவைத்திருந்தால் அதனல் 7 நாளைக்குக் கெடாதிருக்கும்.

(இ) பார்மலின், போரிக்புளிப்பு முதலிய நச்சு நீக்கிகள் கலந்தும் வைக்கலாம்.

பாலைத் தூய்மையாகக் கறக்கும் வழி:—கறப்பவன் கையைச் சவர்க்காரமும் வெந்நீரும் இட்டுக்கழுவி உகிரை உகிர்த்துடைப் பத்தால் (Nail Brush) தூய்மையாக்கிக் கொள்ளல்வேண்டும். கறக்கும்பொழுது அந்தப் பாலைத் தொட்டு மடியைத் தடவக் கூடாது, ஒரு பசுவைக் கறந்து மற்றொரு பசுவைக் கறக்குமுன் கையைக் கழுவல்வேண்டும். வாய் குறுகிய கலத்தில் கறந்தால் தான் பசு வயிற்றில் ஒட்டியுள்ள அழுக்குத் தூள் உள்ளே விழாது. இவ்வாறு கறந்த பாலை வடிக்கட்டி (தூய, நச்சு நீக்கப்பட்ட துணியால்) 40· (ஆ) குளிரவைத்து (கறந்த 20 துடிப்பொழுதினுள்) தக்க குப்பிகளில் காற்றுப் புகாமல் நிறைய அடைத்து வைத்திருந்தால் பல நாளிருக்கும்.

பாலால் பரவக் கூடிய நோய்கள் :—நச்சுக் காய்ச்சல், வயிற்றுளைவு, வயிற்றுப்போக்கு, கழிச்சல், இருமல் முதலியன.

சேர்க்கை XV

ஆங்கிலச் சொற்களுக்குத் தக்க தமிழ்ச்சொற்கள்.

Abdomen-வயிறு
Absorption-உறிஞ்சல்
Acid-புளிப்பு
,, Carbolic-கரிப்புளிப்பு
,, Hydrochloric-உப்புப்புளிப்பு
,, Lactic-பால்புளிப்பு
,, Nitric-தீப்புளிப்பு
,, Sulphuric-கந்தகப்புளிப்பு
,, Tannic-பதன்புளிப்பு
,, Uric-சிறுநீர்ப்புளிப்பு
Action-செயல்
,, Automatic-தற்செயல்
,, Reflex-எதிர்ச்செயல்
Agathi-அகத்தி
,, leaf-அகத்திக்கீரை
Aid-உதவி
,, first-முதல்உதவி
Air-காற்று
,, cells-காற்றறைகள்
Albumen-வெண்கரு (ஊன்முதல்)
Alcohol-சாராயச்சத்து
Alkali-காரம்
Alkaline-காரமான
Almond-வாதம்
Alum-சீனக்காரம்
Amaranthus-கீரைத்தண்டு
Ammonia-நவச்சாரக்காரம்
,, Liquied ஷெ நீர்
Amoeba-பொய்க்காலி
Anatomy-உடற்கூறு
Anemia-சோகை
Animals-இயங்குயிர்கள்
Animalcules-இயங்கு நுண்கூடுகள்
Ankle-குதி
Antitoxin-எதிர்நச்சு
Anus-எருவாய்
Aorta-பெரும்பாய்குழாய்
Apple-இலந்தை
,, wood-விளாம்பழம்
Appendicitis-குடல்வாய்வேக்காடு
Arm-கை
,, upper-பின்கை
,, lower, fore-முன்கை
,, pit-அக்குள்
Arsenic-மயில்துத்தம்
Artery-பாய்குழாய்
,, pulmonary-நுரையீரற் பாய் [குழாய்
Asparagus-தண்ணீர்விட்டான்
Assimilation-தன்போலாக்கல்
Atlas-தலையெலும்பின் அடிவளைவு
Auricle-ஊற்றுப்பை
Average-பொது
Axis-தண்டுக் கூட்டின் உச்சிக்கூர்
Axon-நரம்புக் கம்பி
Bacillus-குச்சிக் கூடுகள்
,, Comma-காற் புள்ளிக்கூடு
,, Tubercle-உடலுருக்கிக்கூடு
Bacteria-சில நுண்கூடுகள்
காரக்கூடுகள்
Bath-முழுக்கு, முழுகிடம்
,, cold-குளிர்நீர் முழுக்கு
,, oil-எண்ணெய் முழுக்கு
,, public-பொது முழுகிடம்
,, Roman-உரோமர்முழுக்கு

Bath-sea-கடல் முழுக்கு
,, sun-வெய்யில் முழுக்கு
,, Turkish-துருக்கர் முழுக்கு, வேதுபிடித்தல்
Beans-அவரைக்காய்
,, cluster-கொத்தவரைக்காய்
Beri beri-திமிர்நோய்
Betel-வெற்றிலை
Bicep-இருமுதலி
Bile-பித்தநீர்
Biscuits-கோதுமைத் தீனுக்கு
Bladder-சிறுநீர்ப்பை
,, gall-பித்தப்பை
Blade-அலகு
,, Shoulder-தோட்பட்டை எலும்பு
Blood,- இரத்தம் குருதி
Blood-less-ness-குருதிக் குறைவு, சோகை
Bonds-கட்டுகள்
Bone-எலும்பு
,, collar-கழுத்துப்பட்டை எலும்பு
,, jaw-தாடை எலும்பு
Brackets-கவிப்புகள்
Brain-மூளை
Brinjal-கத்தரிக்காய்
Bronchitis-குழாய்ச்சளி
Bubbles-குமிழ்கள்
Bulb-குழல் கூடு
Cabbage-முட்டைக்கீரை
Calcium-சுண்ணமுதல்
Callus-எலும்புப் பசை
Calomel-ரசத்தூள்
Calory-சூட்டளவு
Cancer-கட்டி
Capillary-மயிர்க்குழாய்

Capslue-உறை
Car-வண்டி
,, motorதமியங்கிவண்டி
Carbohydrate-கரிநீர்முதல்பொருள்
Carbon-கரி
,, di-oxfde-கரிக்காற்று
Cardamum-ஏலக்காய்
Cartiaege-எலும்புக்குருத்து
Cashew-முந்திரி
Castor-ஆமணக்கு
Cavity-வளை
Cavity pulp-தசைவளை
Cells-நுண்கூடுகள்
,, lymph ஊநீர்க்கூடுகள்
Cellulose-மரப்பொருள்
Centigrade-நூற்றுமுறை
Centipede-பூரான்
Cement-காரை, பசை
Cereals-அரிசிவகைகள்
Change-திரிபு
,, Chemical-பொருட்டிரிபு
Charm-கவர்ச்சி
Chemistry-பொருட்டிரிபியல்
Chest-நெஞ்சு
Chilly-மிளகாய்
Chlorine-உப்புக்காற்று
Chloroform-மயக்கமருந்து சொக்கு நீர்
Chlorophyl-பச்சைப்பொருள்
Chocolate-கொக்கோத்துணுக்கு
Cholam-சோளம்
Cholera-கழிச்சல்
Chordp-கயறு
Chord vocal-ஒலிக்கயறு
Choroid-தோல் (கண்) விடாநோய்
Chronic-உடலோடொட்டிய நோய்

Chyle-பாகு (குடர்ப்பாகு)
Chyme-பாகு (பைப்பாகு)
Cigarette-தாள்சுருட்டு
Circulation-சுற்று
,, lymphatic-வடிநீரோட்டம்
,, of blood-குருதிச்சுற்று
Citron-நாரத்தை
Clover-கிராம்பு
Coagulate-உறைதல்
Coccyx-வால்எலும்பு
Coconut-தேங்காய்
,, tender-இளநீர்
Colitis-வயிற்றுவலி
Colon-பெருங்குடல்
,, ascending-ஏறுகுடல்
Colon descending-இறங்குகுடல்
,, transverse-குறுக்குகுடல்
Compounds-கூட்டுப்பொருள்கள்
Conductor-சூடுசெலுத்தி
,, non or bad-கெட்ட சூடு [செலுத்தி
Conical-குவிந்த
Conjeal-கட்டியாக்கு
Consciousness-அறிவு
Constipation-எருக்கட்டு
Consumption-உடலுருக்கி
Control-அடக்கம்; அடக்கியாளல்
,, self-தன்னடக்கம்
Convulsions-இழுப்பு
Co-ordinate-ஒற்றுமைப்படுத்து
Coriander-கொத்தமல்லி
Cornea-கருவிழிமேற்றோல்
Corpuscles-கூடுகள்
,, red-செங்கூடுகள்
,, touch-தொடுமுட்டைகள்
,, white-வெண்கூடுகள்

Cough-இருமல்
,, whooping-கக்குவான்
Cranium-மண்டையோடு
Cream-(பால்) ஆடை
,, ice-குளிர்ப்பாற்கட்டி
Crosswise-குறுக்குவாட்டம்
Crown (of tooth)-பல்லின் தலை
Crystalline-ஒழுங்குக்கட்டி
Cucumber-வெள்ளரிக்காய்
,, white-கக்கரிக்காய்
Cumbu-கம்பு
Curd-தயிர்
Cycle (bi)-ஈருருளி
Cycling-ஈருருளிவிடல்
Decoction-காய்ச்சுநீர், ஊறல்
Decomposition-பிரிபடல்
Deform-நிலைமாறு
Deformity-நிலைமாறல்
Dentine-பல்லெலும்பு
Depressor-ஒடுக்கி
Dermis-கீழ்த்தோல்
Determination-தீர்மானம்
Dhal-பருப்பு
Diameter-குறுக்கு, உருவு, [உருவளவு
Diaphragm-ஈரல்தாங்கி
Diarrhoea-வயிற்றுப்போக்கு
Diet-உணவு பத்தியம்
,, balanced-அளவான உணவு
Digest-சமி, கரை
Disinfect-நச்சு நீக்கு
Disinfectant-நச்சு நீக்கி
Dislocation-மூட்டு நழுவு
Disorder, Menstrual-கருப்பை [நோய்
Dissection-அறுத்துப் பார்த்தல்

Drill-கை கால் வீசல்
Driver-பாகன்
Dropsy-நீர்த்தங்கல்
Drum-தம்பட்டம்
Drumstick-முருங்கைக்காய்
Dumb-bells-கைப்பளு
Dysentry-வயிற்றுளைவு
Dyspepsia-சமிக்காமை
Ear-காது
Elastic-மீளுந்தன்மையுடைய
Elasticity-மீளுந்தன்மை
Electricity-மின்சத்து
Elements-தனிப்பொருள்கள்
Elephantiasis-யானைக்கால்
Enamel-சிப்பி
Engine-பொறி
,, steam-நீராவிப்பொறி
Endurance-பொறுக்குந்தன்மை
Enema-குடற்கழுவல்
Energy-திறல்
Epidermis-மேற்றோல்
Epiglotis-குரல்வளைமூடி
Exchange Telephone இணைச்சாலை
Excretion-கழித்தல்
Exercise-பயிற்சி
Exercise-dumb-bell-பளுப்பயிற்சி
Experiment-பயின்முறை, தேர்வு
Expiration-மூச்சுவிடல்
Extensor-நீட்டி
Fat-கொழுப்பு
Fats-கொழுப்புவகை
Feeling-உணர்ச்சி
Ferment-காடிப்பொருள், [பொங்கிய நுரை
Fever-காய்ச்சல், வெப்புநோய்
Fever-enteric-குடற் காய்ச்சல்
,, relapsing-முறைக்காய்சல்
,, scarlet-செங்காய்ச்சல்
,, typhoid-நச்சுக்காய்ச்சல்
,, yellow-மஞ்சள்வெப்பு
Fibres-நார்கள்
,, tissue-தசைநார்கள்
Fig-அத்திப்பழம்
Flea-தெள்ளுப்பூச்சி
Fissures-வெடிப்புகள், இடுக்குகள்
Flexor-முடக்கி
Fluorine-ஆடி அரிக்காற்று
Formula-சுருக்கம்
Foundation-அடிப்படை
Fracture-முறிவு
,, simple-வெற்றெலும்பு முறிவு
,, compound-எக்கச்சக்கமான எலும்புமுறிவு
Fruit-பழம்
,, cashew-முந்திரிப்பழம்
,, cucumber-வெள்ளரிப்பழம்
Garlic-வெள்ளைப்பூண்டு
Gas-காற்று ஆவி
Germs-நிலை நுண்கூடுகள்
Ginger-இஞ்சி
Gingily-எள்ளு
Girdle-வளையம், கச்சை
,, pelvic-இடுப்பு வளையம்
Glands-பைகள்
,, intestinal-குடற்பைகள்
,, lymphatic-ஊநீர்ப்பைகள்
,, salivary-எச்சிற்பைகள்
,, sebaceous-மயிர்ப்பைகள்
Glottis-குரல்வளை
Goitre-தொண்டைக்கட்டி

G.norrhoea-வெட்டை
Gourd-சுரை
,, bitter-பாகற்காய்
,, snake-புடலங்காய்
Gout-ஊளைச்சதை நோய்
Grace-மென்மை
Gram-பயற்றுவகை
,, Bengal-கொண்டைக் கடலை
,, black-உளுந்து
,, green-பச்சைப் பயறு
,, horse-கொள்ளு
,, red-துவரை
Grey-சாம்பல் நிறம்
Growth-வளர்தல்
,, adenoids-மூக்கினுள் சதை [வளர்தல்
Gullet-உணவுக்குழாய்
Gum-சாறு
Guava-கொய்யா
Gymnastics-விட்டப்பயிற்சி
Hablal vulgaris-மொச்சைக் கொட் [டை
Heart-குருதி எற்றம்
,, tobacco-புகையிலைத் துடிப்பு
Heredity-பிறவிப்பண்பு
Hobby-இன்பவேலை
Hot-சூடான
Humour-aqueons-முன்னுடி நீர்
,, vitreous-பின்னுடி நீர்
Hydrogen-நீர் முதல்
,, peroxide-நீர்முதல்இரட்டை [உயிர்க்காற்று
Hygiene-உடல்நலவழி
Image-வடிவம்
Inch-அங்குலம் (விரற்கிடை)
,, cubic-பருமங்குலம்
, square-சதுரங்குலம்
Incissors-வெட்டிகள்
Influenza-தொற்றுக்காய்ச்சல்
Injection-தொளைவழிப் புகட்டல்
,, saline-உப்பு நீரைப் புகட்டல்
Inspiration-(மூச்சு) இழுத்தல்
Instep-மிதி, உள்ளங்கால்
Intestine-குடல்
,, large-பெருங்குடல், சாணிக் [குடல்
,, small-மணிக்குடல் சிறுகுடல்
Iodine-புகைக்கல்
Iris-நரம்புத்திரை
Jack-பலா
,, tender-பலாமூசு
Jambukona-நாவல்
Jaw-தாடை
Joint-மூட்டு
, ball and socket-குடைகல் [குழவிமூட்டு
,, elastic-மீளும்மூட்டு
,, gliding-சருக்குமூட்டு
,, hinge-கீல்மூட்டு
,, immovable-அசையாமூட்டு
,, mixed-கலப்புமூட்டு
,, movable-அசையும்மூட்டு
,, pivot-முளைமூட்டு
Juice-சாறு, நீர்
,, gastric-பைக்கரை நீர்
,, intestinal-குடற்கரை நீர்
,, pancreatic-கணையக்கரை நீர்
Kidney-குண்டிக்காய்
Knee-முழங்கால்
,, cap-முழங்கால் சில்
Knowledge-அறிபொருள்
Krait-கட்டுவிரியன்

Laboratory-வேலைக்கூடம், தேர்வுக்கூடம்
,, chemical-பொருட்டிரிபுக்கூடம்
Lacteals-பாற்குழாய்கள்
Ladies finger-வெண்டிக்காய்
Larynx-ஒலிப்பெட்டி
Lengthwise-நீளவாட்டம்
Lens-ஆடி; காந்தஆடி
Lens, concave-குழியாடி, மதிக்காந்தம்
,, convex, concave-குவிகுழியாடி
,, double concave-இரு குழியாடி
,, plano-concave-தட்டைக்குழியாடி
,, Convex-குவியாடி
,, Concavo convex-குழி குவியாடி
,, double convex-இருகுவியாடி
,, Plano-convex-தட்டைக் குவியாடி
Lentils-முதிரைகள்
Leprosy-பெருநோய்
Ligaments-எலும்புக்கயிறு
Limbs-புற உறுப்புகள்
Lime-சுண்ணம், எலுமிச்சை
,, quick-நீறு
,, slaked-சுண்ணும்பு
Lock-வாய்ப்பூட்டு
Loop-வளையம்
Lubricant-பசை, நெய்ப்பொருள்
Lungs-நுரையீரல்
Lymph-ஊநீர்
Lymphatics-ஊநீர்குழாய்கள்
Mace-சாதிப்பத்திரி
Machine-பொறி
Magnesium-மக்கனம்
Malaria-மலைக்காய்ச்சல்
Manganese-மங்கனம்
Mango-மாங்காய்
Marrow-நல்லி
,, yellow-மஞ்சள் நல்லி
Massage-பிடித்தல்
Measles-சின்னம்மை
Meat-இறைச்சி
,, of bird-பறவையிறைச்சி
,, of fowl-கோழியிறைச்சி
,, of goat-வெள்ளாட்டிறைச்சி
,, of sheep-செம்மறியாட்டிறைச்சி
Medulla oblongata-உயிர்முடிச்சு
Membrane-படல், தோல்
,, root-வேர்த்தோல்
Mercury-ரசம்
,, perchloride-சலவைக் காற்றுரசம்
Metal-மண்பொருள்
Method-முறை
,, direct-நேர்முறை
Microbe-நிலைநுண்கூடு
Microscope-நுண்பொருள் விளக்கி
Mildew-பூசணம், பாசி
Milk-பால்
,, butter-மோர்
Million-இரண்டாவதோராயிரம்
Minute-துடி(ப்பொழுது)
Moisture-குளிர் நீராவி
Mould-பூசணம், பாசி
Molecule-நுண் தூள்
Muscle-தசை
,, fibre-தசை நார்
,, involuntary-கட்டுப்படாத தசை

Muscle striped-வரியுடைத் தசை
,, unstriped-வரியற்ற தசை
,, voluntary-கட்டுப்பட்ட தசை
Mump-பொன்னுக்குவீங்கி
Museum-பொருட்காட்சிக் கூடம்
Nerve-நரம்பு
,, motor-கட்டளை நரம்பு
,, sensory-உணர்ச்சி நரம்பு
,, vagus-எற்றநரம்புக் கயிறு
Neuritis-நரம்பு வேக்காடு
Nicotion-புகையிலை நச்சு
Nitrogen-வெடியுப்புக் காற்று
Nurse-பணியாள்
Nut-விதை, கொட்டை
,, cashew-முந்திரிக்கொட்டை
,, ground-நிலக்கடலை
Nutmeg-சாதிக்காய்
Nutrition-ஊட்டம்பெறல்
Office-தொழிற்கூடம்
,, exchange-இணைக்கூடம்
,, register-பதிவுக்கூடம்
Oil-எண்ணெய்
,, cod-liver-மீன் ஈரல்எண்ணெய்
,, castor-விளக்கெண்ணெய்
Onion-வெங்காயம்
Operation-அறுத்தல்
Orange-கிச்சிலி
Organs-உறுப்புகள்
,, vital-உயிர் உறுப்புகள்
Oval-தம்புவட்டம்
Oven-அடுப்பு
,, steam-நீராவி அடுப்பு
Oxygen-உயிர்க்காற்று
Oxidation-உயிர் முதற்கலப்பு
Pairs-இரட்டைகள்
Painting-நிறம்பூசல்
Palate-அண்ணம்
,, soft-மெதுவண்ணம்
,, hard-கல்லண்ணம்
Palm-உள்ளங்கை
Palmyra-பனை
,, tender nut-நுங்கு
Pancreas-கணையம்
Pappillae-பருக்கள்
Para-அடுக்கு
Parallel-ஒருபோகு
Paralyse-அடங்கச்செய், திமிர்ப் [படுத்து
Paralysis-திமிர்நோய்
Pea-பட்டாணி
,, Cow-தட்டைப்பயறு
Pepper-மிளகு
Pelvic-இடுப்பை அண்டிய
People-மக்கள்
,, nervous-நரம்பு நலிந்தோர்
Peppermint-சக்கரைத் தூணுக்கு
Pepsin-ஊன்கரைப்பொருள்
Percents-நூற்று விழுக்காடு
Period-குறிப்பொழுது
,, incubation-வரப்பிடிக்கும் [பொழுது
,, infectious-பரவக்கூடிய [பொழுது
Perspiration-வியர்வை
,, sensible-புலப்படும் வேர்வை
,, insesible-புலப்படாவேர்வை
Pharynx-தொண்டை
Phenyle-சாக்கடை மருந்து
Phosphorus-தீ முறுகல்
Photographic camera-வடிவப் [பிடிபெட்டி

Phyllanthus-நெல்லி
Physiolgy-உடலியல்
Pigments-நிறப்பொருள்கள்
Piles-எருவாய்ப்புண், மூளை
Plague-நச்சுக் கட்டி
Plantain-வாழை
,, stem-வாழைத்தண்டு
Plasma-ஊனீர்
Plexes-பின்னல், (நரம்பு)
Pneumonia-சளிவெப்பு
Pomegranate-மாதுளை
Post-அஞ்சல்
Pottato-உருளைக்கிழங்கு
,, sweet-சர்க்கரைவள்ளிக்கிழங்கு
Potassium-வெடியுப்புமுதல்
,, hydroxide-சாம்பற்காரம்
,, nitrate-வெடியுப்பு
,, permagnanate-வெடியுப்பு [முதல் மங்கனை
Powder-பொடி
,, bleaching-சலவைப்பொடி
Power திறல்
Power of accomodation-சரிப்படுத் [தும்திறல்
,, horse-குதிரைத்திறல்
Pox-அம்மை
,, chicken-நீர்க்கொள்ளுவான்
,, small-பெரியம்மை
Pressure-உதைவு
Proteins-ஊன்முதல்
Ptomaine-இறந்த தசைநச்சு
Pulse-கைத்துடி
Pulses-முதிரைகள்
Pump-ஏற்றம்
Pumpkin-பரங்கிக்காய்

Pumpkin green-பூசணிக்காய்
Punctuality-நேரந்தவறாமை
Pupil-கண்மணி
Pylorus-குடற்கதவு
Quality-தன்மை
Quinine-கொயினா
Radish-முள்ளங்கி
Ragi-கேழ்வரகு
Rays-கதிர்கள்
,, heat-சூட்டுக்கதிர்கள்
,, light-ஒளிக்கதிர்கள்
,, புதுக்கதிர்கள்
Reaction-எதிர்ப்பு
Recreation-இன்பவேலை
Rectum-பெருங்குடற்கோடி
Relax-தளர்த்து, நெகிழ்ச்செய்
Rennet-பைக்கரை நீர்ச்சத்து
Respiration-மூச்சுவிடல்
,, artificial-செயற்கை மூச்சு
Retina-நரம்புப்படுதா
Rheumatism-கீல்வாதம்
Rib-பழுவெலும்பு
,, floating-தொங்கும்டழு
,, real-வலுவுடைப்பழு
,, unreal-வலுவற்றபழு
Rice-அரிசி, அரிசிவகை
Roller-அமுக்குருளை
Root-வேர், கிழங்கு
,, beet-அக்காரக்கிழங்கு
Room-அறை
,, warm-வெப்பறை
,, store-கிடங்கு
Rule-முறை
Sacrum-மும்முடக்கியெலும்பு
Saliva-எச்சில்

Sal-Volatile-நாற்ற உப்புநீர்
Salt-உப்பு
,, smelling-நாற்ற உப்பு
Samai-சாமை
Sarsaparilla-நன்னாறி
Scurvy-குருதியிழப்புவலி
Second-நொடிப்பொழுது
Seed-விதை
,, big cumin-பெருஞ்சீரகம்
,, cumin-சீரகம்
Serum-குருதிநீர்
Shrill-கீச்சான
Sight-பார்வை
,, long-எட்டப்பார்வை, வெள்ளெழுத்து
,, short-கிட்டப்பார்வை
Silicon-மண்முதல்
Sinew-தசைக்கயிறு
Skeleton-எலும்புக்கூடு
Slantwise-சாய்வுவாட்டம்
Soap-சவர்க்காரம்
Soda-சோடா உப்பு
,, baking-அணடச்சோடா
Sodium-உப்புமுதல்
,, bicarbonate-உப்புமுதல் இரட்டைக்கரிப்பு
Sphere-உருண்டை
,, semi-அரை உருண்டை
Spine-தண்டுக்கூடு
Spinal column-தண்டுக்கூடு
,, cord-முள்ளந்தண்டு
Spleen-மண்ணீரல்
Sprain-குருதிக்கட்டு
Starch-மாப்பொருள் கஞ்சிப்பொருள்
State Normal-தன்னிலைமை
Steam-கொதிநீராவி
Sternum-நெஞ்செலும்பு
Stimulant-கிளர்ச்சிப்பொருள்
Stirrup-அடிதாங்கி
Stomach-தீனிப்பை
Strychnine-எட்டிச்சத்து
Sugar-அக்காரம்
Sulphur-கந்தகம்
Surface-பரப்பு
,, secreting-ஊற்றுப்பரப்பு
Sweeper-வாருகோல்
,, electric-மின்உரிஞ்சி
Syllabus-பொருட்குறிப்பு
Syphilis-கிரந்தி
System-கூட்டம்
,, bony-எலும்புக்கூட்டம்
,, cerebro-spinal-தண்டுமூளைக்கூட்டம்
,, circulatory-குருதியோட்டஉறுப்புகள்
,, digestive-சமிக்கும் உறுப்பு
,, excretory-கழிவாய்கள் [கள்
,, muscular-தசைக்கூட்டம்
,, nervous-நரம்புக்கூட்டம்
,, respiratory-மூச்சுறுப்புகள்
Table-வகுப்புவாரி, பட்டியல், எழுதுபலகை
Tamarind-புளி
Tapioca-மரவள்ளிக்கிழங்கு
Telephone-தொலைப்பேசி
,, wires ,, கம்பிகள்
Tendon-தசைக்கயிறு
Tepid-வெதுவெதுப்பான
Tinai-தினை

Thoughts-எண்ணங்கள், நினைப்புகள்
Thermometer-வெப்பமட்டு
Three Lobed-முப்பங்குகளாலான
Tincture of Iodine-சாராயப் புகைக் கல்
Tissue-தசைநார்கள்
,, connective-இணைத்தசை நார்கள்
Tooth-பல்
,, artificial-செயற்கைப் பல்
,, brush-பல்குச்சி
,, canine-கூர்ப்பல், நாய்ப்பல்
,, false-கட்டுப்பல்
,, milk-பாற்பல்
,, molar-அறைவைப் பல்
கடைவாய்ப்பல்
,, permanent-நிலைப் பல்
,, wisdom-அறிவுப் பல்
Toxin-உயிர்த்தசை நச்சு
Trachea-மூச்சுக்குழாய்
Tricep-மும்முதலி
Trouble-நோய்
,, pelvic-இடுப்புநோய்
Trumpet-எக்காளம்
,, ear-காது எக்காளம்
Trunk-முண்டம்
Tube-குழாய்
,, bronchial-மூச்சுக் கிளைக் குழாய்
Tuberculosis-உடலுருக்கி
Typhoid-நச்சுக் காய்ச்சல்
Unconsciousness-மயக்கம், நினைப் பறல்
Urea-சிறுநீர், உப்பு
Valve-ஒருவழிக் கதவு
,, tricuspid-முக்கூறுடை ஒரு வழிக்கதவு
Vapour-ஆவி
,, water-குளிர்நீராவி
Varagu-வரகு
Varnish-மெருகெண்ணெய்
Varnishing-மெருகெண்ணெய் பூசல்
Vegetable-காய்கறி, நிலையுயிர்ப் பொருள்
Vegetarian-புலாலுண்ணாதான்
Vein-வடிகுழாய்
,, portal-கல்லீரல் வடிகுழாய்
,, pulmonary-நுரையீரல் வடி குழாய்
Velvet-மயிர்ப்பட்டு
Vena cava-பெருவடிகுழாய்
,, Inferior-கீழ்ப்பெருவடி குழாய்
,, superior-மேற்பெருவடிகுழாய்
Ventricle-சால்
,, left-இடதுசால்
,, right-வலதுசால்
Vertebrae-வளையங்கள்
Vice versa-எதிர்எதிர்
Villi-பிசிறுகள்
Vinegar-காடி
Viper Russel's-கண்ணாடி விரியன்
Virility-ஆண்மை
Vitality-வாழுந்திறல்
Vitamin-உயிர்ச்சத்து
Vivacity-கிளர்ச்சி
Volatile-ஆவியாகக்கூடிய
Wall-சுவர்
,, abdominal-வயிற்றுச்சுவர்
Warm-வெதுவெதுப்பான
Water-நீர்
,, boiling-கொதி நீர்
,, lime-சுண்ணநீர்
,, chlorinated lime-சலவைக் காற்றுச் சுண்ண நீர்

Wheat-கோதுமை
,, bearded-வாற்கோதுமை
Will-தீர்மானம்
Wood-மரப்பொருள்
Worm-புழு
,, blood-குருதிப்புழு
,, guinea-காற்சிலந்திப்புழு
Worm hook-கொக்கிப்புழு
,, ring-எச்சிற்றழும்பு
,, round-வட்டப்புழு
,, whip-சாட்டைப்புழு
Wrist-மணிக்கட்டு
Yaws-தோல்நோய்
Yeast-புளிக்கூடு, புரை, உறை,
Zizyphus-நெல்லி.

நன்றி கூறல்.

உடலியலும் உடல்நல வழிகளும் இதுகாறும் தமிழ் மொழியில் எழுதப்படாத வகையில் வெளிவந்துளது. இதை அன்புடன் பதித்துவந்த பொழிற்றொண்டர் அவர்களுக்கும், படித்து ஊக்கப்படுத்திவந்த அன்பர்கள் பலருக்கும் எமது நன்றி என்றும் உரித்தானதாகும். இதன் எழுது தாள்களை (Manuscript) ஒருபொழுதும் சலிக்காது பேரன்புடன் அடிமுதல் நுனிவரை திருத்திவந்த உரத்தநாட்டு உயர்தரக் கல்லூரி, வடமொழிப் புலவர் திரு. பொன்னுச்சாமி பிள்ளையவர்களுக்கும் வேறு உதவிகள் பலபுரிந்த பெரியார்களுக்கும் மிகவும் கடமைப்பட்டவனுவேன்.

இவ்வாறு பலர் உதவிபால் இனிது முடிந்த இந்நூல் தொகுத்து அச்சிடப்படும். அப்பொழுது இதன் பெருங்குறையாகிய ஓவிய மின்மை நீக்கப்படும். அதனுடன் அறிவிற் சிறந்த பெரியோர்கள் அருளுடன் குறிப்பிடும் சீர்திருத்தங்களும், மதிப்புரைகளும் சேர்க்கப்பெறும். அன்பர்கள் அருள் புரிவாராக.

இறையருள் வாழ்க.

சோழர் பேரரசு.

இரண்டாம் அதிகாரம்
கொங்கு தொண்டை மண்டலங்களை அடிப்படுத்தல்.

திரு. S. K. கோவிந்தசாமி அவர்கள், M. A.,
சரித்திர ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

(முற்றொடர்ச்சி 16-வது பக்கம்.)

“அவனுடைய (விஜயாலயனுடைய) மகன் ஆதித்யவர்மன் என்பான். கோதண்டராமன் என்ற பெயரால் பல்லோராலும் பாராட்டப்பட்டவன். மதக்களிற்றின் மேல் வீற்றிருந்த மன்னவனும் பல்லவன் மேல் பாய்ந்து அவனைக் கொன்றவன்.”

(கன்னியாகுமரிக் கல்வெட்டு. பா. 55)

i ஆதித்தன் ஆட்சியும் சோழர் பேரரசும்.

எப்பேரரசும் நீண்ட காலம் நிலைபெற்று இருப்பதற்குப் பொதுவாகச் சில சாதனங்கள் இன்றியமையாதன. அவற்றில் தலையாகக் கருதப்படுவது பேரரசர்தம் வாழ்நாளாம். அவர் அற்ப ஆயுள் உடையோராய் இருப்பின் அரசு தொடக்கத்திலேயே வீழ்ந்துபோம். இதற்கு எடுத்துக் காட்டாக மாபெரும் புகழ்பெற்ற மாசிடோனியா மன்னனான அலக்சாண்டரால் நிறுவப்பெற்ற கிரேக்கர் பேரரசைக் கொள்ளலாம். அஃதன்றி இந்தியாவில் முகலாயப் பேரரசு நீடித்து நின்றதற்கு ஏதுவாய் இருந்தது அக்பர் முதல் அரங்கசீப்பு ஈறாகவுள்ள எல்லா மன்னரும் நெடுங்காலம் உயிருடன் வாழ்ந்ததேயாம். சோழர் பேரரசின் நற்காலத்தினால் அதற்கு அடிகோலியான விஜயாலயன் முப்பது யாண்டுகளுக்கு மேலும், அவன் பின்போந்த இராசகேசரி வர்மனான ஆதித்தன் சற்று ஏறக்குறைய இருபத்தெட்டு யாண்டுகளும் செங்கோல் ஏந்தி ஆணை செலுத்தினார்கள். தன் ஆட்சியில் ஆதித்தன் தன் தகப்பனால் கவரப்பட்ட நாடுகளை நழுவவிடாமல் காத்ததோடு அமையாது வேறு சில நாடுகளையும் தன் அரசியல் அறிவாற்றலாலும் படைத்திறனாலும் படையெடுத்துக் கைப்பற்றிக் கொண்டான்.

ii இவன் காலத்தில் பாண்டியர் நிலை.

திருப்புறம்பியப் பெரும்போரில் பாண்டியன் வரகுணன் பல்லவர் சோழர் காங்கேயர் கூட்டுறவால் முறியடிக்கப்பட்டான் என்றும், அப்போரால் தென் இந்திய அரசாங்கநிலையில் விளைந்த வேறுபாடுகள் யாவை என்றும் நாம் மேலே கூறினோம். அத் தோல்விக்குப் பின் வரகுணன் பல்லாண்டு உயிர் வாழவில்லை. அவனுக்குப் பின் முடிசூடிக்கொண்ட அவன் தம்பியான வீர நாராயணச் சடையனென்ற பராந்தகன் ஆட்சியில் பாண்டிய அரசு பாடு சாய்ந்தது. கி. பி. 900-ல் பட்டத்துக்கு வந்த இரண்டாம் இராசசிம்ம பாண்டியனோ அல்லது அவன் தந்தையோ சோழரோடு பகைத்துப், போர்புரிந்து, வென்று, பலங் குன்றிய பாண்டிய அரசுக்குப் புத்துயிர் கொடுக்க முயன்றதாகத் தெரியவில்லை. ஆனால் ஆதித்தன் ஆட்சி முடிவில் அவன் மகன் பராந்தகன் தலைமையின் கீழ்ச் சோழர் பாண்டி நாட்டைப் படை எடுத்து வெற்றி கொண்டதின் நிமித்தமாக அரசிளங் குமரனான பராந்தகன் "மதுராந்தகன்" என்ற விருதைப் பெற்றிருக்கலாம் என்று இந்திய சரித்திர பேராசிரியரான K. A. நீலகண்ட சாஸ்திரியார் எண்ணுகிறார். 1 ஆகையால் ஆதித்தன் காலத்தில் சோழர் பேரரசை முறிப்பதற்கோ அன்றேல் அதன் முற்போக்கை முட்டுசெய்வதற்கோ போதிய இடம் பொருள் ஏவல் பாண்டியர்க்கு இல்லை என்பது ஒருதலை.

iii இவன் கொங்கு மண்டலம் கொண்டது.

தன் அரசுக்குத் தென்புலத்தே இருந்து தீங்கு ஒன்றும் விளையாதென்று தெளிந்த பின்னர், ஆதித்தன் சோழ நாட்டுக்கு வடமேற்கு திக்கில் உள்ள கொங்கு மண்டலத்தின் மேல் செல்லத் தொடங்கினான். இந்நாடு வடக்கே கங்கர் ராச்சியமும், மேற்கே சேரர் நாடும், தெற்கே பாண்டிமண்டலமும், தென் கிழக்கே சோழமண்டலமும், கிழக்கே தொண்டை மண்டலமும் உடைய ஒரு நிலப்பரப்பு; அது இக்காலத்திய மைசூர்

1. "Pandya Kingdom." P. 81.

சீமையின் தென்பகுதியும், சேலம், கோயம்புத்தூர் சில்லாக்களும் அடங்கிய ஒரு பீடபூமி; 2 பண்டைக் காலத்தில் அதிகமான் என்ற குறுநில மன்னர் குடும்பத்தோரால் பரிபாலிக்கப்பட்டது. ஆதித்தன் காலத்தில் அதன் கீழ்ப்பகுதி நொளம்பர் கையில் இருந்திருக்க வேண்டுமென்பது தர்மபுரியில் கிடைத்த அவர் கல்வெட்டுகளால் புலப்படுகிறது. இக்கொங்கு நாட்டை ஆதித்தன் கவர்ந்து கொண்டான் என்று "கொங்கு தேச ராசாக்கள்" என்ற நூல் கூறும். அந்நூற் கூற்றை இவண் எடுத்து எழுதுவாம்; "சோழ வம்சத்திலே விசயாடராயன் மகன் ஆதித்ய வர்மராயன் சோழதேசம் தஞ்சாவூரிலே பட்டங் கட்டிக் கொண்டு கொங்க தேசத்துக்கு வந்து ராசாவேடர் களைச் செயம்பண்ணித் தலைக்காடென்ற பட்டணங்கட்டிக் கொண்டு இந்த ராச்சியங்களிலேயே அநேக அக்கிரகாரம் சர்வமானியமாய்த் தருமம்பண்ணி அந்த அரசை அரசாண்டனன்." 3 இப்பொழுது கொங்கு நாட்டில் காணப்படும் முதலாம் பராந்தகச் சோழனுடையக் கல்வெட்டுகளும் இதையே மேலும் வலியுறுத்தும். பராந்தகன் தானே கொங்கு நாட்டைக் கொண்டதாக யாதொரு சான்றும் இதுகாறும் கிடைத்திலது. ஆகையால் அங்கு அவன் கல்வெட்டுகள் கிடைக்குங்கால் அந்நாடு அவன் ஆட்சிக்கு முன்னரேயே சோழர் வசம் வந்திருக்கவேண்டுமென்பது எளிதில் விளங்கும்.

iv "தொண்டை மண்டலம் பாவின சோழன்."

இவ்வண்ணம் சோழர் பேரரசு ஒருபால் விரிய பல்லவர் வலி மற்றொருபால் குறைந்தது. திருப்புறம்பியத்தில் வெற்றி மாலை சூடிய அபராசிதன் பதினெட்டு யாண்டுகள் ஆட்சி புரிந்திருக்க வேண்டுமென்று அவன் கல்வெட்டுகளால் அறியக்

2. Prof. P. T. S. Ayyangar's Geographical Control of Early Kongu History

3. செந்தமிழ். 1917-18; P. 394: இந்நூலைப் பற்றி Rev. W. Jaylor என்பார் J. R. A. S. VIII; P. 2-ல் கூறி இருப்பது இவ்விடத்தில் கவனிக்கத் தகுந்தது: "இந்துக்கள் சரித்திர சம்பந்தமாயுள்ள பத்திரங்களில் சாதாரணமாய் மலிந்து கிடக்கும் கட்டுக்கதைகளும், புராணங்களும் இந்நூலில் பெரும்பாலும் காண்பதரிது."

கிடக்கிறது. 1 ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஆதித்தன் அபராசிதனை எதிர்த்து தோற்கடித்தான். இந்த வெற்றியைப் பற்றித் திருவாலங்காடு செப்புப் பட்டயத்தில் கீழ் வருமாறு புகழப்பட்டிருக்கிறது. "பொலிவு செறிந்த படைகளையுடைய (யாவராலும் வெல்லமுடியாத) அபராசிதப்பல்லவனைப் போரில் செயித்து அவன் அரசியான பெருநிலச் செல்வியையும் (பூமி) கவர்ந்து தான் எண்ணினபடி (ஆதித்தன்) செய்து முடித்தான்." தில்லைத்தானம் கல்வெட்டு ஒன்றில் ஆதித்தனை "தொண்டை நாடு பாவின சோழன்" என்று சிறப்பித்திருக்கிறது. 2 இவன் காலத்தில் தொண்டை மண்டலம் முழுவதும் சோழர் ஆணைக்குள் அடங்கி இருந்த தென்பதற்கு அறிகுறியாகத் தக்கோலம், திருக்கழுக்குன்றம் முதலான விடங்களில் இவன் கல்வெட்டுகள் பல காணக்கிடக்கின்றன. 3 அவற்றில் திருக்கழுக்குன்றம் கல்வெட்டு கீழ் எழுதிக் காட்டியபடி. "ஸ்வஸ்தி ஸ்ரீ கொராஜகேஸரிப் பன்மற்கு யாண்டு இருபத்தேழாவது களத்தூர்க் கோட்டத்துத் தன்கூற்று திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மூலஸ்தானத்து பெருமாள் அடிகளுக்கு இறையிலியாக ஸ்கந்தஸிஷ்யன் கொடுத்தமையில் அப்படியே பாதாவி கொண்ட நரசிங்க பொட்டரையரும் அப்பரிசே ரக்ஷித்தமையில் அண்டுறையான் குணவன் மகன் புத்தன் விண்ணபத்தினுல் பூர்வராஜாக்கள் வைத்தபடியே வைத்தேன் இராஜகேஸரிபற்மனேன்." பல்லவ மன்னரால் அளிக்கப்பட்ட பழைய பரிசுகளை புதுப்பிப்பதற்குக் காரணமாய் நின்றது பல்லவர் அரசு சோழர்பால் சென்றதே என்பதற்கு சிறிதும் ஐயப்பாடு இல்லை. மேலும் ஆதித்தன் இறந்தவிடமும் தொண்டை மண்டலத்திலுள்ள தொண்டைமானுற்றூர் என்று சோழர் கல்வெட்டு ஒன்றுல் தெரியவருகிறது. 4 இத்தொண்டைமானுற்றூர் திருக்காளத்திக்கு அண்மையிலுள்ள தொண்டமனுடு என்ற சிற்றூராய் இருக்கலாம் என்று கனம் வெங்கய்யா அவர்கள் கூறியுள்ளார். 5

---

1. 435 of 1905. 2. No 89: S' I. I. III. iii
3. 5 of 1897 ond Ep. Ind. III. p279.
4. No 142 S. I. I. III iii 5. Ibid.

v ஆதித்தனும் சேரரும்.

ஆதித்தன் காலத்தில் சேர அரசியல் நிலையைப் பற்றி ஒன்றும் அறிய முடியாமல் இருக்கிறது. ஆனல் மேற்கூறிய தில்லைத்தானம் கல்வெட்டில் ஸ்தாணுரவி என்ற 'சேரலாதன்' பெயர் காணப்படுகிறது. அக் கல்வெட்டிலிருந்து சோழரும் சேரரும் இக்காலத்தில் மிகுந்தநட்புக் கொண்டிருந்திருக்க வேண்டுமென்று புலப்படுகின்றது. இந்நட்பு ஆதித்தன் இறந்த பிறகும் அவன் மகன் பராந்தகன் ஆட்சி முழுதும் நீடித்திருந்தது. இது சோழர் பேரரசின் பெருக்கிற்கு ஒருசிறந்த கருவியாய் இருந்தது எனல் மிகையாகாது. இவ்விரு அரச குடும்பத்திலும் வியாபித்திருந்த நட்பினுற் போலும் பராந்தகன் சேர அரசனின் புதல்வி ஒருத்தியை மணஞ்செய்து கொண்டான்! ஆதித்தனும் ஸ்தாணுரவியும் சேர்ந்து விக்கி அண்ணன் என்ற போர்வீரன் ஒருவனுக்கு "தராசும், சாமரையுஞ், சிவிகையுந் திமிலையுங், கொயிலும், பொனகமுங், களமுங், களிற்று நிரையுஞ், செம்பியன்றமிழவேளெனுங் குலம்பியரும்" அளித்தது சோழர் சேரருள் அச்சமயம் நிலை பெற்று இருந்த ஆழ்ந்த நட்புக்கு மற்ருேர் ஆதாரமாம்.

vi ஆதித்தன் காலத்தில் சோழர் பேரரசின் எல்லை.

கி. பி, 907-ல் முதலாம் ஆதித்தன் இறந்தான். அத்தருவாயில் சோழர் பேரரசு மிகப்பரந்து விளங்கிற்று. வடக்கே வடபெண்ணையாறு தொட்டுத் தெற்கே கன்னியாகுமரி வரையிலும், மேற்கே மேற்கு மலைத்தொடர்ச்சி தொட்டுக் கிழக்கே கடற்கரை வரையிலும் அவர் ஆணைசென்றது. ஆனல் பாண்டி நாட்டில் மட்டிலும் சோழர் ஆட்சி இன்னும் முற்றிலும் வேர் ஊன்றவில்லை. அது முதலாம் இராசராசன் காலத்தில் தான் நிறைவேறிற்று. கரிகாலன் காலத்தில் சோழர் ஆணைக்குட்பட்ட தொண்டை மண்டலத்தை அவன் பின் வந்த மன்னர் கை நழுவ விட, அதை மீண்டும் கைப்பற்றினதே ஆதித்தன் ஆட்சியில் நடந்த ஒரு சிறந்த செயலாகும்.

(தொடரும்)

கோளறு பதிகம்

(திரு. எம். எஸ், பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ. எல். டி.)

திருஞான சம்பந்தர் அருளிய 'வேயுறு தோளிபங்கன்' என்ற முதற்குறிப்புள்ள பதிகமே கோளறுபதிகமெனப்படும். ஏனெனில் நம்பிரான் மீது அன்புற்றவர்க்கு நாளும் கோளும் கவனிக்க வேண்டுவதில்லை என்று புகலியார் அப்பமூர்த்திகட்கு இயம்பினரென்ப. கூறிய சமயம் யாதெனில் பாண்டிமாதேவியும் மந்திரியார் குலச்சிறையும் ஞானக் கன்றினையழைத்துச் சமணரை யழிக்குமாறு தூதனுப்பியபொழுது தூதர், வாக்கிசரும் கழுமலத்தாரும் ஒன்றாயிருந்தவிடத்தில் வந்து தூதுரைக்க, சமணரால் உழன்ற நாவுக்கரசர் ஞானசம்பந்தர் இளமையையும் சமணர் கொடுமையையும் நினைந்து போதல் நலமன்று என்றுரைத்து நீவிர் புறப்படுவதற்கு நாள் கோள் பொருத்தமில்லையென்று நவின்றார். "ஞாயிறு திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி பாம்பிரண்டும்" (இராகு கேது) அடியாரவர்கட்கு நல்லவையேயாம் என்றனர். அதே பதிகத்தில் அடுத்த இரண்டாவது செய்யுளில் இருபத்தேழு நட்சத்திரங்களில் எதாயினுமாகுக, எம்பெருமான் மீது அன்புற்றார்க்கு அவை தீங்கிழையா என்றனர். "ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறுமுடனாய நாள்கள்" இவ்வடிக்கு உரைகாரர் கார்த்திகை முதலாகக்கொண்டு பார்க்கில் ஒன்பதாவது பூரம். ஒன்று என்றது கிருத்திகை. ஏழு ஆயிலியம், பதினெட்டு பூராடம், ஆறுமுடனாய நாள்கள் என்றது மேற்கூறிய நான்கும் அல்லாத எட்டு நக்ஷத்திரங்களுமாம், பன்னிரண்டு நக்ஷத்திரங்களாவன பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி, கிருத்திகை, சுவாதி, ஆயிலியம், விசாகம், ஆதிரை, சித்திரை என்பவைகளாம் என்று வரைந்துளார். 'ஒன்பது' என்று தொடங்கியது எதுகைபற்றி யென்பது தெளிவுறும். இதற்கு

நேர் பொருள் கிடையாதோவென்று ஆராயப் புகுந்தபொழுது எனது நண்பர் சோதிட நிபுணர் தில்லைநாயகர் வந்துறயான் அவரை வினவினேன். அவர் 9, 1, 7 ஆகிய மூன்றும், பதினெட்டுடன் ஆறு, அதாவது இருபத்து நான்கும், ஆக மொத்தம் $3 + 24 = 27$ நக்ஷத்திரங்களென்றும் பொருள் கூறினர். அது எனக்குப் பொருத்தமாகத் தோன்றுகின்றது. முதற்பாவில் நவக்கிரகங்களின் நிலையைக் கவனிக்க வேண்டாமென்றவர் இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் கவனிக்கவேண்டுவதில்லை என்று கூறியுளாரென்பதே வெளிப்படை. இலையெனில் 'பதினெட்டோடு ஆறு' என்பதற்கு பதினெட்டோடு நான்குமல்லாத எட்டு என்று பொருள் கூறல் எங்ஙனம்? இதனை ஆன்றோர் விளக்குவாராக.

தெளிபொருள் வேண்டுகோள்

திருஞான சம்பந்தரருளிய திருவாலவாய்ப் பதிகங்களில் சிலவடிகளிற் பொதிந்துள்ள பொருள்களை தமிழ்ப் பொழில் வாசகர்களே நன்கு விளக்குமாறு வேண்டுகின்றேன்.

1. கூட்டினர் கிளியின் விருத்த முறைத்தோ ரொலியின் ரொழிற், பாட்டுமெய் சொலிப்பக்கமே செலுமெக்கர் தங்களைப் பல்லறம்—ஒலி என்பதற்கு எலியென்றொரு பாடமுளது. அங்ஙனமாயின் கிளி, எலிவிருத்தம்பாடின ரென்றால் எளிதில மையும். அன்றேல் 'ஒலி' என்பதை வைத்துப்பொருள் கூறுக.

2. பூத முதல்வன் முதலே முதலாப்பொலிந்த, சூதன் னொலிமாலை கலிக்கோவை சொல்லே—பொருள் விளக்குக.

3. அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினனும் குறிப்பிடும் 'தொகை' யாது? நன்கு எடுத்துரைக்க. மு. சி. பூ.

பரணர்.

திரு. வித்துவான் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக் கலாசாலை, காவேரிப்பாக்கம்.

(முற்றொடர்ச்சி அணர் 7. பக்கம் 43.)

திதன்

இவன் உறையூரையாண்ட சிறந்த சோழவேந்தருள் ஒருவன்; தலைநகராகிய உறையூர் இவன் காலத்தே அரணும் கிடங்கும் திண்மையும் பிறநலமும் பெற்றுச் சிறந்தோங்கியது. இதன் உறுதியுடைமை நோக்கிப் புலவர்பெருமக்கள், "நொச்சி வேலித் தித்தன் உறந்தை" எனவும், "மாவண் தித்தன் பிண்ட நெல்லின் உறந்தை", "தித்தன் வெளியன் உறந்தை" எனவும், பல படப்புகழுவாராயினர். இவனுக்கு ஐயை என்னும் கற்பிற் சிறந்த மகளும் வீரங்குன்றாப் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்னும் மகனும் இருந்தனர்.

"சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்" என்றும், "வீரை வெளியன் தித்தனார்" என்றும் வழங்கப்படுதலாலும், "பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ" என்று தொடங்கும் அகப்பாட்டொன்று இவன் பெயரால் காணப்படுவதாலும், இச்சோழ வேந்தன், தித்தன் வெளியன், வெளியன் தித்தன், வீரைவெளியன் தித்தன், வீரைவேண்மான் வெளியன் தித்தன் என்றெல்லாம் வழங்கப்பட்டனன் என்பது பெறுதும். "வீரை வெளியன் தித்தனார்" என்று அழைக்கப்பட்டதனாலும், இவனது செய்யுளும் சான்றோர் செய்யுளுள் ஒன்றாகத் தொகுக்கப் பட்டிருப்பதனாலும், இத்தித்தன் ஒரு சிறந்த நல்லிசைப் புலவன் என்பது விளங்குகின்றது.

இனி, இச்சோழனது புலமை நலத்தை யாராய்வதன் முன் இவனது ஆட்சிநலன், மக்கள்நலன் ஆகிய நலன்களை ஒரு சிறிது நோக்குதல் நேரிது.

இவன் ஆட்சியில், உறந்தைப் பகைவரால் எளிதிற் கைப்பற்ற இயலாத கல்முதிர்ந்த காட்டரண் கொண்டிருந்தது. இந் நகரருகே காவிரியாறு ஓடக்கோல் விடினும் நிலைத்தலாற்றாத பெரும் பெருக்கிட்டோடிற்று. இக் காவிரியாயும் நீர் நாட்டிற் கானலம் பெருந்துறைக்கண் தனம் தரும் நன்கலம் பல காலினும் கோலினும் வந்தெய்தும். இந் நற்கலங்களின் இடையே கிடத்தப் பெறும் இருக்களின் குப்பை செறிந்து விளங்கும்.

இவனது தலை நகரின்கண் காலை, மாலையாகிய இருபோதும், அவற்றை யெதிர் கொள்ளுவதுபோல, முரசம் முதலிய வாச்சியங்கள் ஒலித்தன. இஃது எல்லா அரசர் தலைநகரங்களினும் நிகழ்வதாயினும், இவனது முரசவொலியும், ஏனைத் தெள்ளிய கிணை முதலியவற்றின் ஓசையும் பிறநகரங்களின் ஓசையினும் சிறந்தனவாதல் பற்றியே ஆசிரியர் முதுகூற்றனார், பரணர் முதலியோர் விதந்து கூறுவாராயினர். மேலும், இவனது கிணைப்பாடு கேட்டு அஞ்சிப் பொராது ஓடின வீரனொருவனும் உளன். அவன் பெயர் கட்டி என்பது. அவன் பாணன் என்பானொருவனைத் துணைப்பெற்று, இத்தித்தன் உறந்தையைக் கைப்பற்ற எண்ணி, முற்றுகையிட்டவன், இவனது நாளவைக்கண் எழுந்த, கிணையொலி கேட்டு அஞ்சிப், போர் செய்யாமல் ஓடி விட்டான். இச் செய்தியும் பிறவும்,

"வீரை வேண்மான் வெளியன் தித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை." (நற். 58) எனவும்

"வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராது ஓடிய ஆர்ப்பு" (அகம். 226) எனவும்

வருவனவற்றாற் பெறப்படும்.

இவனது மகள் ஐயை என்பாள் புலவர் பாடும்புகழ் பெற்றவள். அவள் அரிபெய்த சிலம்பும், ஆம்பல் மலரால்

தொடுக்கப்பெற்ற மாலேயும், அரத்தாற் போழப்பட்ட அழகிய வளேயும் அணிந்தவள். இழைகள் பல அணிந்து, மூங்கில் போல் சிறந்த தோளே உடையவள். இவள் பெய்யெனின் மழைபெய்யும்; அத்துணைச் சிறந்த கற்பு மேம்பாடு உடையவள். இதனுல், இவள் தந்தை "ஐயை தந்தை தித்தன்," என வரும் புகழ்க்குரியனுனன்.

இவன் மகன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி யென்றே மன்றே. இவன், ஆசிரியர் தொல்காப்பியனுர் * "தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனுல்" என்று கூறுதலால் † "சீர் சான்ற விழுச்சிறப்பின், சிறுகண் யானேப் பெறலரும் தித்தன்" என நக்கீரனுர் பாராட்டும் தித்தனுடைய "அந்தமில் சிறப்பி" னேயுடைய மகனுய், யானேபோலும் மெய்வலியும் ஈகைச்சிறப்பும் உடையனுவான் என்பது பெறப்படும். படினும், யாது காரணத்தாலோ, இவன் தன் தந்தையுடன் வெறுத்து, வெளிப் போந்து, தன்னுட்டையும் இழந்து, வறுமையால் மிகவருந்திப் புல்லரிசிக் கூழுண்டிருந்தான். இருப்பினும், தன் கட்டழகிலும், போர் வன்மையிலும், சிறிதும், இவன் குன்றுமை கண்டு, **பெருங் கோழி நாய்கன் மகள் நக்கண்ணேயார்** என்னும் புலவர் பெரு மாட்டியார் இவன்மீது காதல்கொண்டு தன் காதலே வெளிப் படுத்தற்குத் தன் யாப், அவையோர் முதலானேர்க்கு அஞ்சிப் பாடும் பாட்டுக்கள் மிக இரக்கமும் சுவையும் தருகின்றன ‡.

பின்னர் ஒருகால், இவன் முக்காவனுட்டு ஆமூர் மல்லன் என்பானேடு மற்போர் செய்து அவனேப்பொருது வென்றி பெய்தினன். அப்போரினேக் காண்பவர், "கிள்ளியேவென்றி பெறுவன்" என்பாரும், "வென்றி அவனுக்கன்று" என்பாரு மாக இருதிறத்தும் வியந்து நிற்ப, நக்கண்ணேயார் தம் சிலம் பொலிப்ப ஓடி நேரே கண்டு, கிள்ளியே வெற்றியெய்தினமை நோக்கி மகிழ்கின்றுர். இதனே அப்பெருமாட்டியார்,

"என்னேக்கு ஊரிஃது அன்மையானும்,
என்னேக்கு நாடிஃது அன்மையானும்

---

* தொல். பொருள். சூ. 147. † புறம். 395. ‡ புறம் 80—5.

ஆடு ஆடு என்ப ஒருசா ரோரே
ஆடன் றென்ப ஒருசா ரோரே
நல்ல பல்லோர் இருநன் மொழியே!
அஞ்சிலம் பொலிப்ப ஓடி எம்மின்
முழாவரைப் போந்தைப் பொருந்தி நின்று
யான்கண் டனன்அவன் ஆடா குதலே" என்று

இயற்கை நலம் சிறக்கப் பாடியுள்ளார்.

இனி, இச்சோழன் தித்தனது நல்லிசைப் புலமையை விளக்குதற்கு, இவன் பாடிய அகநானூற்றுப் பாட்டு ஒன்றின் ஆராய்ச்சியே அமையுமாதலின், அதனை யீண்டுச் செய்வாம்;

"பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ
இருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
போர்ப்புறு முரசின் இரங்கி முறைபுரிந்து
அறநெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் ததிர்ந்த பெருஞ்சே யாடவர்
கழித்தெறி வாளி னளிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவியை யாகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொட ரடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்டக இயலித்
தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்
அழிலேர் செயலை அந்தழை அசைஇயும்
குறமகள் காக்கும் எனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே."

என்பது அப்பாட்டு. இது இரவிற் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. என்றது, தலைவன் இரவினும் பகலினும் களவொழுக்கம் பூண்டு வருதலால் பலர் அறிந்து கொள்வர் என்றஞ்சியும், தலைமகளது பிரிவாற்றுமை கருதியும், தலைவனை வரைந்து கோடலைவேண்டிய தோழி மழைமேல் வைத்துக் கூறுதல்.

இதன்பொருள்—பெரிய கடல்நீரை முகந்த கரிய கிளை மேகங்களுடன் கூடிய மேகமே! கருத்து, உயர்ந்த வானத்தின்

கண் வலமாக எழுந்து வளைத்து, நல்ல எருதினது தோலால் மூடப்பட்ட முரசத்தைப் போல் அதிர்ந்து, யாவர்க்கும் ஒப்ப நீதியைச் செய்தலால் வரும் அறப்பயனைப் பெறுதற் கண் தப்பாத கூறுபாட்டினை அறியும் மன்னரது கிட்டுதற் கரிய போரின்கண் எதிர்ந்த, மிக்க பெரிய செயலையுடைய வீரர்களின் உறைகழித்து வீசப்படும் வாளைப்போலப் பெய லாகிய பயனைத் தருவனவாய் விளங்கும் மின்னுக்கொண்ட தொகுதி யுடையையாய், மழையே! நீ நாளும் பெருமுழக் கத்தினை ஒருவகைப் பயனுமின்றிச், செய்கின்றனையோ? அன்றி, பொன்போல் மலர்ந்த வேங்கையினது, மிக்க பூக் களால் தொடர்ப் படத்தொடுத்த மாலையினைச் சேர்த்திப், பொலிவுற்ற ஆயத்தாரோடு அழகு தக்கிருக்கும்படி நடந்து சென்று, தழலை, தட்டை முதலிய கருவிகளை வாங்கிக், கிளி முதலிய பறவை ஓட்டியும், நெருப்பொக்கும் அசோ கினது அழகிய தழையினை இடையிற் கட்டியும், குறவர் மகளிர் காவல் செய்யும் தினைப்புனத்தைப் பாதுகாக்கின் றனையோ? யாது செய்கின்றனை? கூறுவாயாக என்பது.

"போர்ப்புறு முரசம்" எனக் கூறினமையால், சிறப் புடைய எருதினது தோல் கொள்ளப்பட்டது; "ஓடா நல்லேற் றுரிவை தைஇய, பாடுகொள் முரசம்" (1) எனவும், "கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக்கண் முரசம்" (2) எனவும் கூறப்படுதல் காண்க. "முறைபுரிந்து மன்னர்" என்பதற்கு, ஒறுங்குங்கால் கண்ணோடாது செய் தலே முறையாவது என்னும் நெய்தற் கலியால், கண்ணோ டாது முறைசெய்து, அறவழியினின்றும் பிறழாத நெறிமை யினையறிந்த மன்னர் எனினுமாம். பெருஞ்செய் ஆடவர் என்பது இப்பொருட்டாதல், "களிறு களம்படுத்த பெருஞ் செய்யாடவர், ஒளிறுவாள்" (3) எனவும், "புரவெதிர் கொள்ளும் பெருஞ் செய்யாடவர்" (4) எனவும் வருவன வற்றால் உணர்க. "வாளின் நளிப்பன" எனக்கொண்டு

(1) அகம்-334. (2) மது-காஞ்சி 732, 3. (3) நெடு-வாடை 171. (4) புறம் 199.

செறிந்தனவாய் என்று கொள்ளினுமாம், நளியென்னும் சொல் வினைச்சொற்கு அங்கமாகி வருமாதலாலும், (5) நளிந்து பலர் வழங்காச் செப்பம்'' (6) என்றவிடத்து நளியென்னும் சொல் வினையாகி வந்தமையாலும். “தழலாவது கையிற் சுற்றின காலத்துத் தன்னிடத்துப் பிறக்கும் ஓசையாற் கிளி முதலிய வற்றை ஓட்டும் கருவி; கவணென்பாருமுளர். தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி'' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். (குறிஞ்சிப்பாட்டு. 43-4. உரை.) “மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'' என்பவாகலின், “அறநெறி பிழையா மன்னர்'' என்றார். தலைமகன் குறிப்புணர்ந்து செயற்கரிய செய்து வெற்றியே பெறுதன் மாலையராகலின் அவரைப் பெருஞ் செய்யாடவர் என்றார். செய் என்பது முதனிலைத் தொழிற்பெயர், மிக்க செயலைச் செய்யுங்காலத்து அவர் விரைந்து செய்வாராதலி ஞலும், அச்செயற்கு அவரது வாள் பலமுறையும் தீட்டுதல் பெறுதலினாலும் மின்னுக்கு உவமை கூறினர். இருங்கிளைக் கொண்மூ என்றது விளி.

இப்பாட்டின் பொருள் இரண்டு வினாக்களுள் அடங்கு கின்றது. ஒன்று முகிலே, நீ, கிளை முகிலோடு சூழ்ந்து கருத்துயர்ந்து வானத்தை வளைத்து, முரசின் அதிர்ந்து, வாளின் மின்னுடைக் கருவியுடையையாய்வறிதே அரவம் செய்கின்றனையோ? என்பது. மற்றொன்று, குறமகள் வேங்கை மலிதொடர் அடைச்சி, ஆயமொடு இயலிச்சென்று தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும் செயலையந் தழையினை இடையிற் கட்டியும் காவல் செய்யும் ஏனற் புனத்தைப் புறந்தருதியோ? என்பது.

இவற்றுள், மழை மின்னல் இடி முதலியவற்றுடன் விசும்பெங்கும் இருண்டு பரவுதலால், பேரிருள் எங்கும் சூழ்ந்துகொள்ள, அக்காலை, தலைமகன் வருதல் கூடாது ஆகலின்,

(5) தொல்-சொல் சூ. 292. தெய்வச்சிலையார். (6) மலைபடு. 197.

அவன் பிரிவாற்றாது தலைமகள் வருந்துவாளென்பதையுட் கொண்டு அஞ்சி வருந்துகின்ற தலைமகட்கு, ஆற்றுதல் கூறு வாள், தோழி, "கொன்னே அரவம் செய்தியோ" எனவும் "எனற் புறமுந் தருதியோ" எனவும் கூறினள். எங்ஙனம் ஆற்றுமை தீர்ப்பதாயிற்று எனின், மின்னுடைக் கருவியதாகி, மழைபெய்தலின்றி, அரவம் மட்டில் செய்தலால், தலைமகன் ஆற்றின்கண் ஏதமின்றி, இடையறாது மின்னும் மின்னுத் தொகுதி தன் கைவேல் ஆகிய இவற்றின் ஒளியால் நெறி பற்றி, மழையின்மையால், விரைந்து வருவன் எனத் தலை மகள் உணர்ந்து ஆற்றியிருப்பள். எனற் புறந்தருதலால், தினைமுற்றி விளைவு கொண்டகாலம் வரைதற் கேற்ற காலமாத லறிந்தமைவள் என்பதாம். இதுபற்றியே, வேங்கை மலர்ந் தமையும், கிளி முதலாய பறவைகள் படிதலையும் உடன் கூறினள்,

"உடனுறை யுவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே" என்ற

ஐந்தனுள் "சுட்டு" என்பதன்பாற் படுவதனல் இப்பாட்டுத் தலைவனுக்கும் கூறியதாயிற்று. சுட்டு என்பது, "உடனுறை உமவம் இன்றி, நகையும் சிறப்பும் பற்றாது ஒன்று நினைந்து ஒன்று சொல்லுவது." அங்ஙனமாகுங்கால், தலைவனைநோக்கி, "கொன்னே அரவம் செய்தியோ" என்றதனல் "நீ இன்னமும் பயனின்றி அலர் விளைத்தியோ" எனவும், "புறமும் தருதியோ" என்றதனல், "காலம் நோக்கித் தாழ்க்காது வரைந்து கொள்வையோ" எனவும் கூறினளாம். முதலாவது கடல்போலும் கல்வியும் ஆண்மையும் பெருமையும் பெற்று வில்லேந்திய இளையர் பலர் சூழ வளர்ந்து உலகுபுகழச் சீலத்தால் உயர்ந்து, இவ்விரவின்கண் களவொழுக்கம் பூண்டு வேலும் வாளும் துணையாக இவளை யருள்பவர்போல் வருகின்றீர் பெரும! நும் வரவு இவளை யருளுவதுபோலத் தோன்றினும், வரைதலாகிய பயனின்றிக் கொன்னே பலரறி சொல்லான அலராகி விளைகின்றது. இது செய்வது நின் கருத்தோ?

தொல்-பொருள்-பொருளியல் சூ. 48.

என்பது. இரண்டாவது வேங்கை மலருங்காலம் வரைதற் கேற்ற காலம் என்று எண்ணி, பொன்னொடு சான்றோர் பலரை விடுத்து வரைந்து கொள்ளுவையோ?" என்பது.

இங்ஙனம் வினவுகின்றவிடத்து "பயனின்றி அலர் விளைத்தியோ" என்பதுபோல வினுதல் தோழிக்கு இலக்கண மன்று; ஆயினும், வரைதல் வேட்கை மிகுதியால் அவள் வினவுகின்றமையின், அமைந்தது.

இக்கருத்துக்களனைத்தும் அகத்தேகொண்டு மழை மேல் வைத்து உலகியல் கூறுவார் போன்று புலமைத்திறம் நன்கு அமையப்பாடிய இவரது செய்யுள் ஆயுந்தொறும் மிக்க சுவை தருகின்றது. அதனால், அதனை அன்பர்கள் பெறவிடுத்து, மேற்செல்லுகின்றேன்.

தழும்பன்.

இவன் கடல்சார்ந்த நிலப்பகுதியொன்றில் விளங்கிய தலை வன். இவனது ஊர் ஊணூர் என்பது. அது கடல்சார்ந்த தெனினும் நீர்வளம் சிறந்து நெல் விளையும் நல்வளம் பொருந்தி யது. இது "முழங்குகடலோதம் காலைக்கொட்கும், பழம்பல் நெல்லின் ஊணூர்" என்று ஆசிரியர் மருதனிள நாகனார் பாட்டி னாற் றெரிகின்றது. இந்நெல் வயற்கண் வந்து படியும் பறவை கள், உழவர் எழுப்பும் தண்ணுமை ஓசைகேட்டு அஞ்சி அருகி ருக்கும் பெண்ணை முதலிய மரங்களின் மடற்கட் சென்று அம ரும். அங்குத் தேனீக்கள் ஈட்டிய தேன்கூடு அழிவுற்றுத் தேனைச்சொரியும். அதனைக்கொண்டும் அருகு ஒலமிடும் கடற் கண் வாழும் சிறுமீன்களைக் கொண்டும் வாழும் பாணரது சேரி இவ்வூணூரின்கட் சிறந்து நிற்கின்றது. இந்நகரைச் சுற்றிச் சிறந்த காவலமைந்த அரண் விளங்கிற்று. இதன் மேற்பால் மிக்கு விளங்கும் சீரிய செல்வத்தால் பெருமையுற்ற மருங்கூர்ப் பட்டினம் என்னும் பெரிய நகரமொன்றுளது என மருதனிள நாகனார், "கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர், விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர் மருங்கூர்ப் பட்டினம்" என்பத னால் அறியப்படுகின்றது.

இத்தழும்பன் "பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன் என்றும், இவனைத் தூங்கல் என்னும் புலவர் ஒருவர் பாடியுள்ளாரென்றும், அந்நாகனார் பாட்டே கூறுகின்றது. ஆசிரியர் பரணர், "பெரும்புண் ஏஎர் தழும்பன்" என்று கூறுதலால், இவன் போரிற் பெரும்புண் பட்டதனால் வந்த தழும்பு செய்த அழகுடையவன் என்று தோன்றுகின்றது. தோன்றவே, இவன் இயற்பெயர் இன்னதெனத் தெரிதற்கியலாது ஒழிகின்றது.

"பெரும்புண் ஏஎர் தழும்பன்" என்றும், "வாய்வாள் தமிழகப்படுத்த தழும்பன்" என்றும் வழங்கப்படுதலை நோக்கின், இவன் சிறந்த போர் வீரன் என்பதும், ஒருகாலத்து, இவன் தமிழரையோ, தமிழ் நாட்டின் ஒரு பகுதியையோ தன்னாட்டின் அகப்படுத்தினன் என்பதும் அறியப்படுகின்றன.

மேலும், இவன் சிறந்த கொடையாளி என்பதும், வாய்மை குன்றாதவன் என்பதும்,

"வாய்வாள்
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநாளி ருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்" என்றும்,
(அகம். 227).

"பெரும்புண்,
ஏஎர் தழும்பன் ஊணூ ராங்கண்
பிச்சை சூழ்பெருங் களிறு போல" (நற். 300) என்றும்,
"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்
கள்ளரிக்கும் குயம்சிறுசின்
மீன்சீவும் பாண்சேரி
வாய்மொழித் தழும்பன்." (புறம். 348) என்றும்,

வருவனவற்றாற் பெறப்படுகின்றன.

கழுவுள் :—இவன் காமூர் என்னும் ஊரின்கண் இருந்த மிக்க வள்ளன்மை பொருந்திய தலைவனாவான். இவனது காமூரின்கண் பூதத்தால் தரப்பட்டதோர் வேங்கைமரம் இருந்தது. அதுமிக்க மணங் கமழுவதாகும்.

இக்கழுவுள் என்பான் வேலேந்திய வீரர் தலைவன். இது பற்றியே இவனைப் பரணர் "வென்வேல், மாவண் கழுவுள்" என்றார். இவன் தன் வள்ளன்மையாலும் வேல் வெற்றியாலும் மிக்க சிறப்புடையனாதல் கண்டோ, வேறு எக்காரணத்தாலே போர்த் தொழிலால் அழியாப் புகழ் படைத்து வானளாவும் பெரிய கொற்றக் குடையுடையராய பதினான்கு வேளிர்கள் ஒருங்குகூடி இவனை எதிர்த்துப் பொருதனர். அப்போரின்கண் கழுவுள் இறந்தொழிந்தான். அவன் நகரும் பாழ்பட்டது. இதனைக் கண்டு இரங்கிய ஆசிரியர் பரணர்,

"அடுபோர்,
வீயா விழுப்புகழ் விண்டோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்துஒருங் கெறிந்த
கழுவுள் காமூர் போல,
விளிந்தன்று மாதவர்த் தெளிந்தஎன் நெஞ்சே" (அகம். 135) என்று பாடுவாராயினர்.

இனி, இப்பெயருடைய இடையர் தலைவன் ஒருவன் சேரமான் பெருஞ் சேரலிரும் பொறையின் காலத்துக் குறும்பு செய்திருந்தான். அவன் தனக்கென அரண்செய்துகொண்டு வாழ்ந்து வருநாள், அவ்விரும்பொறையுடன் பகைத்துக் கொள்ளவும், அவன் சினங்கொண்டு,

"ஏறுடை
கன்றுடை யாயம் தரீஇப் புகல்சினந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடாவைகற் பொழுது நினையூஉ
வான்சயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
பதிபாழாக வேறுபுலம்படர்ந்து"

வெற்றியால் பகைத்தவரிடத்துத் திறைகொண்டு பெயர்ந்தனன் என்று பதிற்றுப்பத்தில் அரிசில்கிழார் கூறுகின்றார். இச் செய்தியே மீட்டும் பெருங்குன்றூர் கிழாராலும் "பொரு முரண் எய்திய கழுவுள் புறம் பெற்று, நாம மன்னர் துணிய நூறிக், கால்வல்புரவி அண்டரோட்டி" என்று ஒன்பதாம் பத்தினும் கூறப்பட்டது.

இவ்விடையர் தலைவனும் காமூர்த் தலைவனும் ஒருவனே யாயின் இவன் சேரமானிடம் பொருது தலைவணங்கித் திறை செலுத்தியுய்ந்து, பின்னர் வேளிர் பதினுல்வராலும் எறியப் பெற்றுனென்று கொள்ளுதல் வேண்டும்.

மத்தி: இவன் காவிரிக்கரையிலுள்ள கழார் என்னும் ஊருக்குத் தலைவன். அவ்வூர் கீரனெயிற்றியார் முதலாய புலவர் பெருமாட்டிகள் பிறந்தவூராகும். இவ்வூர்க்கண் குறியவளையலை யுடைய மகளிர் நிறம்பெருந்திய நீராடுதலை வெறுப்பாராயின் பஞ்சாய்க் கோரையைக் கோதி வயற்கண் வந்துபாடியும் வெண் குருகுகளை ஒப்புவர். சுடர்போலும் அழகிய பூக்களையுடைய நிறைந்த நீர்மிக்கவயல்களில் தங்கும் நீர்நாய்கள், அழகிய தூம்பினையுடைய வள்ளைக் கொடியின் நிலையை நெகிழ்த்து, அங்குவந்து தங்கும் வாளைமீனை யுண்டு, முள்பொருந்திய தண்டினைக் கொண்ட பிரம்பினது பழமையான தூறுகளிலேதங்கி வாழும். இது,

"குறுந் தொடிமகளிர் குரூஉப்புனல் முனையின்
பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்
கரந்தையஞ் செறுவின் வெண்குரு கோப்பும் (அகம். 126)

எனவும்,

"சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்து
அந்தூம்பு வள்ளை ஆய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேன்மத்தி கழாஅர்" (அகம். 6) எனவும்

வருதலால் உணரப்படுகின்றது.

இம் மத்தியென்பான் பரதவர் என்னும் ஒருவகைக் குறுநிலமன்னர்க்குத் தலைவன். "தென்பரதவர் மிடல்சாய" எனவும் "தென் பரதவர் போரேறே" எனவும் வருவனவற்றால் இவர்கள் தென்திசைக் கண்ணே வாழ்ந்தவர் என்று தெரிகின்றது. மேலும், இவன் பலவேற் படையுடன் வலிமையான தோள்களையுடையவன். இதனாற்றான், இவனை யாவரும் "பல்வேன்மத்தி" என்றே அழைப்பாராயினர். ஒருகாலத்து இவன் வெண்மணி யென்னுமிடத்துப் பனித்துறை ஒன்று கட்டி ஆசிரியர் மாமூலனாரால் புகழப் பெற்றான். இவ் வெண்மணி வாயிலின் கண்,

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தா தொழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ்சே ணாட்டிற் றலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்லெறிந் தழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை" (அகம். 211)

என வருதல் கொண்டு எழினி என்பானது பல்லைப் பிடுங்கிக் கதவில் வைத்து அழுத்தினன் என்று சிலர் கூறுவர். அச் செய்தி நன்கு விளங்கவில்லை.

ஆதி மந்தி.

இவர் ஒரு நல்லிசைப் புலவர் பெருமாட்டியார்; சோழன் கரிகாற் பெருவளத்தானது மகள்; புகார் நகரத்துக் கற்புடைய மகளிர் எழுவருள் ஒருவர். இவரது கணவன் வஞ்சிவேந்தனை ஆட்டனத்தி என்பானவன். அவன் அழகிலும் நீரிலாடும் கூத்து வகைகளிலும் மிகச் சிறந்தவன்.

ஒரு காலத்து, ஆதிமந்தியார் தம் கணவனோடு புகார் நகரத்துக் காவிரியின் முன்றுறைக்கண் நிகழ்ந்த புதுநீர் விழாவின் கண், நீராடுவராயினர். அக்காலை அவள் தந்தை கரிகாலன் தன் சுற்றம் சூழ எழுந்தருளியிருந்தனன். ஆட்டனத்தி, தன் காலிற் சிலம்பு கிடந்து ஒலிப்ப, இன்னிசை

வல்லார் யாழ்கொண்டிசைக்க, கஞ்சதாளம் ஒருபுடை மணியொடு கறங்க, கச்சணிந்து, கழல்யாத்து, மணமிக்க மாலையணிந்து, ஆடத்தொடங்கினன். அங்ஙனம் ஆடினவனைக் கண்டகாவிரி அவனது அழகை விரும்பிக் கொண்டுபோய் ஒளித்து விட்டது; என்றது நீரில் மறைந்து விட்டான். ஆதிமந்தி அலமரலானுள். இது,

"ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல்நயந் தாடும் அத்திஅணி நயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு." (அகம். 376)

எனவும்,

"மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திற லத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு" (அகம். 396)

எனவும், சான்றோர் இரங்கிக் கூறியவற்ருற் றெளியப்படும்.

இங்ஙனம், கணவனை உயிரோடே யிழந்த ஆதிமந்தியார் ஆருக இருதடங்கண் அஞ்சன வெம்புனல் சோர, அளகம் சோரத் தன்னைவிட்டு வேருன தன் கணவனைத்தேடி, எதிர் வருவாரை யெல்லாம் தன் நாயகனது உருவம், உடை முதலிய சிறப்பெல்லாம் பலபட எடுத்துக் கூறியும், "கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன், வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல், சுரியலம் பொருநனைக் காண்டிரோ?" எனவும், "அணிகிளர் சாந்தின் அம்பட்டு இமைப்பக், கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை, அறியா மையின் அழிந்த நெஞ்சின், ஏற்றியல் எழில்நடைப் பொலிந்த முன்பின், தோட்டிரும் சுரியல் மணந்த பித்தை, ஆட்டனத்தியைக் காணீரோ?"

எனவும் கேட்டும், நாடுகள் தோறும் ஊர்கள் தோறும் சென்று, "என் நாயகனைக் கடல்கொண்டது, என் கொழுநனைப் புனல் கொண்டது" என்று வாய்வெருவிப் புலம்பி வாலியாயினள்.

இவ்வாறு, காதலனையிழந்து வருந்தும் மந்தியார், "யானும் அவைக்களத்து ஆடும் மகள் போன்றேன்; அவனும் ஒரு களத்தில் ஆடும் மகன் போன்றான். ஆதலால், பலருங்கூடும் இடங்களாகிய மள்ளர்களம், மகளிர் துணங்கையாடும் களம் முதலிய இடங்களினும் தேடினேன்" என்று சொல்லுவாள்,

"மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை?
யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகளமகனே"

என்று பாடிப்புலம்பி "யான் இனி என்செயப் போகின்றேன்" என்று வருந்தித்தன் கொழுநனைக் கவர்ந்த கடற்கரையை அணுகினள்.

கடற்கரையைக் கண்ணுற்றுக் காதலனை நினைந்து கதறிப் புலம்பிய ஆதிமந்தியின் நிலையைக்கண்ட கல்லும் புல்லும் உருகின; வெள்ளிவீதியார் என்னும் புலவர் பெருமாட்டியார் "யானே, காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து, ஆதி மந்தி போலப் பேதுற்று, அலந்தனென் உழல்வேன் கொல்லோ" எனத் தம் துயருக்கு உவமை கூறி வருந்தினர்; இக்காட்சியையும், ஆதிமந்தியின் அறக்கற்பினையும் கண்ட கடல், அவ்வாட்டனத்தியை ஒரு புறத்திற் கொணர்ந்து காட்டிற்று. கண்டதும், ஆதிமந்தியார் துயரத்தின் கரைகாணாளாய்க், கதறிப் புலம்பலும், அயல்புறத்தே கடலாடிப் போந்த மருதி என்னும் கற்புடைய மகளொருத்தி, அவனைக்கொண்டு வந்து, ஆதிமந்தியாரிடம் விடுத்துச் சென்றனள். காதலனைப் பெற்ற மந்தியார், மருதிக்கு ஆற்றுவதோர் கைம்மாறு காணாராய்த் தம்மனத்தெழுந்த நன்றியறிவினால், அம்மருதிக்கு வாழ்த்துக்கூறி வரம்பல தந்தனர்.

இங்ஙனம், கற்புடைய மகளொருத்திக்கு உதவிபுரிந்த மருதியின் செயல் சிறிதெனினும் பெரிதெனக்கொள்வார் பயன் தெரிவார் ஆதலால் புலவர் பெருமகனுரான பரணர்

“ முழவீமுகம் புலராக் கலிகொ ளாங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின்
ஆட்டனத்தி நலன் நயந்து உரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதியன்ன மாண்புகழ் பெறீஇயர்” (அகம். 222)

என விளங்கப் பாடியருளினர்.

இச்செய்திபின்னர்க் கண்ணகியார் தன்கணவன் கோவலன் கள்வனல்ல னென வழக்குரைத்து மீள்வார் அங்குக்கோல் கோடி வீழ்ந்த பாண்டியமன்னன் தேவியிடம் வஞ்சினங் கூறுங் கால், “பத்தினிமார் எழுவரான ‘மட்டார் குழலார் பிறந்தபதி (புகார்)ப் பிறந்தேன் “ என்று சொல்லுமுகத்தால், இந்த ஆதி மந்தியாரை முதற்கண் நிறுத்தி,

“உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல் கொள்ளத் தான்புனலின் பின்சென்று
“கன்னவில் தோளாயோ” என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்” (சிலம். 21-11-5)

என்று கூறுவதாக ஆசிரியர் இளங்கோவடிகள் பாராட்டுகின் றார். அன்றியும், பட்டினத்துப் பிள்ளையார் புராணத்துப் பூம்புகார்ச் சருக்கத்தும், இந்நிகழ்ச்சி,

“கரிகாலன் பெருவளவன் மகள் கேள்வன் கடல்புக்கான்
“திருவேயோ” எனவழைத்துத் திரைக்கையாற் றரக்
[கொண்டாள்

வரைகேள்வன் கலம் நோக்கி வருமளவும் கல்லாணுள்
புரைதீரப் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே" என்று
பாராட்டப் பெறுகின்றது.

மற்று, ஆராய்ச்சியாளர்களால் இந்நிகழ்ச்சியிற் கூறப்பட்ட காவிரி வவ்வுதலும், மீட்டும் தருதலும் ஆகிய செயல்கள், "கூத்தயர்ந்த ஆட்டனத்தி அயர்ந்து வெள்ளத்திலே வீழ்ந்துவிட அவனை அவ்வெள்ளம் கடலிடம் சேர்க்க, அங்கு மீன்பிடிப்போரால் 'கரைசேர்க்கப்பட்டு மூர்ச்சை தெளிந்து கடற்கரையே ஆட்டனத்தி நடந்து வந்தானை" மருதிகாண்டலும், கொணர்தலும், அவன் மனைவியிடம் சேர்ப்பதுமாய் நிகழ்ந்திருத்தல்வேண்டும் என்று எண்ணுகின்றனர். எனினும், வெள்ளத்தில் வீழ்ந்தான், உயிர்துறவாது கடலடைந்து கரைவருதல் அருமையாகலின் அது ஆதிமந்தியின் கற்பின் உறுதியுடைமைப்பயனே என்று யாவரும் உணர்ந்துகொள்வர்.

(தொடரும்)

அருளிச் செய்யப்பட்டன" என்றும், "வேதத்தின் ஞான காண்டம், சிவாகமத்தின் ஞானகாண்டம் என்னுமிரண்டும் திரிபதார்த்த இலக்கணங்களேயே கூறுவனவாயினும், வேதத்தின் ஞானகாண்டம் மாயாவாதிகள் முதலிய பலர்க்கும் அவரவர்கள் கன்மானுகுணமாகப் பலபொருள்படக் கிடத்தலானும், சிவாகமத்தின் ஞானகாண்டம் அவ்வாறாகாது சத்திநி பாதமுடையார்க்கு உண்மைப் பொருளைத் தெளித்துணர்த்தலானும், நிருவாண தீக்கை செய்யப்பெற்றுச் சிவாகமத்தை ஓதி உணர்ந்தார்க்கன்றி வேதாந்தத் துண்மைப்பொருள் ஒருவாற்றானும் விளங்குதல் கூடாமையானும், சிவாகமம் இருபத்தெட்டும் சிவபெருமானுடைய ஊர்த்துவமுகத்திற்றோன்ற, வேதநான்கும் மற்றை முகங்களிற் றோன்றினமையானும்,

---

நால்வருக்கும் வேதத்தைவிளக்கி அறமுரைத்தருளினன் என்னும்போதெல்லாம் இருக்காதி நால்வேதம் போன்ற நூல்களே குறிக்கப்பட்டன; ஆனல் வேதத்தால் அறம் பொருள் இன்பம் வீட்டையும் விளக்கினன் என்னும்பொழுதெல்லாம் ஆகமத்தை உள்ளிட்ட அறிவு நூற்களைக்குறித்தே வேதம் என்னுஞ் சொல் பயன்படுத்தப்பட்டதாகும். இதை விளக்க மணிவாசகர்

'நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ' என்றுவேதத்தின் பொருள் அறமேயாதலைக்குறித்ததன்றி அதற்கு மாறாக இறைவன் மறம் இயற்றியதாக உயர்வு நவிற்சியணியால்

அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ

என்று கூறியுள்ள கடையீரடியுங் கண்ணுறத்தக்கதே. இதனுடன் நில்லாது அப்பதிகத்திலேயே மாறுபடமொழிதலென்னுங் குற்றத்திற் காளாகாது முற்குறித்த மூன்று செயலையுந் தொகுத்து

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ

என்று அருளிச்செய்ததை நோக்க இருவகையாகவும் இயம்பியுள்ளது நன்குவிளங்கும்.

சிவாகமமே சிறப்புடைத் தென்றறிக. சனகர் முதலிய முனீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள் வரையும் ஓதியும் ஞானம் நிலைபெறாதவராயினர் என்றும், பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம் பெற்றனர் என்றும் காந்தத்திலே சங்கிர சங்கிதையிற் கூறியவாற்றானும், இவ்வுண்மை தெளிக''* என்றுங் கூறியுள்ளதே நன்கு தெளிவிக்கும்.

இவ்வாறு வேதங் குறிக்கும் அறத்தால் பொருளும், இன்பமும் எய்தினும் வீடு கைகூடாதென்பது வெள்ளிடை†. ஆனால் மூவர் தமிழால் வீடுமெய்துதல் கூடுமென்பது தன்னிகரற்ற இத்தமிழ் மூவராலேயே ஆணையிட்டுக் கூறப்படுதலின் அத்தகையோரை நிறைமொழி மாந்தர் என்றார் பெரியார். இவர்மொழி குறையாது நிறையாதல் எதனாலெனின் இவர் உள்ளம், மொழி, மெய் சிற்றின்பத்திற் செல்லாது இடையறாது பேரின்பத்திற் றேக்குறுதலினாலும், இவர் உயிரின் துணைக் கருவிகளற்று (பசு கரணங்களற்று) இறையின் துணைக் கருவிகளுடையராய் அவன் பேராற்றலுக்கு ஓர் இருப்பிடமாக விளங்குவதாலுமென்க. இதனாலன்றோ இத்தகையார் தன்மையைக் கூறும் தாண்டவராய சுவாமிகள்

[வெல்லாம்
ஞாலமுண்டவன் திசைதிசை சுமப்பன் மெய்ஞ்ஞானி வேண்டுவ
ஆலமுண்டவன் அவன்பினே செல்குவன் அவரடி துவட்கன்றோ
சீலமன்னரும் மற்றுளதேவரும் திசைதிசை நின்றேத்தக்
காலிரண்டையு முடிமிசைவையெனக் கழறுவன் கமலத்தோனே

---

* சைவசமயநெறி-உரை- 218, 31ம் ஏடுகளைப்பார்க்க. இக்கருத்துடனேயே சேக்கிழாரும் 'உலகியல் வேத நூலொழுக்க' மென்றும் 'வேள்விநற்பயன் வீழ்புனலாவது' என்றும் திருஞானசம்பந்தர் புராணம் 820, 822ம் பாடல்களிற் கூறியுள்ளார்.

† இதனாலன்றோ அப்பரடிகளும் தமது பாவநாசக் குறுந்தொகையில் 'வேதமோதிலென் சாத்திரங்கேட்கிலென், நீதிநூல்பல நித்தல் பயிற்றிலென், ஓதியங்கமோராறுமுணரிலென், ஈசனையுள்குவார்க்கன்றியில்லையே' என்றனர்.

என்று இவர், செயற்கரியவற்றைச் செய்தல் எளிதாகக் கூடும் வகையைக் குறிக்கின்றனர். இன்னோர் மொழிக்குத் திறல் இறைவியினுடையதே; செயல், இறைவனியற்றும் ஐந்து செயல்களே! இம்மொழிக்கு இயற்கையாகவே அமைந்துள்ள இசைப்பொலிவு இறையோசை (பரநாதவிந்து தத்துவங்களை) யை ஒத்ததே! இவ்வாறு பிறப்பிலேயே இம்மொழிக்கு திறலும், செயலும், ஓசையும் அமைதலின் பின்னர் யாவர் ஒலிக்கினும் அத்திறல், செயலை அடைகின்றனரென்பது வியப்பின்று. இம்மொழிக்கு வாய்த்த இசை ஓதுவார் உள்ளத்தை உருக்குவதுடன் திறல் நிறைந்த தண்மைப் பண்பை (சத்துவ குணத்தை) எழுப்பி அதன் அறிகுறியாம் மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வாரல், நாத்தழும்பல், உடல் நடுங்கல், கூசல், குதுகுதுத்தல் முதலிய திறல்பதியுஞ் செயல்களை (சத்திநிபாதச் செயல்களை நிகழ்த்தி அவர் உணர்வைப் பெருக்கி அவர் செயலைப் பயன்படும்படி செய்கின்றது. எனவே இவை மறைந்த பொருளைப் பயத்தலின் மறையாயும், நிறைந்தபயனை யளிப்பதன்றித் தன்னை ஓதுவாரைக்காத்து, இறைவனை எப்பொழுதும் நாவில் நெஞ்சில் இருத்துவதற்குப் பயன்படுதலின் நிறைமொழியாயும் விளங்குகின்றன. இதனாற்றான் "கண்டபெருமந்திரமே மூவர் பாடல் கைகாணுமந்திரங் கண்ணுதலோன் கூறல் † எனத் தேற்ற ஏகாரங்கொடுத்து வேதத்திற்கு அத்துணைப் பெருமையிலதென்பதை உமாபதி சிவமும் விளக்குவாராயினர். எனவே வீட்டியல் கூறும் தமிழ் மறையின் முன் வேற்றியல் கூறும் ஆரியமறை எவ்வளவிற்று? ‡

4. வேத வழக்கு ஓங்காரத்தை ஓதற்கு முன்னும் பின்னும் சொல்லல் போலத் தமிழ்மறை வழக்கும் திருச்சிற்றம்பலம் என்னும் மறைமொழியைக் கூறல் ஆகும். இவ்விரு

---

† திருமுறைகண்டபுராணம்-13.

‡ இஃது இவ்வாறாக இதற்குநேர்மாறாக 'வீட்டுநெறி தமிழிற் கூறார்' என்று கூறுவது இருவகையாகக் கொள்ளக்கூடும்; ஒன்று வீடென்றதின் பொருள் வேறுதல் வேண்டும்; அல்லது எங்கு ஆரியத்தை இழந்துவிடப் போகின்றனரோ வென்று மூடிக்கொண்டதன்றித் தமிழையும் இகழத்தொடங்கியதாகவும்வேண்டும்.

மறைமொழிகளுமே இவையிரண்டிற்கு முள்ள வேற்றுமையை நன்கு விளக்குகின்றன. ஒரு முறை திருச்சிற்றம்பல மென்னல், ஓங்காரத்தை உள்ளடக்கி யிருப்பதால் அதனினும் மேம்பட்ட திருவைந்தெழுத்தை இருபத்தோராயிரத்து அறு நூறு முறை ஒலித்தலை ஒக்கும் என வாதவூர்ப்புராணம் வலியுறுத்துகின்றது. எனவே இம்மறை மொழியைப் பயிலுவதால் ஓங்காரத்தை ஒலிப்பதினும் பல்லாயிர மடங்கு பலனை எளிதில் அடையலா மென்றாகிறது. இஃதன்றி 'ஓங்காரமாகிய நற்றிருவாசியையும்' உள்ளடக்கிய திருச்சிற்றம்பலத்தை நினையுந்தோறும் அதனுள் விளங்கும் இவ்வுலக விளக்கத்திற்கு அடிப்படையாகிய, அறிவி லறிவாகிய, நுண்ணறிவுப் பொருளாம் திருச்சிற்றம்பல முடை யார் "பரஞ்சுடர்ச் சோதியுட் சோதியாய் நின்ற சோதியே"† யாதலின் நம் உள்ளத்தில் பேரொளியாய்ப் பொலிவர். ஆனால் ஓங்காரத்தை நினையுந்தோறும் 'பரமான்மாவாகிய பரம சிவத்தினுடைய பராசத்தியால்' காரியப்படும் குடிலையென்னும் பருப்பொருளே இறையொளியின்றி எண்ணப்படும். இதனா லேயே மூவர்தமிழ் அறிவுவடிவாய் வீடுபேறு முதவுமென்பதும் ஆரியவேதம் அறத்தாற்றிற்கே யாகுமென்பதும் புலனும்.

5. ஆரிய வேதம் பல வேள்விகளையும், செயல்களையும் விதந்து கூறி அவற்றிற்கு வேண்டிய மறை மொழிகளை புதவும். இதைப் புரிவதினால் 'கலியை வாராமே செற்றார்' என்றார் சம்பந்தர். எனவே வேதநூலொழுக்கம் உலகியல் நடை பெறுவதற்கேயாம். ஆனால் இவ்வேள்விகள் 'சிறு தெய்வங் களுக்கே' உவந்தனவாதலானும், உயிர்க்கொலை, சோமக்குடி, இன்னும் சொல்லவுங் கூசத்தகுந்த பல செயல்களையும் செய்ய ஏவுகின்றமையினாலும் அவற்றுட்பல இக்கடை யூழிக்குத் (கலியுகத்திற்குத்) தகாதனவென்று தள்ளப் படுவதலானும், எஞ்சிய சில மிகுதியாக வழங்குவாரின்றி வறிதே வற்றலானும், தமிழ் மறையாம் பொது மறையால்

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று

என்று

† திருநாவுக்கரசு-சித்தத்தொகை-3.

தடுக்கப்பட்டனவாதலானும் பெருமை யுடையனவாகா. ஆனல் தமிழ் மறைகளோ அருள்பெறல், திருநீறு கண்மணியணிதல், ஐந்தெழுத்தோதல், கோயிலில் தொழுதல், இறைவடிவை உள்ளல், அவன் திருவடி பேணல், போற்றி செய்தல், அடிமை பூண்டு தொண்டியற்றலாகிய கொலை குடி அற்ற, அன்பு அருளுடைய எண்வேள்விகளைப் புரியச்செய்து, அறம், பொருள், இன்பன்றி வீட்டையுமளிக்கும் பெருமையுடையனவாம். இரண்டாவதாக இவ்வெண் வேள்விகளை யியற்றியும், தக்க பதிகங்களை ஓதியும் நாற்பொருளில் முதன் முப்பொருளாம் அறம் பொருளின்பத்தை அடைந்து ஐந்து புலனும் ஆரத்துய்த்தும் இம் மூன்றும் 'விட்டதாம் பேரின்ப வீட்டை' அடைதலுங் கூடும். எங்ஙனமெனின் அவ்வாறடைந்து சிற்றின்பத்தைத் துய்த்தலும் இறைவன் திருவருட் செயலையே தெளிவிக்குமாதலினும், அதனல் அவன் பேரருள்புலனய் அம்முழுமுதலையே அடையும் அவாத் தோன்றுமாதலினும் பேரின்பவீடும் முடிவில் அடையப் பெறுகின்றது. இவ்வாறே சுந்தரர் பெண்ணும் பொன்னும், சேரமான் பெருமாள் அரசுடைத் திருவும், பாணபத்திரனர் பலபரிசிலும் வரிசைகளும் இறைவனருளாற் பெற்றுத் துய்த்தும் வீடுற்ற துலகறிந்ததே. ஆனல் வேத வேள்விகளுட் சிறந்த 'அசுவமேதம்' ஆயிரம் புரியினும் அவை இமையவர்கோனின் இன்பங்களைத்தான் ஈட்டுமாதலின் அவாவறுக்க இயலாது மயக்க முறுவதே மாண்பாகின்றது. அவ்வாறிழிந்து தாழ்ந்த பிறவிகளையுமடைந்தோர் எண்ணில ரென்பதைப் பழவரலாறுகளிற் கண்டு கொள்க.* மூன்றாவதாகத் தமிழ்மறை கூறும் எண் வேளவிகளைச் செய்தலோ எளிது, பயனே மிகப்பெரிது; ஆனல் ஆரிய வேள்விகளைச் செய்தலும் அரிது அதனல் அடையக்கூடிய பயனும் மிகச் சிறிதேயாகும். இவ்வேள்விகளன்றி வேதங்களிற் கூறப்பட்ட ஏனைய நெறிகளும் இத்தகையனவே என்பதைப் பட்டினத்துப் பிள்ளையார் :—

* வந்தவழியே போகுமென்ற உலவழக்கிற்கேற்பச் சிறப்பில்லா வழிளாலடைந்த வின்பம் சிறிதேயாயும் சிறிது பொழுதே நீடித்திருப்பதாயும் இருக்கிறது. ஆனல் தூய அறிவுடைவழிகளாலடையக் கூடிய இன்பமோ பெரிதாதலோடு நிலைத்து நிற்கக்கூடியதுமாகும்.

மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கண்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவருங்
காடு மலையும் புக்குக் கோடையிற்
கைமே னிமிர்த்துக் காலொன்று முடக்கி
யைவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்து
முடையைத் துறந்து முண்ணு துழன்றுங்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியுங்
களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டுந்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
ரீங்கிவை செய்யாது யாங்க ளெல்லாம்
பழுதின் றுயர்ந்த வெழுநிலை மாடத்துஞ்
செந்தா துதிர்ந்த நந்தா வனத்துந்
தென்றல் வியங்கு முன்றி லகத்துந்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலு
மயிற் பெடை யாலக் குயிற்றிய குன்றிலும்

....

....

அஞ்சொன் மடந்தைய ராகந் தோய்ந்துஞ்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்து
மறுசுவை யடிசில் வறிதிருந் தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க்கென்றும்
வாடினர்கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசி னல்லன தொடையிற் சேர்த்தியும்

மைந்து புலனு வார வார்ந்து
மைந்தரு மொக்கலு மனமகிழ்ந் தோங்கி
யிவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திர வெழுத்தைந்து மாயிடை மறவாது
சிந்தை நின்வழிசேலுத் தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வ வத்திற
நின்னது பெருமை யன்றே வென்னெனின்
வல்லானொருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா வொருவன் வாளா வெறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லே போல
நலத்தின் வழார்நின் னுமநவின் றோரே*

என்று அழகாக விளக்கியிருக்கின்றனர் இதனாற்றான். சிவதரு மோத்திரத்திலும் "ஒப்பிலி யனாதிமுத்தன் ஓதிய வேதத் துள்ளுஞ், செப்பிய சிவதன்மங்கள் சிறந்த"ன என்றருளப் பட்டிருக்கின்றது. †

6. ஆரிய வேதம் பல்லாயிரம் ஆண்டாகக் கற்பிப்போன், கற்போர் வழி வகையில் ஓதப்பெற்றுப் பெரும்பாலும் எட்டி லெழுதப்படாது வந்ததால் மக்கள் அறிவின் சிறுமையினால் கற்போன், கற்பிப்போர் அறிவாற்றலுக்குத்தகச் சுருங்கியும், பிறழ்ந்தும், பெருகியும் வந்திருக்கின்றது. இதனாலன்றே ஒரு சாரார் வேதத்தின் வேள்வி, விதிகளைக் கற்பிக்கும் இன்றி யமையாப் பங்காகிய 'பிராம்மணத்தை மானுடராலாக்கப் பெற்றதாகத் தள்ளுகின்றனர் ‡. ஆனால் தமிழ் மறையோ உடனெழுதப் பெற்றதாலும், பன்னெடும் பொழுது பாடுகிடப் பினும் அதைப் போலியற்ற இறையருள் பெற்றார்க்கன்றி

* பதினோராந் திருமுறை-திருவிடைமருதூர் மும்மணிக்கோவை-19

† இவ்வைந்து வகையானும் ஆரிய வேதம் இறை நெறியன்றி ஏனைய நெறி முதனூற்களினுஞ் சிறந்து விளங்குதலைத் தேர்ந்துதெளிக. அவற்றை விரிவஞ்சி விடுத்தாம்.

‡ திருநான் மறை விளக்க ஆராய்ச்சி-வித்துவப் பெரியார் அபிப் பிராயம்-17 வது பக்கம்.

ஏனையோர்க்கு இயலாதவொன்றாதலானும், வெள்ளி முதலி யோரால் இயற்றப் பெறினும் அப்பாட்டின் வெண்மையால் வேற்றுமை வெளியாவதையும் எளிதினுணரலாம். எனவே இஃதொன்றே இறைவனால் சுருக்கம் பெறினும் மானுடரால் சுருங்காமறை யாவதன்றி இடைச் செருகலுக்கும் இடங் கொடாததாம்.

மேற்காட்டிய ஆறு வகைகளாலன்றி வேறுவகையாலும் தமிழ்மறை ஆரிய மறையினுஞ் சிறந்திருத்தலைத் தெளிவிப் பான் தொடங்கிய திருவாளர் சுவாமி நாதபண்டிதர், தம தருமைத் திருவடங்கற் றலமுறையில் நாற்பத்து நான்கு தெள்ளிய வகையாற் றெளிவித்துத் தொடுமிடந் தோறும் பெருமையே யிருத்தலைக் கண்டு சலித்து "இங்ஙனம் திராவிட வேதப் பெருமை யின்னும் பல்கோடியில்லையோ? அவை யெல்லாம் பல நாளாகப் பன்னுப் படைத்தார் உடம் பெல்லாங் காது பெற்றார்க்குச் சொன்னாலும் சொல்லித் தொலைவு படுமோ? கேட்டு முடியுமோ? இல்லை!! ஆகலான் அப்பாற் செல்வாம்" என்றார். ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலின் ஆண்டு அவற்றைக்கண்டு கொள்க.

இவ்வாராய்ச்சியின் முடிபு யாதெனின், ஒருமையாலுலகை வென்ற உயர்ந்தோர்களால் இயற்றப் பெற்றதாலும், இன்னி சைப் பொலிவாலும், பொழுதினாலும் மக்கள் முயற்சியினாலும் ஆகும் மாறுதல்களுக்குட்படாமையினாலும், இன்னும் பிறவாற் றானும், தமிழ்மறையின் பெருமை, இன்னோரன்ன பொருந்தாத ஆரியமறையினன்றி ஏனையமறையினுஞ் சொல்லவும் பெரிதே யென்பதும், இதனால் பல்லாற்றானும் பரந்து நோக்கினும் 'தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வென்று' ‡ வாகை சூடிய தென்பதுமேயாம்.

(தொடரும்)

‡ பெரியபுராணம்-திருஞானசம்பந்த நாயனார் புராணம் 24